# தமிழ்ப் பெருமாட்டி

மலர் II. | 1935 JUNE—ஜூன் மீ | இதழ் 2.



18 JUL 1935
MADRAS

வடுவூர் கெ. துரைஸ்வாமி ஐயங்கார் B.A.,

## முதலாவது ஆண்டின் சஞ்சிகைகள்

முதலாவது ஆண்டில் வெளியான பகுதிகள் அடியில் வருமாறு புஸ்தக ரூபமாய் பைண்டு செய்யப் பெற்றிருக்கின்றன.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நாவல்-புஷ்பாங்கி அல்லது திடும்பிரவேச மகா ஜாலப் பரதேசியர் 1, 2 பாகங்கள் ... | 3 | 8 | 0 |
| சமய விளக்கம் ... ... ... | 0 | 8 | 0 |
| விக்ஞான் வினவிடை ... ... ... | 0 | 8 | 0 |
| தேக தத்துவ சாஸ்திரம் ... ... | 0 | 8 | 0 |
| ஆகமொத்தம் | 5 | 0 | 0 |

எல்லாவற்றிற்கும் ஆர்டர் செய்தால், தபாற் செலவு இல்லாமல், ரூ. 5-க்கு எல்லா புஸ்தகங்களும் அனுப்பப்படும். ஒன்றை அல்லது சிலவற்றை மாத்திரம் வாங்கினல், தபாற் செலவு சேரும்.

இரண்டாவது ஆண்டில் புதிதாய் சந்தாதாரராய்ச் சேருவோருக்கு இவையாவும் ரூ. 3-8-0க்கு தபாற் செலவின்றி அனுப்பப்படும். ஏற்கனவே இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்பிவிட்டவர்கள் ரூ. 3-8-0 மணியார்டர் செய்வது போதுமானது. இனிமேல் சேருவோர் இரண்டு வருஷங்களுக்கும் சேர விரும்பினல் ரூ. 5-8-0 மணியார்டர் செய்யவேண்டும்.

## இனம் புஸ்தகம்

இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்புவோர், சந்தாத் தொகையோடு 8 அணு சேர்த்தனுப்பினல், ரூ. 1–8–0 விலை பெற்றதும், காலிகோ பைண்டு செய்ததும், இந்நூலாசிரியரால் எழுதப் பெற்றதுமான இங்கிலாந்து தேச சரித்திரமொன்று இனமாய் அனுப்பப்படும். நேரில் பணம் செலுத்துவோர் 4 அணு கொடுப்பது போதுமானது.

இந்த இனம் புஸ்தகம் 1935ஹூ ஜூன் மாதம் 30உ வரையில் சேருவோருக்கு மாத்திரமே கொடுக்கப்படும்.

ஏற்கனவே ரூ. 2 அனுப்பிவிட்டவர்கள் 8 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பினல், அல்லது, நேரில் 4 அணு செலுத்தினல், இந்த இனம் புஸ்தகம் கிடைக்கும்.

OFFICE OF ... REGISTRAR OF BOOKS
13 JUL 1935
MADRAS

## அத்தியாயம்—3

### குரங்கசாமிக் கோமாளியும் லங்கா தகனமும்

போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராவ்ஸாகிப் சமய சஞ்சீவி ஐயர் சுயமரணபுரத்தில் ஐரோப்பியப் பிரயாணிகளின் உபயோகத்திற்காக அமைக்கப்பட்டிருந்த விசாலமான ஒரு பங்களாவில் முகாம் செய்திருந்தார். அவர் எங்கே சென்றாலும், தமக்கு உதவியாக இரண்டு டிப்டி சூபரின்டென்டெண்டுகளை அழைத்துக் கொண்டு போவது வழக்கம். இருவரில் ஒருவருடைய பெயர் விநாயகம் பிள்ளை; இன்னொருவருடைய பெயர் பராங்குச முதலியார்; இருவரும் மிக தீக்ஷண்யமான புத்திசாலிகளாதலால், சமய சஞ்சீவி ஐயர் வேண்டுமென்றே அவர்கள் இருவரையும் தமக்கு உதவியாக அழைத்துக் கொண்டு சென்றார். அவர்கள் இருவரும் சமய சஞ்சீவி ஐயரைப் போலவே எல்லா விஷயங்களிலும் புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் அவரைப் போலவே நடித்தனராதலால், அவர்களுடைய குணாதிசயங்கள் ராவ் சாயப் ஐயருக்கு நிரம்பவும் உகந்தவையா யிருந்தமையால், அவர் எந்த விஷயமானாலும் ஷ இரண்டு தனிச் சுடர்களையும் கலக்காமலும் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்காமலும் இருக்கமாட்டார். ஆகவே, அவர்கள் இருவரும் ஐயருக்கு இரண்டு பக்கங்களிலும், இரண்டு பட்டாக் கத்திகள் போலிருந்து, ஐயர் ஓரடி பாய்ந்தால், ஒன்பதடி பாய்வார்கள்.

நாம் ஏற்கனவே கூறியபடி, டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவிக்கு எப்போதும் வெள்ளைக்காரர்களே நியமிக்கப்படுவது வழக்கமாதலால், அவர்கள் வந்து முகாம் செய்தால், அந்த ஊரைச்சேர்ந்த போலீஸ் ஸ்டேஷன்களின் மேலதிகாரிகள் முதல் ஜெவான்கள் வரையிலுள்ள போலீஸார் ஒவ்வொருவரும் வருஷாந்தத் திருவிழாவில் கருடசேவை, ரிஷபவாகன சேவை, தேர் முதலிய முக்கியமான தினங்களில் ஸ்வாமி தரிசனத்திற்குப் போவது போல, வந்து வந்து துரையைப் பார்த்துத் தமது வணக்கத்தைத் தெரிவித்துவிட்டுப் போவார்கள். துரையினுடைய பங்களாமுழுதும் பழங்களாலும்,

இதர சமான்களாலும் நிறைந்து போகும். பட்லர் முதலிய சுற்றுக் கோவில் தெய்வங்களின் சட்டைப் பைகள் பணத்தினல் பூரித்துப் புடைத்துப் போய்விடும்.

ஆனல் ராவ்சாகிப் ஐயருடைய தர்பாரில், முக்கியமான அதிகாரிகள் மாத்திரமே அவரிடம் வரவேண்டும்; அவர்கள் வந்தாலும் வெறுங்கையோடுதான் வரவேண்டும். எவரேனும் தப்பித் தவறி இரண்டொரு எலுமிச்சம் பழங்களைக் கொணர்ந்துவிட்டாலோ, வெளியில் காவலிருக்கும் ஆர்டர்லிகள் மிகபயங்கரமான பேய்களையும் பூதங்களையும் கண்டு அஞ்சுகிறவர்கள் போல் பயந்து நடுங்கி, ஷை எலுமிச்சம் பழங்களை அவசர அவசரமாகப் பிடுங்கி குப்பைத் தொட்டி முதலிய மறைவான இடங்களில் எறிந்துவிட்டு, கைகளைத் துடைத்துக்கொண்டு வந்து நிற்பார்கள்; அவ்வாறு எலுமிச்சம் பழங்களைக் கொண்டு வந்தவர்களை அதன் பிறகு எங்கே கண்டாலும் கடுகடுத்த முகத்தோடு சீறிவிழுவார்கள். அழுகல் பழத்தோடிருக்கும் மற்ற பழங்களும் அழுகிப் போவதும், ஆரோக்கியமான பழத்தோடிருப்பவை ஆரோக்கியமா யிருப்பதும் வழக்கமாதலால், அதே போல, துரைகளின் கீழிருந்த சிப்பந்திகள் அவர்களுக் கொத்தபடியும், சமயசஞ்சீவி ஐயருக்குக் கீழிருந்தவர்கள் அவருடைய குணாதிசயங்களுக்கு ஒத்தபடியும் நடந்து கொண்டனர். நாம் முன்னிரண்டு அத்தியாயங்களிலும் விவரித்த சம்பவங்கள நிகழ்ந்த தினத்திற்கு அடுத்த நாட் காலை சுமார் எட்டுமணிக்கு ராவ்சாகிப் ஐயர் பளபளப்பான ஜரிகைப் பட்டிகள் தைக்கப்பெற்ற உடுப்புகளை அணிந்து உயர்வான பெரிய ஆசனத்தில் மிக கபபீரமாக அமர்ந்திருந்தார். அவருக்கு இரண்டு பக்கங்களிலும் அவருடைய சங்குசக்கர ஆயுதங்களான விநாயகம் பிள்ளையும் பராங்குச முதலியாரும் நின்றுகொண்டிருந்தனா. அவர்கள் இருவரும் முப்பது வயதிற்கு மேற்படாத பருவத்தினராதலால், இருவரும் தளதளப்பான தோற்றமுடையவர்களாய்க் காணப்பட்டனர்.

சமய சஞ்சீவி ஐயருக்கு வலது பக்கத்தில் ஒரு நாற்காலியில் சுயமரணபுரம் ஜில்லா சூபரின்டென்டெண்ட் துரை உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னல் அவருடைய வானர சைனியங்களான சுமார் ஐந்தாறு உத்தியோகஸ்தர்கள் வணக்க வொடுக்கமாக நின்றுகொண் டிருந்தனர். அவர்களில் ஒருவர் டிப்டி சூபரின்டென்டெண்ட் ஆராவமுதையங்கார் என்பவர். இன்னொருவர்

ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பை; அவர்களைத் தவிர, இரண்டு தலைமை ஜெவான்களும், இரண்டுசாதாரண ஜெவான்களும் நின்றனர். இவர்கள் தம் தம் உத்தியோக உயர்வு தணிவுக் கிரமத்திற்குத் தக்கபடி சூபரின்டென்டெண்ட் துரைக்குப் பின்னால் நின்றனர். அதாவது, டிப்டி சூபரின்டென்டெண்ட் ஆராவமுதையங்கார் சூபரின்டென்டெண்ட் துரைக்குப் பின்னால் பக்கத்தில் நின்றார். அவருக்கு சுமார் இரண்டு கஜ தூரத்திற்குப் பின்னால் ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பை நின்றார். அவருக்குப் பின்னால் சுமார் பதினைந்தடி தூரத்தில் மற்ற சிப்பந்திகள் நின்றனர். எல்லோரும் கப்சிப் என்று தமது ஐம்புலன்களையும், உடம்பையும், கை கால்களையும் நெருக்கி அடக்கி வொடுக்கிக் கொண்டு பயபக்தி விநயமாக நின்றனர்.

அப்போது அடியில் வரும் சம்பாஷணை நடைபெற்றது. அந்தக் கும்பலில் நடுநாயகமாய் விளங்கிய ராவ்சாயப் ஐயர், அத்தி பூப்பதுபோல, நெடுநேரத்திற்கொருதரம் ஒரு வார்த்தை, அரை வார்த்தை முத்தும் மணியுமாய்ப் பேசினார். முக்கியமாய் ஜில்லா சூபரின்டென்டென்ட் துரையான மிஸ்டர் லவ்லக்கும்,ஐயருடைய இரண்டு பட்டாக்கத்திகளான பிள்ளையும் முதலியாருமே சம்பாஷித்தனர். இடையிடையில் அவர்கள் கேட்ட சந்தேகங்களுக்கு, ஆராவமுதையங்காரும், நாகூர் மீரா லெப்பையும் உத்தரம் கூறினர். இனி நாம், அவர்கள் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினார்களென்பதை கவனிப்போம்.

விநாயகம் பிள்ளை :—நேற்று ஓர் இரவிற்குள் இந்த ஊரில் எத்தனை வேடிக்கைகள் நடந்திருக்கின்றன! இது ஆச்சரியமாய்த்தானிருக்கிறது.

பராங்குச முதலியார் :—(புன்னகை செய்தபடி) நாம் இன்று வந்து முகாம் செய்யப்போகிறோமென்பதைத் தெரிந்து கொண்டு, இதில் சம்பந்தப்பட்டவர்கள் நம் மூளைக்கு சரியான வேலை வைத்திருக்கிறார்கள்.

சமயசஞ்சீவி ஐயர்:-நான் இதுவரையில்எத்தனையோ இடங்களில் உத்தியோகம்பார்த்திருக்கிறேன்.ஒருஸப்-இன்ஸ்பெக்டர்இன்னொரு ஸப்-இன்ஸ்பெக்டரைக் கொன்றதாகக் கேள்விப்பட்டதே இல்லை. அதுவுமல்லாமல், போலீஸாரோடு வந்த ஸப்-இன்ஸ்பெக்டர் ஓடிப்

போனதாகக் கேட்பதும் என் அநுபவத்தில் இதுவே முதல்தடவை; நம்முடைய இலாகாவைச் சேர்ந்தவர்கள் இப்படி வெட்கக்கேடாக நடந்து கொண்டார்கள் என்பதைக் கேட்க, அவமானத்தினுல் என் உடம்பு குன்றிப்போகிறது. நான் இந்த ஊருக்கு ஏன் வந்தேன் என்றுகூட என் மனம் எண்ணிக் கிலேசமடைகிறது—என்ருர். ராவ் சாகிப் சமயசஞ்சீவி ஐயர் அர்த்தமற்ற வார்த்தையை எந்த சமயத்திலும் சொல்வதே வழக்கமில்லையாதலால், அவர் அவ்வாறு பேசியது, சுயமரணபுரம் போலீஸார் அனைவருக்கும் தலைச்சீட்டைக் கிழித்து விட்டதுபோல் இருந்தது. அங்கிருந்த ஜில்லா சூபரின்டென்டென்டும் மற்றவர்களும் அவருடைய ஒவ்வொரு சொல்லும் ஆயிரம் ஈட்டிகள்போல் தங்களைக் குத்துவதாக உணர்ந்து சிரத்தைக் கீழே கவிழ்த்துக் கொண்டனர். ஆயினும் ஜில்லா தலைமை அதிகாரி வெள்ளைக்காரராதலால், அவர் துணிபடைந்து, "ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர் இன்னொருவரைக் கொன்றிருப்பார் என்னும் விஷயம் என் மனதிற்கு இன்னம் நம்பிக்கைப்படவில்லை. எங்களுக்கும் இந்த விஷயம் நிரம்பவும் அவமானமாய்த்தா னிருக்கிறது" என்ருர்.

விநாயகம் பிள்ளை :—மிஸ்டர் சுப்பையா, மிஸ்டர் நாராயண சாமியைக் கொல்லாதிருந்தால், அவர் எதற்காகத் தப்பி ஓடிப்போக வேண்டும்!

பராங்குச முதலியார்:—மிஸ்டர் லெப்பையாரே, அவர்கள் இருவருக்கும் பகைமை ஏதாவது இருக்குமோ?

நாகூர் மீரா லெப்பை :— இதுவரையில் நான் அவர்களோடு பழகிய வரையில், அவர்கள் ஒருவருக் கொருவர் விரோதம் பாராட்டியதை நான் காணவில்லை.

ஜில்லா துரை:—(நாகூர் மீரா லெப்பையை நோக்கி) நேற்றிரவு நீரும் முற்றிலும் அஜாக்கிரதையாகத்தான் நடந்துகொண்டிருக்கிறீர்! கொலைக் குற்றம் சுமத்தப்பெற்றவர் உம்மைப்போல் ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர்; அவரை இரண்டு ஜெவான்களிடம் ஒப்படைப்பதென்பது முதலில் கௌரதைக் குறைவான விஷயம். அதுவன்றி, அந்த ஸப்-இன்ஸ்பெக்டருடைய தாக்ஷண்யத்திற்குஷெ ஜெவான்கள் கட்டுப்பட்டவர்கள். அவர்கள் அவரை வேண்டுமென்றே போகச் சொல்லிவிட்டு அவர் தங்களை ஏமாற்றிவிட்டு, ஓட்டலின் பின்புறத்தால் போய்விட்டதாக மாற்றிச் சொல்லுகிருர்களோ என்னவோ.

நாகூர் மீரா லெப்பை :—நானே அவரை அழைத்து வந்து ஜாக்கிரதைப் படுத்தவேண்டுமென்றுதான் நினைத்தேன். அதற்குள் ஒரு ஜெவான் டெலிபோன் மூலம் என்னைக் கூப்பிட்டு, என்ன வேலையிருந்தாலும் நிறுத்திவிட்டு உடனே பங்களாவிற்கு வரும்படி துரைகள் அழைத்ததாகச் சொன்னான். அதற்கு அவன் சொன்ன காரணங்களைக் கேட்டவுடன் என் மனம் குழம்பிப் போய் விட்டது. முக்கியமான இரண்டு காரியங்களையும் கவனிக்கும்படி ஜெவான்களிடம் திட்டம் செய்துவிட்டு நான் உடனே புறப்பட்டு உங்களிடம் வந்தேன்.

விநாயகம் பிள்ளை :—என்ன காரணங்களை அவன் சொன்னான்?

நாகூர் மீரா லெப்பை:—துரையுடைய மோட்டார் வண்டி பகலிலிருந்து காணப்படவில்லை யென்பது ஒரு காரணம். வேலூரிலிருந்து பெரிய எஜமான் வரப்போவதால், அவர் இறங்குவதற்கு ஜாகை தயார்ப்படுத்த வேண்டுமென்பது இரண்டாவது காரணம்.

சமயசஞ்சீவி ஐயர் :—ஒருவரை அவசரமாக அழைக்கவேண்டுமானால், எந்தக் காரிய மிருந்தாலும் நிறுத்திவிட்டு வரவேண்டுமென்று சொல்வது சர்வசாதாரணமான வழக்கம். அதன்படி அந்த ஜெவான் சொல்லி இருக்கலாம். நீங்கள் ஒரு கொலைக் கேஸைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கையில், அவசியமாய்ச் செய்ய வேண்டியதை யெல்லாம் செய்துவிட்டல்லவா வரவேண்டும். இந்த மாதிரி நான் ஒரு முக்கியமான கொலைக் கேஸைப் பரிசீலனைசெய்து கொண்டிருக்கிறேன், இன்னம் அரைமணியில் வருகிறேன் என்று நீங்கள் மறுமொழி கொடுத்தால், துரை அதற்காக உங்கள்மேல் கோபம் கொள்வாரா? நீங்கள் அந்த சுப்பையாவை நேரில் அழைத்து வந்து துரையிடம் ஒப்புவித்து விஷயத்தைச் சொல்லக் கடமைப் பட்டவர்கள். நீங்கள் உடனே அவசரமாய்ப் புறப்பட்டு வந்தால் கூட அவரையும் உப்மோடு அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே!

நாகூர் மீரா லெப்பை :— (சிரம்பவும் பணிவாகப் பேசத் தொடங்கி) நான் அப்படித்தான் செய்திருக்கவேண்டும். தவறி விட்டதைப் பற்றி வருந்துகிறேன். என்னைப் போன்ற பதவியிலிருக்கும் கண்ணியமான ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர் இவ்வளவு கேவலமாக நடந்துகொள்வா ரென்று நான் நினைக்கவே இல்லை.

சமயசஞ்சீவி ஐயர் :—அவர் கொலை செய்துவிட்டதாக அவர் மேல் புகார் வந்திருக்கையால், அவர் கண்ணியமான மனிதர் என்றும்,

அவர் ஓடமாட்டாரென்றும் எண்ணலாமோ! நீங்கள் செய்தது பெரிய தவறு. இதை நான் கவனத்தில் வைத்துக் கொள்ளுகிறேன். ஒரு போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரை இன்னொரு போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் கொல்வது, ஜெவான்களோடு வந்த ஸப்-இன்ஸ்பெக்டர் அவர்களை ஏமாற்றிவிட்டு ஓடுவது, ஜில்லா போலீஸ் அதிகாரியின் மோட்டார் வண்டி பட்டப்பகலில் திருடப்படுவது ஆகிய சம்பவங்களெல்லாம் உங்கள் தர்பாரை நிரம்பவும் சோபிக்கச் செய்யும் மேலான காரியங்களாயிருக்கின்றன.

ஜில்லா துரை:—சுப்பையா ஓடிப்போனது சம்பந்தமாக நீங்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டீர்கள்?

நாகூர் மீரா லெப்பை :—மிஸ்டர் சுப்பையாவின் அங்க மச்ச அடையாளங்களை எல்லா ஸ்டேஷன்களுக்கும் தெரிவித்திருக்கிறேன். அவர் எங்கே அகப்பட்டாலும் உடனே பிடித்துக் கொண்டு வந்து ஆஜர் செய்யும்படி ஒவ்வொரு ஜெவானுக்கும் சொல்லி திட்டப்படுத்தி யிருக்கிறேன்.

விநாயகம் பிள்ளை:—அது அவ்வளவு நல்ல பலனைக் கொடுக்கவா போகிறது! வேண்டுமென்றே ஓடி மறைந்திருப்பவர் ஜெவான்கள் பிடித்துக் கொள்ளும்படி அஜாக்கிரதையாய் வெளியில் வருவாரா?

பராங்குச முதலியார் :—அவரும் ஸப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்ப்பவர். ஒரு கைதி மறைந்துகொண்டால் போலீஸ் அதிகாரி அவரைப் பிடிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார் என்பது அவருக்கும் தெரிந்திருக்குமல்லவா.

சமயசஞ்சீவி ஐயர் :—இந்தக் கொலையில் ஏதாவது மர்மம் அடங்கி யிருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். இந்த சுப்பையா தாம் தப்பி ஒளிந்துகொண் டிருக்கவேண்டு மென்னும் கருத்தோடு ஓடியிருப்பாரென்று நான் நினைக்கவில்லை. ஏதோ ஒரு முக்கியமான காரணத்தைக் கருதியே அவர் ஜெவான்களுடைய வசத்திலிருந்து தப்பிப் போயிருக்கிறார்; கூடிய விரைவில் நமக்கு அவரிடமிருந்து செய்தி வரலாம். (ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி) நீங்கள் இந்த ஸ்டேஷனில் எவ்வளவு காலமாய் உத்தியோகம் பார்க்கிறீர்கள்?

நாகூர் மீரா லெப்பை:—மூன்றுமாத காலமாய் உத்தியோகம் பார்க்கிறேன்.

விநாயகம் பிள்ளை :—(சமயசஞ்சீவி ஐயரை நோக்கி) நேற்று நீங்கள் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்டீர்களே. சென்ற மூன்று மாத காலத்தில் இந்த சுயமரணபுரத்தின் கேஸ் கணக்குகளில், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாததால், வாபஸ் பெற்றுக் கொண்ட வழக்குகளின் தொகை, அதற்கு முந்திய மூன்று மாத காலத்தில் இருந்ததைவிட இரட்டிப்பாய் இருந்ததைக் கண்டு, நீங்கள் அதைப்பற்றி ஆச்சரியமாய்க் கேட்டீர்களே !

சமயசஞ்சீவி ஐயர் :—(ஜில்லா துரையை நோக்கி) அந்தப் புள்ளியை நீங்கள் கவனித்தீர்களா? குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத கேஸ்கள் இரட்டிப்பாய்ப் பெருகிப்போனது இந்த ஸப்-இன்ஸ்பெக்டருடைய காலத்தில்தானே ! அது எதனுல் என்பதைத் தெரிந்துகொண்டீர்களா? இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் திறமையில்லாதவர் என்பது அதற்கு அர்த்தமா? அல்லது, அதற்கு வேறு காரணம் உண்டா ?

ஜில்லா துரை :—இவருக்கு முன்னுல் இருந்த ஸப்-இன்ஸ்பெக்டர் ரஜாவில் போயிருக்கிறுர். தற்காலிகமாய் இந்த சாயப்பு நியமிக்கப்பட்டிருக்கிறுர். இவர் ஸாதுவான சுபாவமுடையவர்! துணிந்து கண்டவர்களையும் பிடித்துகுற்றங்களில் சம்பந்தப்படுத்த இவருடைய மனசாட்சி இடங் கொடுக்கிறதில்லை. அதனுல் இவர் நிதானமாய் நடந்து கொள்ளுகிறுர்.

சமயசஞ்சீவி ஐயர் :—அப்படியானுல் மற்ற ஸப்-இன்ஸ்பெக்டர்கள் மனசாட்சிக்கு விரோதமாய் நடந்து கொள்ளுகிறுர்களா! குற்றமற்றவர்களை யெல்லாம் குற்றவாளிக ளாக்குகிறுர்களா ! நீங்கள் பேசுவது ஆச்சரியமாயிருக்கிறது. குற்றவாளி இன்னுர், குற்றமற்றவர் இன்னுர் என்பதை சுலபத்தில் கண்டுபிடிக்கும் திறமை இவரிடம் இல்லையென்றே நாம் கருதவேண்டும்.

ஜில்லா துரை :— அதை நான் கவனித்து ஆகவேண்டியதற்கு உங்களுக்கு எழுதுகிறேன்.

சமயசஞ்சீவி ஐயர் :—சரி; ஓடிப்போன சுப்பையா விஷயம் இருக்கட்டும். நேற்றிரவு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்ட ஸப்-இன்ஸ்பெக்டர் நாராயணசாமி உயிரோடிருக்கிறுரா, இறந்துபோய் விட்டாரா என்பது தெரிந்ததா? டெலிபோன்மூலம் ஆஸ்பத்திரியில் விசாரியுங்கள்—என்றுர்.

உடனே டிப்டி சூப்ரின்டென்ட் ஆராவமுதையங்கார் டெலி போனண்டை போய் ஆஸ்பத்திரியில் இருந்த ஸர்ஜனைக் கூப்பிட்டார். அங்கே இருந்த இரண்டாவது ஸர்ஜன், "யார் நீங்கள் ?" என்றார்.

ஆராவமுதையங்கார் :—நான் போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் முகாம் செய்திருக்கும் பங்களாவிலிருந்து பேசுகிறேன். நான் டிப்டி சூபரின்டென்டெண்ட் ஆராவமுதையங்கார். நீங்கள் யார் ?

இரண்டாவது ஸர்ஜன் :—நான் இரண்டாவது ஸர்ஜன். உங்களுக்கு என்ன வேண்டும் ?

ஆராவமுதையங்கார் :—நேற்று மாலையில் வக்கீல் வயத்து நாதையருடைய வீட்டிற்கு நீங்கள்தானே வந்து ஸப்-இன்ஸ்பெக்டர் நாராயணசாமியைப் பரீட்சித்தீர்கள்?

இரண்டாவது ஸர்ஜன் :—ஆம். நான் தான் வந்தேன்.

ஆராவமுதையங்கார்:—அவருடைய நிலைமை இப்போது எப்படி இருக்கிறது ? அவர் பிழைத்துக் கொள்வாரல்லவா ?

இரண்டாவது ஸர்ஜன் :—எவருடைய நிலைமையைப் பற்றிக் கேட்கிறீர்கள் ?

ஆராவமுதையங்கார் :—ஸப் - இன்ஸ்பெக்டர் நாராயணசாமியைப் பற்றித்தான் கேட்கிறேன்.

இரண்டாவது ஸர்ஜன் :—நீங்கள் கேட்பது வேடிக்கையாயிருக்கிறதே ! அவரைப் பற்றி நானே உங்களிடம் கேட்க நினைத்தேன். நீங்கள் என்னிடம் கேட்கிறீர்களே ! அவர் இங்கே இல்லையே !

ஆராவமுதையங்கார் :—நீங்கள் சொல்வது ஆச்சரியமா யிருக்கிறதே ! நேற்று மாலையில், நீங்களும், நாகூர் மீரா லெப்பையும் வக்கீல் வீட்டிலிருந்து புறப்பட்டுப் போனவுடன் இரண்டு ஜெவான்கள் ஒரு வாடகை மோட்டார் வண்டியில் நாராயணசாமியையும், இரத்தக் கறை படிந்திருந்த வெல்வெட்டு மெத்தை, அம்பட்டன் கத்தி, தடி முதலியவைகளையும் வைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தார்களாமே !

இரண்டாவது ஸர்ஜன் :—அவர்கள் இங்கே வரவே இல்லையே. அவர்கள் வருவார்கள் என்று நான் நெடுநேரம் வரையில் எதிர் பார்த்துக் காத்திருந்தேன். நாராயணசாமி என்பவர் ஒரு வேளை இறந்துபோ யிருக்கலாமென்று நினைத்துக்கொண்டு நான் சும்மா இருந்துவிட்டேன்—என்றார்.

அவ்வளவோடு ஆராவமுதையங்கார் டெலிபோனை விட்டு வந்து ஜில்லா துரையுடைய காதில் தணிவாக விஷயத்தைக் கூறினார்.

அதைக் கேட்ட ஜில்லா துரையின் முகம் விகாரமாக மாறியது. அவர் அபாரமான வியப்போடு நாகூர் மீரா லெப்பையைப் பார்த்து, "என்ன மிஸ்டர் லெப்பை, முதலுக்கே மோசம் வந்து விட்டதே! நாராயணசாமி ஆஸ்பத்திரிக்கே போகவில்லையாமே!" என்றார்.

அதைக் கேட்ட நாகூர் மீரா லெப்பை திடுக்கிட்டு அபாரமான திகில் கொண்டவராய்த் திருட்டு விழி விழித்து, "என்ன ஆச்சரியம்! ஸர்ஜனுக் கெதிரில்தானே நான் இரண்டு ஜெவான்களுக்கு உத்தரவு கொடுத்தேன். அவர்கள் ஒரு வாடகை மோட்டார் வண்டியை அமர்த்தி, அதில் நாராயணசாமியையும், மெத்தை முதலிய சாமான்களையும் வைத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனதாக மற்ற ஜெவான்கள் சொன்னார்களே!" என்றார்.

அவர்கள் பேசியதிலிருந்து சமய சஞ்சீவி ஐயரும், அவருடைய டிப்டிகள் இருவரும் விஷயத்தை கிரகித்துக்கொண்டு வியப்பும் திகைப்பும் தோற்றுவித்தனர்.

சமய சஞ்சீவி ஐயர் :—(ஜில்லா துரையைப் பார்த்து) அதற்காக உத்தரவிடப் பெற்ற ஜெவான்கள் இன்னின்னார் என்பது தெரியுமல்லவா! அவர்கள் ஸ்டேஷனில் இருக்கிறார்களா என்று விசாரியுங்கள்—என்றார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பை டெலிபோனண்டை போய்த் தமது ஸ்டேஷன் ரைட்டருடன் பேசிவிட்டு வந்து, "அந்த ஜெவான்கள் இருவரும் நேற்று இரவு முதல் ஸ்டேஷனுக்கு வரவே இல்லையாம்." என்றார்.

அவர் கூறியது எல்லோருடைய செவிகளிலும் பட்டதாகையால் சமய சஞ்சீவி ஐயர், "அடாடா! வேறு எந்தப் பட்டணத்திலும் காணாத அதிசயங்களை யெல்லாம் நாம் இந்த சுயமரண புரத்

தில் காணலாம்போல் இருக்கிறதே! நான் நல்ல சமயத்தில்தான் இந்த ஊருக்கு வந்தேன். முதலாவது ஸர்ஜனும், சுந்தரம் என்பவரும் சூபரின்டென்டென்ட் துரையின் மோட்டாரோடு காணப்பட்டதும், அவர்கள் சொன்ன விநோதச் செய்திகளும், முடிவில் ஜனங்களால் ஜெவான்களும் ஸர்ஜனும் சாக்கடைக் குழியில் தள்ளப் பட்டதும் ஒரு பக்கத்தில் ஆச்சரியத்தை உண்டாக்கியபடி இருக்கின்றன. இந்த வக்கீல் வீட்டில் நடந்த சம்பவங்களும், அதற்குப் பிறகு சுப்பையா தப்பி ஓடியதும், நாராயணசாமி ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்ததும் இன்னொரு பக்கத்தில் மனதை பிரமிக்கச் செய்கின்றன! இந்த சமயத்தில் நாகூர் மீரா லெப்பை ஸப்-இன்ஸ்பெக்டரா யிருக்கிறார். அவர் இந்த இடத்திற்குப் புதிய மனிதர். அவருக்கு உதவி செய்ய இப்போதே இன்னொரு ஸப்-இன்ஸ்பெக்டரை நியமியுங்கள். அதுவுமன்றி காணமல் போயிருக்கும் சுப்பையாவையும், நாராணசாமியையும், இரண்டு ஜெவான்களையும், அந்த சுந்தரத்தையும் கண்டுபிடிக்க வழி செய்யுங்கள்—என்றார்.

"நான் உடனே போய் எல்லா விஷயங்களையும் நேரில் கவனிக்கிறேன்" என்று கூறிவிட்டு, ஜில்லா போலீஸ் அதிகாரியான துரை விடைபெற்றுக் கொண்டு தமது பரிவாரங்களுடன் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்.

அதன் பிறகு அவ்விடத்தில் சமய சஞ்சீவி ஐயரும், அவருடைய டிப்டிகளான விநாயகம் பிள்ளையும், பராங்குச முதலியாரும் இருந்தனர். சுமார் கால் நாழிகைக்குப் பிறகு, அவர்கள் இருந்த இடத்திற்கு முன்பாகத் தாழ்வாரத்தில் யாரோ இரண்டு மனிதர்கள் வாக்குவாதம் நடத்தி சச்சரவு செய்த ஓசை யுண்டாயிற்று.

ஒரு மனிதர் "அடெ கொஞ்சம் சும்மா இரப்பா; நான் அவசரமாய் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலைப் பார்க்க வேண்டும். அவரைப் பார்த்து அவருடன் ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்து விடுகிறேன். அதற்குமேல் நீ தாமதிக்காமல் என்னை உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகலாம்" என்றார்.

ஒரு ஜெவான், "என்ன காரியமாய் நீங்கள் எஜமானைப் பார்க்க வேண்டு மென்பதைச் சொன்னல், உள்ளே போய்ச்சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு வந்து உள்ளே விடுகிறேன். இல்லாவிட்டால், உங்களை நான் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் ஒப்புவிக்க வேண்டும்." என்றான்.

முதலில் பேசியவர், "அந்தக் காரியத்தை நான் உன்னிடம் சொன்னால், அது உனக்கு விளங்காது. நான் உள்ளே போனால், எஜமான் கோபிக்க மாட்டார்கள். நீ கொஞ்சம் பொறப்பா! நானும் உங்கள் இலாகா மனிதன்; அன்னியனல்ல" என்றார்.

ஜெவான், "உதவலே உதவாது. எஜமானிடம் சொல்லாமல் உங்களை உள்ளே விட்டால், என் வேலை போய்விடும். என் வேலை போனால், என் பெண்டு பிள்ளைகளுக்கு நீங்கள் சாப்பாடு போட்டுக் காப்பாற்றுவீர்களா?" என்றான்.

அவர்கள் சம்பாஷித்தது உள்ளே இருந்த மூவருடைய செவி களிலும் நன்றாகப் பட்டதாகையால், வெளியில் வந்திருந்த மனிதர் யாரென்று தெரிந்து கொண்டு வரும்படியும், அவசியமானால் அவரை உள்ளே அழைத்துக்கொண்டு வரும்படியும் சமய சஞ்சீவி ஐயர் பராங்குச முதலியாரை ஏவ, அவர் வெளியில் வந்தார். அப் போது வெளியில் இருந்த ஓர் ஆர்டர்லி, ஒரு மனிதருடைய இடுப் புத் துணியை கெட்டியாகப் பிடித்துக்கொண் டிருந்தது அவருடைய திருஷ்டியில் பட்டது.

பராங்குச முதலியார் ஜெவானை நோக்கி, "யாரப்பா அவர்? ஏன் அவரை அப்படிப் பிடித்துக்கொண் டிருக்கிறாய்?" என்றார்.

உடனே ஜெவான், "இவர் இரகஸியப் போலீஸ் இலாகா ஸப்-இன்ஸ்பெக்டர் சுப்பையா. நேற்று நடந்த ஒரு கொலை சம்பந்த மாய் இவரை இரண்டு ஜெவான்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனபோது, இவர் பசிக்கிறதென்று பாசாங்கு செய்து, ஐயருடைய ஓட்டலில் புகுந்து, பின் பக்கத் தால் வெளியில் ஓடிவிட்டார். இவர் இப்போது பதுங்கிப் பதுங்கித் திருடன் போல் விழித்துக் கொண்டு இங்கே வந்து உள்ளே நுழை யப் பார்த்தார். நான் பிடித்துக் கொண்டேன். பெரிய எஜமா னுடைய உத்தரவில்லாமல் உள்ளே விடமுடியா தென்று நான் சொல்லி, இவரை ஸ்டேஷனில் கொண்டு போய் ஒப்புவிப்பதற் காகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

பராங்குச முதலியார் "சரி; அவரை விடு. பெரிய எஜமா னைப் பார்க்க விரும்பினால், பார்க்கட்டும். அதற்குப் பிறகு நீ இவரைக் கொண்டுபோய் ஸ்டேஷனில் ஒப்புவிக்கலாம். அதுவரையில் இவர் தப்பி ஓடாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிரு" என்றார்.

உடனே ஆர்டர்லி அவரை விட்டுவிட்டு தூர விலகி நின்றான். பராங்குச முதலியார் சுப்பையாவை அழைத்துக்கொண்டு உள்ளே செல்ல, சுப்பையா ஆவேசம் கொண்டவர்போல் பாய்ந்து சமய சஞ்சீவி ஐயருக்கெதிரில் விழுந்து, அவருடைய இரண்டு கால்களை யும் பிடித்துக்கொண்டு 'கோ'வென்று கதறி யழத் தொடங்கினர். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் ஆறுய்ப் பொங்கி வழிகிறது. அவர் பேசமாட்டாமல் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுகிறார்.

திடீரென்று ஒரு மனிதர் அப்படி வந்து விழுந்து அழுததைக் கண்ட சமய சஞ்சீவி ஐயர் திகைத்துப்போன ராணுலும், அவ ருடைய மனம் இரக்கங்கொண்டு இளகிப்போயிற்று. அவருடைய கண்களும் கலங்கித் தோன்றின. அவர் பராங்குச முதலியாருடைய முகத்தைப் பார்க்க, பின்னவர் விஷயத்தை இரண்டொரு வார்த்தை களில் தெரிவித்தார்.

உடனே சமய சஞ்சீவி ஐயர், "சுப்பையாவா நீங்கள்! யாரோ வென்றல்லவா நினைத்துவிட்டேன்! காலை விடுங்கள்; எழுந்திருங் கள்; ஏன் இப்படிச் செய்யவேண்டும்? என்னிடம் ஏதாவது சொல்ல வேண்டுமானுல் சாதாரணமாகவே சொல்லிக்கொள்ளலாம்" என்றார்.

அதைக் கேட்ட சுப்பையாவுக்கு ஆவேச உணர்ச்சி பொங்கிப் போய்விட்டது. அவர் முன்னிலும் அதிகமாகக் கதறி யழுது, "ஐயோ, எஜமானே, நான் சுத்த நிரபராதி! அந்தக் கொலையை நான் செய்யவே இல்லை! பொறுப் பற்றவர்களுடைய பேச்சைக்கொண்டு என்னைக் கைதியாக்கி ஜெவான்களோடு அனுப் பினர்கள். அந்த அவமானத்தைப் பொறுக்க மாட்டாமல், நான் அவர்களிடத்திலிருந்து ஓடிப்போய்த் தற்கொலை செய்து கொள்ள முயன்றேன். என் சம்சாரம் தடுத்து, காலில் விழுந்து உண்மையைச் சொல்லும்படி அனுப்பினுள். இல்லாவிட்டால் இந்நேரம் நான் பிணமா யிருப்பேன்" என்று உளறிக் குளறிப் புலம்பினர். அவ் வாறு அவர் சலுகை சொல்லிக் கொண்டதில், அவருடைய அவ மான உணர்ச்சி அபாரமாய்ப் பொங்கிப் போகவே, அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் முன்னிலும் அதிகமாய்ப் பெருகி வழிந்தது.

அந்தக் காட்சி அங்கிருந்த மூவருடைய மனதையும் பெரிதும் இளக்கிவிட்ட தாகையால், அவர்கள் ஒருவரை யொருவர் பார்க்கா

மல் வெவ்வேறு திக்கில் பார்த்தனர். அவர் கூறியது உண்மையா யிருக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் சமய சஞ்சீவி ஐயருடைய மனதில் பட்டதாகையால், அவர் தாம் என்ன செய்வதென்பதை எண்ணியபடி இரண்டொரு நிமிஷகாலம் மௌனமா யிருந்தபின் பேசத்துடங்கி, “நீங்கள் முதலில் என் கால்களை விட்டுவிட்டு எழுந்து நின்றாலன்றி, நான் உங்களுக்கு எவ்வித நன்மையையும் செய்யப் போகிறதில்லை; உங்கள் முறையீட்டையும் கேட்கப் போகிறதுமில்லை” என்று கண்டித்துக் கூறவே, உடனே சுப்பையா அவருடைய கால்களை விட்டு எழுந்து நின்று, முதல் நாள் சிறைச்சாலையி லிருந்து விடப் பட்ட ஒருவரைத் தொடர்ந்து சென்றதையும், வக்கீல் வயத்துநா தையர்மீது தாம் சம்சயங்கொண்டு அவருடைய வீட்டிற்குப்போனது முதலிய வரலாற்றையும் எடுத்துக் கூறினார்.

அப்போதும் அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்த படி இருந்தது. அவர் கூறியதைக் கேட்ட சமய சஞ்சீவி ஐயர், “நீங்கள் வக்கீல் இல்லாத காலத்தில், அவருடைய சம்சாரத்தின் அநுமதியில்லாமல் உள்ளே போனது தப்பான காரியமல்லவா” என்றார்.

சுப்பையா:—வக்கீலும், அந்தக் கைதியும் அவசியம் உள்ளே இருப்பார்கள் என்று நம்பி நான் போய்விட்டேன். அப்படிச் செய் தது என்மேல் பிசகுதான்.

சமய சஞ்சீவி ஐயர்:—அதற்குப் பிறகு சரியாகவோ தப்பா கவோ உங்களை அந்தக் கொலையில் சம்பந்தப் படுத்தினார்கள். நீங்கள் ஜெவானுடன் வந்த காலத்தில் அவர்களை ஏமாற்றிவிட்டுப் போக லாமோ? நீங்களே போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரல்லவா; கீழ் ஜெவான்களுக்கு நீங்கள் நல்லொழுக்கம் கற்பிக்க வேண்டியவர்கள். நீங்களே அவர்களை ஏமாற்றிவிட்டு ஓடினால், அந்த நடத்தை போலீஸ் இலாகாவுக்கே மானக்கேடான செய்கையா யல்லவா இருக் கிறது. நீங்கள் கொலைக் குற்றத்தைச் செய்தீர்களோ இல்லையோ! இப்போது போலீஸாருடைய கண்காணிப்பிலிருந்து தப்பி ஓட முயன்ற குற்றம் உங்கள்மேல் நிச்சயமாகச் சுமரும்! அந்தக் குற்றத்தை நாங்கள் மன்னிக்கவே மாட்டோம்.

சுப்பையா:—(மறுபடி கதறி யழுது) எஜமானுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. கேவலமான கீழ்ப்பட்ட சிப்பந்திகளான

ஜெவான்களோடு குற்றவாளியின் நிலைமையில் போனது என்றால் சகிக்கமுடியாத அவமானமாயிருந்தது. நான் என் உயிரை விட்டுவிட வேண்டுமென்ற தீர்மானத்துடனேயே அவர்களிடமிருந்து தப்பிப் போனேன். என்னுடைய சம்சாரம் அதைத் தடுத்து உங்களிடம் அனுப்பினாள். நான் எங்கேயாவது போய் இறந்து விடுவேனோ வென்று பயந்து அவளும் வந்து இதோ ரஸ்தாவில் நிற்கிறாள்.

சமய சஞ்சீவி ஐயர்:—நீங்கள் என்னிடம் வரவேண்டிய காரண மென்ன? இதில் நான் செய்வதற்கு என்ன இருக்கிறது? ஸப்-இன்ஸ்பெக்டர் முதலியோர் அவர்களுடைய கடமையை ஒழுங்கா கவேதான் செய்திருக்கிறார்கள். அது சாயங்கால வேளைதானே. அப் போது ஜெவான்களோடு ஸ்டேஷனுக்குப் போனால், அதனால் என்ன அவமானம் வந்துவிடும். நீங்கள்தான் கொலை செய்தீர்கள் என்பதற்கு தக்க சாட்சிகள் இல்லாவிட்டால், உங்களை விட்டு, உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார்கள். அதற்குள் நீங்கள் அவசரப்பட்டுக்கொண்டு ஏன் ஓடவேண்டும். நீங்கள் ஸ்டேஷ னுக்குப் போய் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் ஆஜராய் விஷயத்தைச் சொல்லுங்கள். அவர் காரியங்களை ஒழுங்காகவே நடத்துவார்.

சுப்பையா:—என்னை ஜாமீனில் விடும்படி எஜமான் உத்தரவு கொடுக்கவேண்டும். என்னை விட்டால், இந்தக் கொலையில் சம்பந் தப்பட்ட குற்றவாளியை நானே கண்டுபிடித்து தண்டனைக்குக் கொண்டு வருகிறேன்.

சமய சஞ்சீவி ஐயர்:—இதை ஜில்லா அதிகாரியிடம் சொல்லிக் கொள்ளுங்கள். அவர் ஆகவேண்டியதை அவசியம் செய்வார்— என்றார்.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்திருந்த காலத்தில் ஜில்லா துரையும், நாகூர் மீரா லெப்பையும் இரண்டு ஜெவான்களோடு அங்கே வந்துசேர்ந்தனர். சேர்ந்தவர்கள், சமய சஞ்சீவி ஐயருக் கெதிரில் சுப்பையா நின்றதைக் கண்டு திடுக்கிட்டுத் திகைத்துப் போயினர். "இவர் எங்கிருந்து இங்கே வந்து சேர்ந்தார்?" என்று ஜில்லா துரை வியப்போடு வினவ, அருகில் நின்ற பராங்குச முதலி யார் விஷயத்தை சுருக்கமாகக் கூறினார்.

அதைக் கேட்ட ஜில்லா துரை, "சுத்த அசட்டு மனிதரா யிருக்கிறீரே! முன் யோசனை கொஞ்சமும் இல்லாமல் இப்படி அவ

சரப்பட்டு ஒவ்வொரு விஷயத்தையும் செய்கிற மனிதர் இரகஸியப் போலீஸ் உத்தியோகம் எப்படிப் பார்க்கப் போகிறார்!" என்று கூறி விட்டு சமய சஞ்சீவி ஐயரை நோக்கி, "இதோ வந்திருக்கும் ஜெவான்கள் இருவருமே பிரக்ஞைபற்றுக் கிடந்த மிஸ்டர் நாராயண சாமியை மோட்டார் வண்டியில் வைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக் குப் போனவர்கள்" என்றார்.

சமய சஞ்சீவி ஐயர்:—(வியப்போடு) ஓகோ! அப்படியா! மிஸ்டர் நாராயணசாமியை இவர்கள் எங்கே கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்?

ஜில்லா துரை:—வக்கீல் வீட்டிற்குக் கொஞ்சதூரத்தில் அந்த மோட்டார் வண்டி நின்றதாம். வாடகைக்கு வருமா என்று, இவர் கள் கேட்டார்களாம். மோட்டார் ஓட்டி வரும் என்றானாம். இவர் கள் நாராயணசாமியையும், மெத்தை முதலிய பொருள்களையும் வைத்துவிட்டு உள்ளே உட்கார்ந்து கொண்டார்களாம். வண்டிக்கா ரன் வண்டியை ஓட்டப்போன சமயத்தில், ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஆம்புலென்ஸ் மோட்டார் வண்டியொன்று அங்கே வந்ததாம். அதி லிருந்த மோட்டார் ஓட்டி, "ஸர்ஜன் அதை அனுப்பியதாகவும், நாராயணசாமியையும், மற்ற சாமான்களையும் அதில் வைத்துக் கொண்டு வரும்படி ஸர்ஜன் உத்தரவிட்டதாகவும் சொன்னானாம். ஜெவான்கள் அப்படியே செய்து, தாங்களும் வண்டிக்குள் உட் கார்ந்துகொண்டார்களாம். வண்டி புறப்பட்டு ஓடியதாம். அது ஆஸ்பத்திரிக்குப் போகாமல் பல வீதிகளைக் கடந்து ஊருக்கு வெளி யில் போய் மேலும் ஓடத் தொடங்கியதாம். ஜெவான்கள் ஆச்சரிய மடைந்து, வண்டியை நிறுத்தும்படி சொன்னார்களாம். வண்டி ஓட்டி அதைக் காதில் வாங்காமல் ஊருக்கு வெளியில் சுமார் இரண்டு மையில் தூரம் கொண்டுபோய் ஓர் ஆலமரத்தடியில் நிறுத்தினானாம். கோஷாப் பெண் பிள்ளைபோல் உடைதரித்திருந்தவர்கள் நான்கு பேர்கள் அங்கே நின்றார்களாம். வண்டி நின்றவுடன் ஜெவான்கள் கீழே இறங்கி, வண்டியை ஆஸ்பத்திரிக்கு ஓட்டாமல், அங்கே ஏன் கொண்டு வந்தாய் என்று வண்டியோட்டிடம் சச்சரவு செய்தார் களாம். அப்போது பின் பக்கத்தில் வந்த கோஷாக்கள் தடிகளால் ஜெவான்களை அடித்தார்களாம். இவர்கள் மயங்கிக் கீழே விழுந்து விட்டார்களாம். மறுபடி இவர்கள் இன்று காலையில்தான் விழித் துக்கொண்டு எழுந்தார்களாம். எழுந்தபோது, இவர்கள் ஒரு பாலத்தின் அடியில் கிடந்தார்களாம். அங்கிருந்து புறப்பட்டு

இவர்கள் இப்போதுதான் வந்து சேர்ந்து விவரங்களைச் சொன்னார்கள். உடனே நாங்கள் டெலிபோன் மூலம் ஆஸ்பத்திரியில் விசாரிக்க, ஆம்புலென்ஸ் வண்டிகள் எல்லாம் சரியாயிருக்கின்றன என்று சொல்லிவிட்டார்கள். இத்தனை குளறுபடிகளும் இந்த நாகூர் மீரா லெப்பையின் அஜாக்கிரதையினாலேயே உண்டாயின—என்றார்.

நாகூர் மீரா லெப்பை மறுமொழி கூறமாட்டாமல் விழிக்கத் தொடங்கினார்.

ஜில்லா துரை :—உம்முடைய அஜாக்கிரதையினாலேயே நாராயணசாமியை இப்படி யாரோ கொண்டுபோயிருக்கிறார்கள். இன்றைய மாலை வரையில் உமக்கு அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் நாராயணசாமியைக் கண்டுபிடித்துக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால், உம்மை வேலையிலிருந்து சஸ்பெண்டு செய்து விடுவேன்—என்றார். அதைக் கேட்கவே, நாகூர் மீரா லெப்பைக்கு நாடிகள் விழுந்துபோயின; அவர் "நான் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அவரைத் தேடிப் பிடிக்கிறது?" என்றார்.

ஜில்லா துரை :— ஸப் - இன்ஸ்பெக்டர் நாராயணசாமியை ஒளிப்பதால், யாருக்காவது அநுகூலம் உண்டா என்பதை யோசிப்பீரானால் உமக்கு வழி பிரியும்.

நாகூர் மீரா லெப்பை :— அவரை மறைப்பதால் அவரைக் கொன்றுபோட்டவருக்கே அநுகூலம் ஏற்படும்.

சுப்பையா :— நாராயணசாமியை யாரோ சில கோஷாக்கள் கொண்டு போயிருப்பதால், அவருக்கு சாயப்பு எவராவது விரோதியாகவோ, அல்லது, சிநேகிதர்களோ இருக்கவேண்டும்.

ஜில்லா துரை :—அந்த சாயப்பு இன்னார் என்பதை நீர்தான் கண்டுபிடியுமேன் ?

சுப்பையா :—என்னை ஜாமீனில் விட்டால், நான் இரண்டே தினங்களுக்குள் அவசியம் கண்டுபிடிப்பேன்.

சமய சஞ்சீவி ஐயர் :— இவரை ஜாமீனில் விட்டு, இவரும், நாகூர் மீரா லெப்பையும் ஒன்றாயிருந்து உண்மையைக் கண்டுபிடிக்கும்படி செய்யுங்கள்—என்றார்.

ஜில்லா துரை அப்படியே செய்யும்படி சொல்லி இரண்டு ஸப்-இன்ஸ்பெக்டர்களையும், ஜெவான்களையும் அனுப்பினார்.

விநாயகம் பிள்ளை :—(ஜில்லா துரையை நோக்கி) இந்த நாகூர் மீரா லெப்பை வேலைக்கு வந்த இந்த மூன்றுமாத காலமாகத்தான் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன. நேற்று நிகழ்ந்த எல்லா சம்பவங்களிலும் கோஷாக்கள் வந்திருக்கிறார்கள். அநேகமாய் க்ஷத்திரியரும் முகம்மதியருமே கோஷா முறையை அநுஷ்டிக்கிறார்கள்.

ஜில்லா துரை :—இந்த விஷயம் எனக்கு இதுவரையில் படவில்லை. நீங்கள் சொன்னதைக் கேட்டதில், எனக்கு நாகூர் மீரா லெப்பை விஷயத்தில்கூட சம்சயம் உண்டாகிறது. வேறொரு இரவிபப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரை விட்டு, நாகூர் மீரா லெப்பையின் நடவடிக்கைகளை கவனிக்கும்படி செய்யலாமா?

விநாயகம் பிள்ளை :—நான் உங்களுக்கு யோசனை சொன்னதாக நினைக்கவேண்டாம். என் மனதில் பட்டதைச் சொன்னேன். உங்களுக்கு எது யுக்தமாகப் படுகிறதோ அதைச் செய்யுங்கள்.

ஜில்லா துரை :—யோசிக்க யோசிக்க என் சந்தேகம் பலப்படுகிறது. இருக்கட்டும். நான் மறுபடி வருகிறேன்—என்று கூறி செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்..

உடனே சமய சஞ்சீவி ஐயர் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவர்போல், விநாயகம் பிள்ளையை நோக்கி, " மிஸ்டர் விநாயகம், நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். நீங்கள் உடனே இந்த ஊர் முனிசிபாலிட்டி ஆபீஸுக்கு ஓர் ஆளை அனுப்பி மகம்மதிய ஓட்டர்களின் ஜாப்தாவையும், ஸென்ஸஸ் கணக்கையும், வீட்டு பினான் புஸ்தகத்தையும் வாங்கிக்கொண்டு வரச் செய்யுங்கள் " என்றார். அதைக் கேட்ட விநாயகம் பிள்ளை திகைப்படைந்தாராலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் வெளியில் போய் ஓர் ஆர்டலியை அனுப்பி ஷை புஸ்தகங்கள் மூன்றையும் வரவழைத்து வாங்கிக்கொண்டு உள்ளே வந்துசேர்ந்தார்.

சமய சஞ்சீவி ஐயர், " முதலாவது ஸர்ஜனையையும் சுந்தரம் என்பவரையும் கோஷாக்கள் அழைத்துக்கொண்டு போனார்களே. அந்த வீட்டின் கதவிலக்கம் 144 என்று அவர்கள் சொன்னார்களாமே; இந்த ஊரில் நூற்றுக்கணக்கில் தெருவுகள் இருக்கின்றன. எத்தனை 144-வது வீடுகளில் முகம்மதியர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுங்கள் " என்றார்.

விநாயகம் பிள்ளையும், பராங்குச முதலியாரும் அந்த வேலையில் தங்கள் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர்.

அப்போது சமய சஞ்சீவி ஐயர் அன்றைய காலைத் தபாலில் வந்த ஒரு பத்திரிகையை எதிரில் வைத்துப் படித்துக்கொண்டே இருந்தார். அப்போது அவருடைய கவனம் அடியில் வரும் விளம்பரத்தின்மீது சென்றது :—

## சட்ட சபையில் கேள்வி

சுயமரணபுரத் தொகுதியின் இந்தியா சட்ட சபை மெம்பரான குரங்கசாமி ஐயங்கார் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் அடியில் வரும் கேள்விகளைக் கேட்கப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார் :—

1. சென்னை ராஜதானியில் பிராம்மணர்களிலும் பிராம்மணரல்லாதாரிலும் எந்தெந்த ஜாதியார், விதவையாகும் ஸ்திரீகளின் தலையை மொட்டையடிக்கும் வழக்கத்தைப் பின்பற்றுகிறார்கள் ?

2. இப்போது ஷ ஒவ்வொரு ஜாதியிலும் தலையை மொட்டையடித்திருக்கும் விதவைகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ?

3. இயற்கையில் அழகாயிருக்கும் ஸ்திரீகளை இப்படி விகாரப்படுத்தும் கொடிய வழக்கத்தை நிறுத்துவதற்கு துரைத்தனத்தார் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களா ?

4. இதைத் தடுப்பதை ஷ ஜாதியார்கள் ஆட்சேபித்தால், இதை வேறு யுக்தியால் தடுக்கும் பொருட்டு, துரைத்தனத்தார் அடியில் வரும் அம்பட்டர் சட்டமொன்றைச் செய்வார்களா ?

## அம்பட்டர் சட்டம்

அம்பட்டர்கள் ஆண்பிள்ளைகளுக்கு க்ஷவரம் செய்ய உரிமையுடையவர்கள். ஸ்திரீகளுடைய தலையை அவர்கள் மொட்டை யடிக்க விரும்பினால், அவர்கள் அதைப்பற்றி போலீஸாருக்கு எழுதி ஒவ்வொரு தலைக்கு ஒவ்வொரு ரூபாய் கட்டணம்கட்டி அநுமதிபெற்றே மொட்டை அடிக்கவேண்டும். இப்படிக் கட்டணம் கட்டாமலும், முன் அநுமதி பெறாமலும் மொட்டை அடித்தால், அப்படிச் செய்யும் அம்பட்டர் 50 ரூபாய் அபராதம், அல்லது, ஒருமாத வெறுங் காவல் ஆகிய தண்டனைக்கு உள்ளாவார்.

என்று வெளியிடப்பட்டிருந்த விளம்பரத்தைப் படித்த சமய சஞ்சீவி ஐயர் தமக்குள் சிரித்துக் கொண்டு, "என்ன மிஸ்டர் பராங்குசம், இந்த விளம்பரம் எப்படி இருக்கிறது?" என்று கூறி அதைப் படித்துக் காட்ட, உடனே அவருடைய டிப்டிகள் இருவரும் ஏளனமாக நகைத்தனர்.

விநாயகம் பிள்ளை:—இந்தக் குரங்கசாமி ஐயங்கார் பெரிய பைத்தியமல்லவா! அவர் இதேபோல மிக விசித்திரமான விஷயங்களைக் கொண்டு வருவதில் கெட்டிக்காரர். அவருடைய புத்திக்கு ஏது விகாரமாய்ப் படுகிறதோ அதை அவர் உடனே எழுதிவிடுவார்.

பராங்குசம்:—நான் கொஞ்சகாலம் இந்த சுயமரணபுரத்தில் ஸர்க்கில் இன்ஸ்பெக்டரா யிருந்தபோது, இவருடைய பங்களாவின் பின்புறத்தில் தென்னந்தோப்பில் காக்கைகள் உட்கார்ந்து கத்துகிறதென்றும், அதனால் தம் வேலை கெட்டுப்போகிறதென்றும், போலீஸார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இவர் ஜில்லா துரைக்கு எழுதிவிட்டார். அந்தக் கடிதம் என்னிடம் வந்தது. நான் அதை எடுத்துக்கொண்டு இவரிடம் போய் காக்கைகள் கத்துவதை நிறுத்த போலீஸார் என்ன செய்கிறதென்று கேட்டேன். 'உங்கள் கடமை இன்னதென்று உங்களுக்கு விளங்காவிட்டால், வேலையை ராஜீநாமாச் செய்துவிடுங்களேன். என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்' என்று கூச்சலிட்டு அடிக்க வந்துவிட்டார். அப்பேர்ப்பட்ட முதல் நம்பர் பிச்சுவல்லவா இவர். சட்ட சபையில் அடிக்கடி சிரிப்புண்டாக்க, ஒரு கோமாளி வேண்டுமென்று அதற்காகவே இவரை மெம்பராக நியமித்தார்கள்போ லிருக்கிறது." என்றார்.

சமய சஞ்சீவி ஐயர்:— இவருடைய வீட்டில் டெலிபோன் இருக்கிறதா?

விநாயகம் பிள்ளை:—இருக்கிறதே!—என்றார்.

உடனே சமய சஞ்சீவி ஐயர் எழுந்து டெலிபோனண்டை போய் அதை சட்ட மெம்பரின் வீட்டு டெலிபோனோடு சம்பந்தப் படுத்தச் செய்து அவருடன் அடியில் வருமாறு பேசத் தொடங்கினார்.

சமய சஞ்சிவி ஐயர்:—என்ன மிஸ்டர் குரங்கசாமி, க்ஷேமமா? நான் போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் சமய சஞ்சீவி.

குரங்கசாமி ஐயங்கார் :—ஓகோ! சமய சஞ்சீவி ஐயரா! அப்படியா! சந்தோஷம்! எப்போது வந்தீர்கள்? க்ஷேமமா? உங்களைப் பார்த்து ஆறு மாதகால மாகிறது!

சமய சஞ்சீவி ஐயர்:—இன்று விடியற்காலம் வந்தேன் அண்ணா! உங்களைப் போன்ற பெரியவர்களுடைய ஆசீர்வாதத்தால் க்ஷேமந்தான். இந்த ஊரில் முகாம் செய்யப் போகிறோமே உங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. இன்றைய பத்திரிகையை இப்போதுதான் படித்தேன். படித்தவுடன் உங்கள் திருநாமத்தை தரிசித்தேன். உடனே உங்களைப் பார்த்த மாதிரி சந்தோஷமுண்டாய்விட்டது!

குரங்கசாமி ஐயங்கார் :—ஓ! அப்படியா! இன்றைய பத்திரிகையில் என் பெயரை மாத்திரமா பார்த்தீர்கள்? வேறு விசேஷம் எதையும் பார்க்கவில்லையா?

சமய சஞ்சீவி ஐயர் :—விசேஷத்தையும் பார்த்தேன்! இந்த விஷயம் என் மனதிலும் நெடுநாளாய் உறுத்திக்கொண்டே இருந்தது. நம்முடைய சமூகத்தில் இருந்துவரும் இந்த அநாகரிகமான வழக்கத்தை நிறுத்த எந்த மகான் ஒரு வழியைக் காட்டப் போகிறார் என்று நினைத்துக்கொண் டிருந்தேன். நீங்கள் போட்டிருப்பது சரியான போடுதான்! நம் ஜனங்கள் ஆட்சேபித்தால், அம்பட்டர் மூலமாய் அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கு நீங்கள் சொல்லியிருக்கும் யுக்தி உங்களுடைய அபார விவேகத்தைக் காட்டுகிறது. அடிக்கிற இடத்தில் அடித்தால், புடைக்கிற இடத்தில் புடைக்கிறது என்று பழமொழி சொல்லுவார்கள். அதுபோல், நம் ஜாதியார் ஆக்ஷேபித்தால், அவர்களை நாம் கொட்ட ஒத்து திட்ட ஒத்து. ஒவ்வொரு தலைக்கும் 1 ரூபாய் வீதம் லைசென்ஸ் கட்டணம் அம்பட்டரிடம் சேட்டால், அம்பட்டன் ஏன் ஸ்திரீகளுக்கு மொட்டை யடிக்கிறான். அம்பட்டர் விஷயத்தில் இந்த மாதிரி சட்டம் செய்வதை நம் ஜாதியார் தடுக்கவும் முடியாது. அம்பட்டரும் வாயில்லாப் பூச்சிகள்; இது நல்ல முதல் நம்பர் யுக்தி. இதைப் படித்தவுடன் என் மனதில் உங்கள் விஷயத்தில் உண்டான சந்தோஷத்தை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது.

குரங்கசாமி ஐயங்கார் :—ஓ! அப்படியா! இந்த சட்டத்தை நீங்கள் ஆமோதிப்பதைக் கேட்க எனக்கு நிரம்பவும் சந்தோஷமுண்டாகிறது.

சமய சஞ்சீவி ஐயர் :—பகுத்தறி வுள்ளவன் எவனும் இதை ஆமோதித்தே தீருவான். நாங்கள் சர்க்காரிடம் சேவகம் செய்கிற ஊழியர்கள் ; உங்களைப்போல் இருக்கும் கனவான்கள்தான் இவ்வித மாறுதல்களைத் துணிந்து செய்யவேண்டும். இதைப்போல நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன ! அவை களை நீங்கள் செய்வீர்களென்று நாங்கள் நம்பியிருக்கிறோம். இந்த சட்டசபைக் கூட்டத்தில் நீங்கள் இன்னொரு கேள்வி கேட்கலாம்.

குரங்கசாமி ஐயங்கார் :—என்ன கேள்வி ?

சமய சஞ்சீவி ஐயர் :—நம்முடைய சகோதர சமூகத்தினரான முகம்மதியர்கள் இருக்கிறார்களே, அவர்களில் சிலர் என்னிடம் வந்து அடிக்கடி சொல்லிக்கொள்வதுண்டு. அவர்களுடைய ஸ்திரீ கள் கோஷா முறையை அநுஷ்டிப்பதில் பலர் நோயில் விழுந்து விடுகிறார்களென்றும், அது விஷயமாய் சட்டசபையார் ஏதாவது பரிகாரம் செய்யவேண்டு மென்றும் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதையும் நீங்கள் கவனிக்கவேண்டும் அண்ணா ! அது இதைவிட அவசரமானது.

குரங்கசாமி ஐயங்கார் :— அதில் என் கவனம் செல்லவில்லை யென்று நினைத்தீர்களா ! ஆனால், அந்த சமூகத்தாரில் எதிர்க்கட்சி யார் சிலர் இருக்கிறார்கள். சிலர் கோஷா முறையை விலக்கவேண்டு மென்கிறார்கள் ; சிலர் அது இருக்கவேண்டு மென்கிறார்கள். அதற் காகத்தான் யோசனை செய்கிறேன்.

சமய சஞ்சீவி ஐயர் :— நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். இன்றைய பத்திரிகையிலேயே நீங்கள் ஒரு விளம்பரம் வெளியிடுங் கள். சில முஸ்லீம்கள் கேட்டுக்கொள்வதைக் கருதி, இந்த கோஷா முறையின் உசிதாவுசிதத்தைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப் போவதாக வும், இந்த சுயமரணபுரத்தில் கோஷா முறையை அநுஷ்டிப்போர், இன்னின்னார் என்றும், அநுஷ்டிக்க விரும்புவோர் இன்னின்னார் என் றும், அதை எதிர்ப்பவர் இன்னின்னார் என்றும் உங்களுக்குத் தெரி விக்க வேண்டுமென்று அந்த விளம்பரத்தில் தெரிவியுங்கள். அதன் பிறகு ஏற்படும் நிலைமைப்படி நீங்கள் நடந்துகொள்ளலாம். இதை நீங்கள் அவசியம் செய்யவேண்டும். அண்ணா, உங்களுக்கு இதனால் புண்ணியம் உண்டாகும்.

குரங்கசாமி ஐயங்கார்:—ஓ, அப்படியே செய்கிறேன். இதனால் எனக்கு நஷ்டமுமில்லை கஷ்டமுமில்லை.

சமய சஞ்சீவி ஐயர்:—மறக்காமல் இதைச் செய்யுங்கள். நான் இன்னம் சில தினங்கள் இந்த ஊரில் இருப்பேன். ஒரு நாள் வந்து உங்களை நேரில் தரிசிக்கிறேன்—என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிந்தது.

அதற்குமேல் சமய சஞ்சீவி ஐயர் முன்போலத் தமது ஆசனத்தில் அமர்ந்து பத்திரிகையைப் புரட்டினார். அடியில் வரும் விஷயம் அவருடைய திருஷ்டியில் பட்டது:—

களவாட முயன்றதாக

நேற்று இரவு சுயமரணபுரம் கிழக்கிராஜ வீதியில் உள்ள கோடீசுவரரான வாண்டையாருடைய மூன்றடுக்கு மேன் மாடவீட்டில் பின்புறத் தோட்டத்தில் சாக்கடைக் குழாயின் வழியாக எவனோ திருடன் மேலே ஏறி முதலாவது உப்பரிகையில் ஒரு ஜன்னலின் கம்பிகளைப் பெயர்த்திருக்கிறான்; ஆனால் என்ன காரணத்தினாலோ உள்ளே புகுந்து திருடவில்லை. தோட்டத்தில் தரையில் பலருடைய காலடிச் சுவடுகள் இருந்தனவாம். இதைப் பற்றிப் போலீஸார் துப்பு விசாரித்து வருகிறார்கள்.

—என்று காணப்பட்ட செய்தியை சமய சஞ்சீவி ஐயர் படித்துவிட்டு மேலும் பக்கங்களைப் புரட்டினார். இன்னொரு மூலையில் அடியில் வரும் செய்தி காணப்பட்டது:—

சநியூர் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியார்

ஐந்து வருஷகாலமாய் இரண்டு லக்ஷம் ரூபாய்ச் செலவில் தயாரித்த

சம்பூர்ண ராமாயணம்

என்னும் நாடகத்தை சுயமரணபுரம் தெற்கிராஜ வீதி 144-ம் நம்பர் கட்டிடத்தில் சென்ற இரண்டு தினங்களாய் மிக விமரிசையாய்க் காட்டி வருகிறார்கள். இடமில்லாமையால் ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஏமாற்றத்தோடு திரும்பிப் போயினர். சில பிரபுக்களின் வேண்டுகோளின்படி இந்தப் புண்ணிய சரிதம் தொடர்ச்சியாய் இன்னம் பதினைந்து தினங்களுக்குக் காட்டப்படும். ஞாயிற்றுக் கிழமை 5-30-மணிக்கும், மற்ற தினங்களில் இரவு 9-மணிக்கும் நாடகம் ஆரம்பமாகும்.

நாடக மேடை நவமணிகளான குயில் தொண்டை சீதம்மாள் ஸ்ரீராமனாகவும், கோகிலத்வனி ராமஐயர் சீதையாகவும் நடப்பது ஒவ்வொருவரும் அவசியம் பார்த்தானந்திக்க வேண்டிய இருபதா மாண்டின் புதுமை!

மிஸ் ஜானகியின் ஜனகன் நடிப்பும், தர்பார்க் காட்சியும், கண்களுக்கு நல்விருந்தாகும். மாஸ்டர் லக்ஷ்மணன் ராவணனாக நடிப்பது . த்ரூபம் லங்கேஸ்வரனை நேரில் பார்ப்பதுபோல் குலை நடுக்க முண்டாக்கத் தக்கதாயிருக்கும். மற்றவர் சமயோசிதம்போல்; கட்டணங்கள் வழக்கம்போல்; சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிப்போரும், கலகம் விளைவிப்போரும் போலீஸார் வசம் ஒப்புவிக்கப்படுவர்.

| | |
|---|---|
| பிச்சைத் தம்பி மரைக்காயர் | ஜெகன்மோகன சுந்தரப் பத்தர் |
| கண்டிராக்டர் | புரொப்ரைட்டர் |

என்று வெளியிடப் பட்டிருந்த விளம்பரத்தைப் படித்த சமய சஞ்சீவி ஐயர், "மிஸ்டர் பாராங்குசம், ஒரு 144-ம் நம்பர் கட்டிடத் தில் நாடகம் நடந்து வருகிறது." என்று கூறியபடி வீட்டின் பிளான்க ளடங்கிய புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்கத் தொடங்கினர்.

அப்போது விநாயகம் பிள்ளை, "நான் ஓட்டர் ஜாப்தாவி லிருந்து 144-ம் நம்பர் வீடுகள் எத்தனை இருக்கின்றனவென்று கண்டுபிடித்து விட்டேன். அந்த நம்பர் உள்ள வீடுகள் 79 இருக் கின்றன" என்றார்.

அப்போது பராங்குச முதலியார், "நான் ஸென்ஸஸ் ஜாப் தாவிலிருந்து 144-வது நம்பர் வீடுகள் எத்தனை இருக்கின்றன வென்று கணக்கெடுத்து விட்டேன். ஹிந்துக்களுடைய வீடுகளே பெரும்பாலானவை. முகம்மதியர்களுடைய வீடுகள் 105" என்றார்.

சமய சஞ்சீவி ஐயர்:— அப்படியானால், 144-ம் நம்பர் உள்ள வீடுகளில 105 வீடுகள் முகம்மதியருக்குச் சொந்தமானவை. அவைகளில் 79 வீடுகளில் முகம்மதியர்களே இருக்கிறார்களாகை யால், அவர்கள் முகம்மதிய ஓட்டர் ஜாப்தாவில் குறிக்கப்பட் டிருக் கிறார்கள். மற்ற வீடுகளில் முகம்மதியரல்லாதார் குடியிருக்கின்ற னர் என்று அர்த்தமாகிறது; சரி; இனி பிளானை வைத்துக்கொண்டு, இவ் வீடுகளில் நடையில் மெத்தைப்படியுள்ள வீடுகள் எதெது என்பதைக் கண்டுபிடியுங்கள்" என்றார்.

அந்த வேலையை அவர்கள் இருவரும் செய்துகொண் டிருக்கையில் சமய சஞ்சீவி ஐயர் விநாயகம் பிள்ளையை நோக்கி, "மிஸ்டர் விநாயகம், நீங்கள் இன்றையதினம் இந்த நாடகத்திற்குப் போய் அந்தக் கட்டிடத்தைப் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றார்.

விநாயகம் பிள்ளை நாடகம் பார்ப்பதற்குப் போகிறவ ரன்றாதலால் அவர் வியப்போடு ராவ்சாயப் ஐயருடைய முகத்தைப் பார்த்தார்.

சமய சஞ்சீவி ஐயர்:—நீங்கள் அரைமணி காலம் முன்னாகவே அந்த இடத்திற்குப் போய், நடையில் படிக்கட்டு இருக்கிறதா என்பதையும், அங்கே யாராவது காவல் காத்திருக்கிறார்களா என்பதையும், மாடியில் என்ன இருக்கிற தென்பதையும், மாடிக்குப் போக எல்லோரும் அநுமதிக்கப் படுகிறார்களா என்பதையும் தெரிந்து கொண்டு நாடகம் பார்த்துவிட்டு வந்து சேர வேண்டும். ஆனால் நீங்கள் இம்மாதிரி தகவல்களைத் தெரிந்துகொண்டு போவதற்காக அங்கே வந்தீர்கள் என்று எவரும் தெரிந்துகொள்ளக் கூடாது—என்றார்.

விநாயகம் பிள்ளை அதற்கு இணங்கினார். அதற்குள் அவர்கள் பிளான்களைப் பார்த்ததில் 144-ம் நம்பர் உள்ள 105 வீடுகளில் 7 வீடுகளிலேதான் நடையில் மேன்மாடப் படிக்கட்டுகள் இருந்தனவென்பதும், அவைகளில் ஹிந்துக்களே இருந்தன ரென்பதும் தெரிந்தன. சம்பூர்ண ராமாயண நாடகம் நடந்த கட்டிடம் ஒரு முகம்மதியருடைய தென்றும், அதில் நடையில் மேன்மாடப் படிக்கட்டு இருந்ததென்றும் அவர்கள் தெரிந்துகொண்டனர்.

சமய சஞ்சீவி ஐயர், "சரி; 144-ம் நம்பர் வீட்டைப்பற்றி கணக்கெடுத்ததுபோல், 1, 4, 14, 44, என்னும் நம்பர்களுள்ள முகம்மதியர் வீடுகளில் எதெதில் நடையில் படிக்கட் டிருக்கிறதென்று கண்டுபிடியுங்கள்" என்றார்.

மற்றவர்கள் அதற்கும் கணக்கெடுத்தனர். அவ்வாறு கணக்குகள் தயாரிப்பதிலேயே அன்றையதினம் கழிந்தது. இரவில் விநாயகம் பிள்ளை நாடகக் கட்டிடத்திற்குப் போய்விட்டு வந்து சேர்ந்தார்; போய் வந்த காலத்தில் அன்றைய மாலையில் சுயமரணபுரத்தில் வெளியான தினசரி முட்டை என்னும் பத்திரிகையில் ஒரு பிரதியை விலக்கு வாங்கிக்கொண்டு வந்துசேர்ந்தார்.

அதை ராவ்சாகிப் ஐயர் வாங்கிப் பிரித்துப் பார்த்ததில் அடியில் காணப்படும் விஷயம் அவருடைய திருஷ்டியில் பட்டது:—

## கோஷா முறை

இந்த நகரத்திலுள்ளவரும் இந்தியா சட்டசபை மெம்பருமான குரங்கசாமி ஐயங்கார் அடியில் வருமாறு அறிவிக்கிறார்:—

கோஷா முறையை அநுஷ்டிக்கும் ஜாதியாரில் சிலர் என்னிடம் வந்து அந்த முறையை சட்டபூர்வமாய் விலக்க வேண்டுமென்று சட்டசபையில் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஆனால், அந்த விஷயம் அவ்வளவு அவசரமாய்ச் செய்துவிடக் கூடியதன்று. ஏனென்றால், அதில் சம்பந்தப்படும் வகுப்பாரில் பலர் மிகப் பிடிவாதமான அபிப்பிராய முடையவர்களா யிருக்கிறார்கள்.

ஆனாலும் என்னிடம் ஷை விஷயத்தைக் கேட்டுக் கொள்வோரையும் நான் அசட்டை செய்வது தவறான காரியமாதலால், நான் இந்த சுயமரணபுரத்தி லுள்ளவர்களும், கோஷா முறையை அநுஷ்டிப்பவர்களுமான கனவான்களுடைய தீர்மானத்திற்கு இதை விட்டிருக்கிறேன்.

அவர்கள் ஒவ்வொருவரும் தாம் இதற்கு சாதகமான அபிப்பிராய முடையவர்களா, பாதகமான அபிப்பிராய முடையவர்களா என்பதை நாளைய தினமே எனக்கு அறிவித்தால், பெரும்பாலானவர்களுடைய அபிப்பிராயம் எப்படி இருக்கிற தென்பதைக் கண்டு அதற்குமேல் எப்படிச் செய்வது யுக்தமோ அப்படிச் செய்கிறேன்.

—என்று வெளியிடப்பட் டிருந்த அறிக்கையைப் படித்த சமய சஞ்சீவி ஐயர் தமக்குத்தாமே புன்னகை செய்துகொண்டார். அந்த விஷயத்தைப்பற்றி பத்திராதிபர் அடியில் வருமாறு ஒரு சிறிய குறிப்பு எழுதியிருந்தார்.

## சட்டசபை மெம்பரின் பகற்கனவு

பலதிறப்பட்ட பழக்க வழக்கங்களோ டிருந்துவரும் நம் நாட்டு ஸ்திரீ ஜனங்களை ஒரே நிமிஷ நோட்டீஸில் மேல்நாட்டு ஸ்திரீகளின் தற்கால நாகரிகத்திற்கு உயர்த்திவிட வேண்டுமென்பது கனம் குரங்கசாமி ஐயங்காருடைய நெடுங்காலப் பகற்கனவா யிருந்து வருகிறது. இவர் இம்மாதிரியான சீர்திருத்தங்களை விட்டு பலன் தரத் தக்க வேறு விஷயங்களில் தமது கவனத்தைச் செலுத்தினால், இந்திய ராயத்துகளின்

வரிப் பணத்தில் தினமொன்றுக்கு 25 ரூபாய் வீதம் இவர் பெறுவது இவருக்கு ஜீரணமாகும். அதுவன்றி, ஹிந்துக்கள் தடிப்பான தோலுடையவர்களாதலால், இந்த கனவான் எவ்விதமான புதிய மாறுபாட்டைப் பிரரேபித்தாலும், அவர்களுச்குக் கோபம் உண்டாகாது. முஸ்லீம்களின் பழக்க வழக்கங்களில் இவர் தலையிட முயல்வது, இவருக்கும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கும் அபாயகரமாக முடியுமென்று நாம் எச்சரிப்பது இவருடைய மனதைப் புண்படுத்தாதென்று நம்புகிறோம். ஆனாலும், இவர் எந்த வகுப்பாருடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறாரோ, அவர்கள் இவருக்குத் தக்க பதிலளிக்கத் தவறமாட்டார்களென்று உறுதியாக நம்புகிறோம்[ப-ர்.]

என்ற குறிப்புக் காணப்பட்டது. அதைப் படித்த சமய சஞ்சீவி ஐயருடைய முகம் வாட்டமடைந்தது.

அதற்கு மறுநாள் மூவரும் அதே விஷயத்தைப் பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருந்த காலத்தில், அந்த பங்களாவிலிருந்த டெலிபோனில் கணகண வென்ற ஓசை யுண்டாயிற்று.

விநாயகம் பிள்ளை உடனே எழுந்து போய் தெளிபோனில் கூப்பிட்டது யாரென்பதை கவனித்தார்.

மறுபக்கத்திலிருந்தவர், "நீங்கள் சமய சஞ்சீவி ஐயரா?" என்றார்.

விநாயகம் பிள்ளை :—நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன?

மற்றவர்:—நான் சமய சஞ்சீவி ஐயரிடம் அவசரமாய் ஒரு விஷயம் தெரிக்கவேண்டும். என் பெயர் உங்களுக்குத் தெரிவது அவசியமான தல்ல. நீங்கள் ராவ் சாகிப் ஐயர்தானே?

விநாயகம் பிள்ளை :—ஆம். நான் ராவ் சாகிப் ஐயர்தான். நீங்கள் செய்தியைச் சொல்லலாம்.

மறுபக்கத்தி லிருந்தவர் :—நீங்கள் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பையைப் பற்றி இழிவான அபிப்பிராயம் கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. அவர் யோக்கியமான மனிதர். எந்தக் குற்றவாளியோடும் அவர் சம்பந்தப் பட்டவரன்ற. அவருக்கு நீங்கள் ஏதாவது கெடுதல் செய்தாலும், அல்லது, அவரை நீங்கள் அவமரியாதையாக நடத்தினாலும், உடனே உங்களுக்குப் பெரிய தீங்கு நேருவது நிச்சயம் என்பதை இப்போதே தெரிவித்து எச்சரிக்கிறோம்—என்றார்.

அந்த எதிர்பாராத செய்தியைக் கேட்ட விநாயகம் பிள்ளை, "இவ்வளவு தானே! இன்னம் ஏதாவது சொல்ல வேண்டுமா?" என்று கேட்டபடி சமய சஞ்சீவி ஐயரை ஜாடையின் மூலம் அழைக்க, அவர் விரைவாக அங்கே வந்துசேர்ந்தார். மறுபக்கத்தி லிருந்தவர், "அவ்வளவுதான்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

உடனே விநாயகம் பிள்ளை விஷயத்தை சுருக்கமாய் சமய சஞ்சீவி ஐயருக்கு கூற, அவர் வியப்போடு புன்னகை செய்தவராய் உடனே டெலிபோன் இயந்திரத்தைக் கையில் வாங்கி, "எக்ஸ் சேஞ்ச்," என்று கூப்பிட்டார். அங்கிருந்தவர், "யாரது?" என்றார்.

உடனே சமய சஞ்சீவி ஐயர், "நான் போலீஸ் டிப்டி இன்ஸ் பெக்டர் ஜெனரல். இப்போது என்னுடைய டெலிபோனுடன இன்னொரு டெலிபோனை சம்பந்தப் படுத்தினீர்களே; அந்த டெலி போனின் நம்பர் என்ன?" என்றார்.

'298' என்று உடனே மறுமொழி கிடைத்தது. சமய சஞ் சீவி ஐயர் பக்கத்திலிருந்த டெலிபோன் நம்பர் புஸ்தகத்தை எடுத்து, 298 என்பது யாருடையது என்று பார்க்க, அது வக்கீல் வயத்து நாதையருடைய வீட்டிலிருந்த டெலிபோன் நம்பர் என்பது தெரிந் தது. வக்கீலுடைய முழுவிலாசம் அதில் கொடுக்கப்பட் டிருந்தது.

உடனே சமய சஞ்சீவி ஐயர் விரைவாக வெளியில் ஓடி, தமது மோட்டார் வண்டியை சீக்கிரமாகக் கொண்டுவரும்படி ஒரு ஜவா னுக்கு உத்தரவிட, அவன் அதை ஒரே நிமிஷத்தில் கொணர்ந்து நிறுத்தினன்.

ராவ் சாகிப் ஐயர் குபீரென்று பாய்ந்து அதில் ஏறி உட் கார்ந்துகொண்டு, வக்கீல் வயத்துநாதையருடைய விலாசத்தைச் சொலலி, அந்த விலாசத்திற்கு வண்டியை விடும்படி கூறினர். உடனே வண்டி வக்கீல் வீட்டை நோக்கி ஓடத்தொடங்கி ஐந்தே நிமிஷ காலத்தில் அந்த வீட்டு வாசலில் போய் நின்றது.

அதே சமயத்தில் ஒரு மனிதன் வக்கீலின் வீட்டிற்குள் ளிருந்து வெளியில் வந்தான். சமய சஞ்சீவி ஐயர் கதவைக்கூடத் திறக்காமல் குபீரென்று எழும்பிக் குதித்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அந்த மனிதனுடைய கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "யாரப்பா நீ?" என்று நயமாகவே வினவினர்.

அந்த மனிதன் :—மேலே கை போட்டுப் பேசவேண்டாம். தூர இருந்தபடி மரியாதையாகப் பேசுங்கள். முதலில் நீங்கள் யாரென்பதைச் சொன்னால், நான் அதற்குப் பின், உங்கள் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டுமோ என்பதைப் பற்றி யோசிக்கிறேன். —என்றான்.

அப்போது சமய சஞ்சீவி ஐயரும் சாதாரண உடையில் வந்திருந்தார். வண்டியை ஓட்டிய ஜெவானும் சொந்த உடையிலிருந்தான். அந்த மனிதன் சமய சஞ்சீவி ஐயரிடம் திமிருய்ப் பேசியதைக் கண்ட ஜெவான் கோபங் கொண்டவனாய் வண்டியை விட்டிறங்கி அந்த மனிதனிடம் நெருங்கி, "யார் ஓய் நீ? எஜமான் கேட்பதற்கு சரியான பதில் சொல்லாமல், மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளுகிறாயா?" என்று அதட்டியபடி அவனுடைய இடுப்புத் துணியை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.

சமய சஞ்சீவி ஐயர் சரேலென்று தமது கையை எடுத்துக் கொண்டு அவனைப் பார்த்து, "நான் வக்கீலைப் பார்க்கவேண்டும். அவர் உள்ளே இருக்கிறாரா?" என்றார்.

அந்த மனிதன், "நீங்கள் வக்கீலைப் பார்க்க வேண்டுமானால் அதை யார் தடுத்தது! வழியோடு போகிற என்னை அதற்காக நீங்கள் பலவந்தமாய்ப் பிடித்து நிறுத்தி, நான் யாரென்பதை அதிகார தோரணையாய்க் கேட்க வேண்டியதென்ன? இதென்ன பணத் திமிரு? அல்லது, உத்தியோகத் திமிரு?" என்றான்.

அதே சமயத்தில் சமயற்கார ராமன் தெருவின் ஒரு பக்கத்திலிருந்து, கையில் ஒரு காகிதப் பொட்டலத்துடன் அங்கே வந்து சேர்ந்தான். அவனுடைய இடுப்பில் முழங்கால்கள் வரையில் தொங்கிய ஒரு துண்டு காணப்பட்டது. ஒரு கதுப்பில் வெற்றிலை புகையிலை முதலியவை அடக்கப் பட்டிருந்தன. அவன் சமய சஞ்சீவி ஐயரை வியப்போடு பார்த்து, "யார் நீங்கள்?" என்றான். சமய சஞ்சீவி ஐயர், "நீர்தான் இந்த வீட்டு சமயல்காரரோ! வக்கீல் உள்ளே இருக்கிறாரா?" என்றார்

ராமன் :—(புன்னகையோடு) நான் சமயல்காரன் என்று என் நெற்றியில் எழுதி ஒட்டி இருக்கிறதா? என்னைப் பார்த்தவுடன் சமயல்காரனா என்று துணிந்து கேட்டுவிட்டீர்களே! நான் சமயல்காரனாய் இல்லாதிருந்தால், அடபோது உங்கள் நிலைமை கஷ்டமாய் விடுமே! அதை நீங்கள் யோசிக்கவில்லையே!" என்றான்.

சமய சஞ்சீவி ஐயர், "அந்த நிலைமை ஏற்படும்போது அதைப் பற்றி யோசிக்கலாம். வக்கீல் இப்போது உள்ளே இருக்கிறாரா இல்லையா என்பது உமக்குத் தெரிந்தால் சொல்லும்" என்றார்.

உடனே ராமன், "அவர் இருக்கமாட்டார்; அநேகமாய் அவர் ஒன்பது மணிக்குத்தான் வருவார். இந்த ஆசாமியை ஏன் பிடித்துக்கொண் டிருக்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு, அந்த மனிதனை நோக்கி, "என்னப்பா! எங்கே வந்தாய்? வக்கீல் ஐயர் இருக்கிறாரா என்று உன் எஜமானர் பார்த்துக்கொண்டு வரச்சொன்னாரா? இல்லாவிட்டால், வேறே ஏதாவது அலுவலாக வந்தாயா?" என்றான்.

அதைக் கேட்டவுடன் அந்த மனிதன், "ஆமாங்க ஐயரே! வக்கீலையா வூட்டுலெ இருக்காவளா இன்னு எசமான் பாத்துக் கிட்டு வரச் சொன்னாக. நானு எப்பாட்டுலெ வந்தா இவுக ஆரோ தெரியல்லே, என்னைப் புடிச்சிக்கிட்டு மெரட்டறாக" என்றான்.

அதே சமயததில் அந்தத் தெருவுக்கோடியில் கணகணவென்ற ஓசையுடன் நெருப்பணைக்கும் எஞ்சின் ஒன்று வாயுவேக மனோ வேகமாய் வந்து திருபபி அந்த வீதியில் ஒரு பெரிய மதயானை போல் ஓடிவந்தது. நெருப்பணைக்கும் இயந்திரத்தின் ஓசையை தூரததில் கேட்டாலே, உடனே ஜனங்கள் எவ்விடத்திலோ நெருப் புப் பற்றிக்கொண்ட தென்று யூகித்துக்கொள்வது வழக்கமாத லால், அந்த வீதியின் இரண்டு சாருகளிலும் இருந்த வீடுகளின் ஜனங்கள் கைவேலைகளை அப்படி யப்படியே போட்டுவிட்டு முன் னால் வந்து வாயில்களிலும் ஜன்னல்களிலும் நிறைந்து நெக்கி, "எங்கே நெருப்பு? எங்கே நெருப்பு?" என்று ஒருவரை யொருவர் ஆவலோடும் அச்சத்தோடும் கேட்டுக்கொண்டு நின்றனர். கண்ணி மைப் பொழுதில் அந்த இஞ்சின் நெடுந்தூரத்தைக் கடந்து, பிர மாதமான ஓசை செய்துகொண்டு ஓடிவரவே, சமய சஞ்சீவி ஐய ரும், அவருடன் இருந்தவர்களும் சடக்கென்று தங்கள் சம்பாஷ ணையை நிறுத்திவிட்டு, இஞ்சின் வந்த பக்கத்தில் வியப்போடு திரும் பிப் பார்த்தனர்.

அதே காலத்தில் வக்கீலின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டிற் குள்ளிருந்து ஆவலோடு வெளியில் ஓடிவந்த வக்கீல் வயத்தூநாதைய ருடைய மனைவியான அம்பணியம்மாள் தங்கள் வீட்டின் வாசலில்

ஒரு மோட்டார் வண்டியும், சில மனிதர்களும் நின்றதைக் கண்டு விரைவாகத் தமது வீட்டின் வாசலையடைந்து, நாணிக்கோணி ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று, "ராமா, யாரப்பா இவர்கள்?" என்றாள். அவளுடைய சொற்கள் ராமனைக் குறிப்பனவா யிருந்தாலும், அவள் சமய சஞ்சீவி ஐயருடைய கம்பீரமான வடிவத்தையே உற்று நோக்கி, அவர் யாரா யிருக்கலா மென்று எண்ணமிடலானாள்.

ஆனால் அதற்கு ராமன் ஏதாவது மறுமொழி கொடுத்தானு இல்லையா என்பது, மணியோசை யமர்க்களத்தில் தெரியாமல் போய் விட்டது. கண்ணிமைப் பொழுதில் அந்த வீதியின் கோடியிலிருந்து வக்கீலின் வீட்டண்டை வந்துசேர்ந்த இஞ்சின் சமய சஞ்சீவி ஐய ருடைய மோட்டார் வண்டிக்குப் பக்கத்தில் சடக்கென்று நின்றது. அதற்குள் குரங்குகள்போல் பல இடங்களில் தொற்றிக்கொண் டிருந்த சுமார் இருபது சேவகர்கள் மிகுந்த ஆவேசத்தோடு கீழே இறங்கி, அநுமாரின் வால்சுருள்போல அளவற்றதாய்க் காணப் பட்ட கித்தான் குழாய்களை பொத்து பொத்தென்று கீழே எடுத் துப் போட்டனர்.

அவ்வாறு முதலில் ஒரு மோட்டார் வண்டியும், பிறகு நெருப்பணைக்கும் இஞ்சினும் வக்கீலின் வீட்டு வாசலில் வந்து நிற் கவே, அந்த வீட்டில் நெருப்புப் பிடித்துக்கொண்ட தென்னும் வதந்தி மிக சீக்கிரத்தில் வீதி முழுதிலும் பரவிப் போகவே, புற்றி லிருந்து ஈசல்கள் கிளம்புவதுபோல ஆயிரக் கணக்கில் ஜனங்கள் அங்கே வந்துகூடி, "வக்கீல் வீட்டிலா நெருப்பு? வக்கீல் வீட்டிலா நெருப்பு?" என்று ஆவேசத்தோடு கேட்டுக்கொண்டு வககீலின் வீட்டை உற்றுப் பார்த்தனர். வீட்டின் அடிப் பாகத்திலோ மேல் பாகத்திலோ நெருப்பின் குறியே காணப்படவில்லை.

இஞ்சினில் வந்த ஸார்ஜண்ட், "இதுதானே வக்கீல் வயத்து நாதையருடைய வீடு?" என்று அருகிலிருந்தவரைக கேட்க, சிலர் ஆம் என்றனர். ஆகவே, அந்த வீட்டில் நெருப்பு எந்த இடத்தில் பற்றிக்கொண் டிருந்ததென்பதைப் பார்க்கும் பொருட்டு ஸாஜன் டும் சில சேவகர்களும் உள்ளே நுழைய, ஜனங்களும் தடபுடலாக உள்ளே நுழைந்தனர். அதற்குள் சில சேவகர்கள் தண்ணீர்க் குழாயில் தங்கள் கித்தான் குழாயைச் சேர்க்கும் இடத்தைத் தேடி, அதோடு தங்கள் குழாயை சம்பந்தப்படுத்த, பெரிய மலைப் பாம்பு கள் நெளிந்து நெளிந்து வருவதுபோல கித்தான் குழாய்களில் தண்

ணீர் வரத் தொடங்கியது. அவர்கள் அதன் நுனியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, வக்கீலின் வீட்டில் தண்ணீரைப் பீய்ச்ச ஆயத்தமாகி விட்டனர்.

வெளியில் நின்ற அம்மணியம்மாள், ராமன், சமய சஞ்சீவி ஐயர் ஆகிய எல்லோரும் ஒரே க்ஷணத்தில் அங்கு ஏற்பட்ட விபரீதமான மாறுபாட்டைக் கண்டு பிரமித்து, உண்மையில் உள்புறத்தில் நெருப்புப் பற்றிக்கொண் டிருக்குமோ வென்று நினைத்து மற்றவர்களுடன் உள்ளே சென்றனர்.

வீட்டின் அடிபாகத்தில் எங்கும் நெருப்பு காணப்படவில்லை. எல்லோரும் தடதடவென்று மேன்மாடத்திற்கு ஓடினர். அவ்விடத்திலும் நெருப்பு பற்றிக்கொண் டிருந்த குறிப்பு தென்படவில்லை. ஆனால் அங்கிருந்த ஹாலின் நடுவில் போடப்பட்டிருந்த விசாலமான ஒரு மேஜையின்மேல், சுமார் இரண்டு வயதுடைய குழந்தையொன்று உட்கார்ந்துகொண் டிருந்தது. அது டெலிபோன் கருவிகளைப் பிடித்துக்கொண் டிருந்தது. அதுவன்றி, அதற்குப் பக்கத்தில் ஒரு கிராமபோன் இயந்திரமும் ஏராளமான பாட்டுத் தகடுகளும் (பிளேட்டுகளும்) இருந்தன. அந்தக் குழந்தையைத் தவிர வேறு எவரும் மேன்மாடத்தில் காணப்படவில்லை.

அப்போது நிரம்பவும் பதறிய நிலைமையில் அந்த மேஜையண்டை ஓடிய அம்மணியம்மாள், "ராமா, நெருப்புத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறதென்றும், குழந்தை நெருப்பில் அகப்பட்டுக் கொண்டதோ என்றும் நான்கூட பயந்து நடுங்கிவிட்டேன். எங்கேயும் நெருப்பைக் காணோமே; நமக்குத் தெரியாமல் நெருப்பணைக்கும் இஞ்சினை யார் வரவழைத்தது! இது பெரிய அதிசயமாயிருக்கிறதே! வீட்டில் நெருப்புப் பிடிக்கவில்லை யென்று சொல்லி எல்லாரையும் வெளியில் அனுப்பு" என்றாள்.

உடனே, சமயசஞ்சீவி ஐயர் ஸார்ஜண்டைப் பார்த்து, "இந்த வீட்டில் நெருப்புப் பிடிக்கவில்லையே! உங்களை யார் வரச்சொன்னது?" என்றார்.

ஸார்ஜண்ட் :—டெலிபோன் எக்ஸ்சேஞ்சி லிருப்பவர்கள் இந்த வீட்டில் நெருப்புப் பிடித்துக் கொண்டிருக்கிறதென்று டெலிபோன் மூலம் எங்களுக்குச் செய்திசொல்லி யனுப்பினார்கள். அவர்கள் ஏன் தப்பான செய்தியைத் தெரிவித்தார்கள் என்பது தெரியவில்லையே.

என்று கூறியபடி டெலிபோனைக் கையில் எடுத்துக்கொண்டார். அப்போது சமய சஞ்சீவி ஐயர், "கொஞ்சம் பொறுங்கள். இப்போது சுமார் பத்து நிமிஷகாலத்திற்குமுன் இந்த டெலிபோனிலிருந்து யாரோ போலிஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலோடு பேசினார்கள். அப்படிப் பேசியது யாரென்பது தெரியவேண்டும். அவரேதான் ஒருவேளை எக்ஸ்சேஞ்சுக்கு இந்த சங்கதியை ஏதோ கெட்ட எண்ணத்தோடு சொல்லி இருப்பாரோ என்று நினைக்கிறேன்" என்று கூறியபடி குழந்தை யண்டை சென்று, "அம்மா, குழந்தை, உன்னை யாரம்மா இந்த மேஜையின்மேல் உட்கார வைத்தது?" என்று பிரியத்தோடு கேட்டார்

குழந்தை கைவிரலை வாயில் போட்டுக் கற்கண்டை சப்புவது போல் ஆநந்தமாய் சுவைத்துக் கொண்டிருந்த நிலைமையில் தடதடவென்று அத்தனை ஜனங்களும் அங்கே வந்ததைக் கண்டு அது பிரமித்து மருள மருள விழித்துக்கொண் டிருந்ததாகையால், அப்போது சமய சஞ்சீவி ஐயர் அதனிடம் கேள்வி கேட்கவே, குழந்தை முன்னிலும் அதிகமான குழப்ப மடைந்து மான்போல மருண்டு நோக்கியதே யன்றி, வாயைத் திறந்து மறுமொழி கூறவில்லை.

அதைக் கண்ட அம்மணியம்மாள் குழந்தையைப் பிடித்து வாஞ்சையோடு அணைத்துக்கொண்டு, "பாப்பா, உன்னை, யாரம்மா, தூக்கி இங்கே வைத்தது? பயப்படாமல் சொல்லு; உனக்குக் கக்கா கொடுக்கிறேன்" என்றாள்.

உடனே அந்தக் குழந்தையின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. அது தன் தலையை ஆட்டிக் கொண்டு, வலது கையைத் தூக்கி, சமய சஞ்சீவி ஐயரை சுட்டிக் காட்டியது. தம்மைக் கண்டு குழந்தை அஞ்சுகிறது என்று சமய சஞ்சீவி ஐயர் கருதி தமக்கு சற்று தூரத்தில் தமது ஜெவான் அப்போதும் பிடித்துக் கொண் டிருந்த ஆசாமியைக் குழந்தைக்குக் காட்டி "பாப்பா, இதோ இவரைப்பார். இவர் உன்னைத் தூக்கி இங்கே வைத்தாரா? இல்லாவிட்டால் (சமயல்காரனைக் காட்டி) ராமன் வைத்தானா?" என்றார்.

குழந்தை அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தபின் முதலில் அந்த ஆசாமியைக் காட்டிய பிறகு எதையோ நினைத்துக் கொண்டது போல, ராமனைச் சுட்டிக் காட்டி, "மாமா, கக்கா தா" என்றது.

உடனே ராமன் குழந்தையண்டை போய் நின்று, " பாப்பா, கக்கா கீழே இருக்கிறது. இதோ போய்க் கொண்டு வந்து தருகிறேன். நீ பயப்படாமல் சொல்லு; நான் உன்னைத் தூக்கி இங்கே வைத்தேன். சரியாய்ப் பார்த்துச் சொல்லு. உனக்கு அப்பச்சி கொண்டுவந்து தருகிறேன " என்று கொஞ்சலாகக் கூறினான்.

உடனே குழந்தை அப்புறம் இப்புறம் திரும்பி மருள மருள விழித்து தனது கையைப் பலருக்கு நேராகக் காட்டிக் காட்டித் தணித்தது. உடனே அம்மணியம்மாள் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு, " குழந்தைக்கு புத்தி குழம்பிப்போயிருக்கிறது. இதைக் கேட்பதில் உபயோகமில்லை " என்றார்.

உடனே சமய சஞ்சீவி ஐயர் டெலிபோன் கருவிகளை எடுத்து வைத்துக் கொண்டு, " எக்ஸ்சேஞ்ச் " என்று கூப்பிட்டார். உடனே " ஏன்? நெருப்பணைக்கும் இஞ்சின் இன்னம் வரவில்லையா?" என்று மறுமொழி கிடைத்தது.

சமய சஞ்சீவி ஐயர்:—நெருப்பணைக்கும் இஞ்சினை நீங்கள் எதற்காக இங்கே அனுப்பினீர்கள்? இந்த வீட்டில் நெருப்புப் பிடிக்கவில்லையே!

எக்ஸ்சேஞ்ச்:—நெருப்புப் பிடிக்கவில்லையா! கொஞ்ச நேரத்திற்கு முன், இந்த நம்பரிலிருந்து யாரோ ஒருவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலோடு பேசினார். அவர்கள் பேசி முடிந்த பிறகு, கொஞ்ச நேரத்திற்கெல்லாம் டெலிபோன் ரிஸீவரை யாரோ கையில் எடுத்தது தெரிந்தது. எந்த நம்பரோடு சேர்க்க வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். மறுமொழி இல்லை. மேலும் பலதடவைகள் கேட்டோம்; எவரும் மறுமொழி கொடுக்கவில்லை. ஆனால் கடைசியாக ஒருகுழந்தை, " அம்மா, ஊவா சுட்றது " என்று கூச்சலிட்டு அழுத ஓசை கேட்டது. அதே சமயத்தில், பல ஜனங்கள் 'நெருப்பு நெருப்பு' என்று கூச்சலிட்டுக் கதறியழுது புலம்புவதுபோன்ற ஓசை கேட்டது. அதைக் கேட்கவே, எங்களுக்கு சந்தேகம் உண்டாகி விட்டது. வீட்டில் நெருப்புப் பிடித்து கொண்டிருக்க வேண்டுமென்றும், பெரியவர்கள் அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டதால், குழந்தை டெலிபோனில் சொல்ல முயன்றிருக்கு மென்றும், அதற்குள் அதையும் நெருப்பு சுட்டுவிட்டதால் ஓடிவிட்டதென்

றும் நினைத்து, நாங்கள் உடனே நெருப்பணைக்கும் இஞ்சின் இருக்கு மிடத்திற்கு செய்தி அனுப்பினோம்—என்றார்.

உடனே சமய சஞ்சீவி ஐயர் அந்த விஷயத்தை ஸார்ஜண்டினிடத்தில் கூறிவிட்டு, பக்கத்திலிருந்து கிராமபோன் இயந்திரத்தையும், பிளேட்டுகளின்மேலே வைத்திருந்த பிளேட்டையும் பார்த்தார். அவருடைய முகம் வியப்பினால் சரேலென்று மாறியது. அவர் உடனே உண்மையைக் கண்டுகொண்டு, மேலே இருந்த பிளேட்டை எடுத்து, கிராமபோன் இயந்திரத்தில் வைத்து, விசையை முடுக்கிவிட, அது சுற்றத் தொடங்கியது. அதற்குள்ளிருந்து, பாட்டு கணீரென்று வரத்தொடங்கியது. அநுமார் லங்கையைக் கொளுத்திய காலத்தில் அங்கிருந்த ஜனங்கள் ஓலமிட்டுப் புலம்பியது போல, மிஸ் சோதாநாயம்மாள் புரளியாகப் பாடியிருந்த ஆசியப் பாட்டு வெளிப்படவே, அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் 'ஓகோகோ' வென்று சிரித்து ஆர்ப்பரித்தனர்.

நெருப்பணைக்கும் இஞ்சின் ஸார்ஜன்ட் உடனே அவ்விடத்தை விட்டு விசையாகக் கீழே சென்று, குழாய்களை எடுத்து இஞ்சினில் வைக்கச் செய்து, தமது பரிவாரங்களுடன் ஏறி உட்கார்ந்து, மணியை அடித்துக்கொண்டு தலை தெறிக்க வண்டியை ஓட்டிக் கொண்டு போய்விட்டார்.

உடனே சமய சஞ்சீவி ஐயர் அங்கிருந்த ஜனங்களை நோக்கி, "நிஜத்தைத் தெரிந்து கொண்டீர்களல்லவா. எல்லாரும் தயவு செய்து போங்கள். இந்தப் பிளேட்டை வைத்ததில், இந்தத் தவறு நடந்துபோயிருக்கிறது" என்று நயமாக வற்புறுத்திக் கூற, சிலர் உடனே வெளியில் சென்றனர். உணர்ச்சியற்ற அருக்கட்டைகளான பலர் மேலே என்ன நடக்கிறதென்பதையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற கருத்துடன் தயங்கித் தயங்கி அங்கேயே நின்றனர்.

அப்போது சமய சஞ்சீவி ஐயர் அம்மணியம்மாளை நோக்கி, "இந்தப் பிளேட்டை நீங்கள் வைத்தீர்களா அம்மா?" என்று மிக மரியாதையாக வினவினார்.

அம்மணியம்மாள்:— நாங்கள் ஏராளமான ஆசியப் பிளேட்டுகள் வைத்திருக்கிறோம். அதில் லங்கா தகனப் பிளேட்டும் ஒன்று. நான் என் குழந்தையோடு ஏதோ காரியமாய் மேலே வந்தேன்.

அப்போது என்னைப் பக்கத்து வீட்டு அம்மாள் கூப்பிட்டார்கள். குழந்தையை விட்டுவிட்டு நான் கொஞ்ச நேரத்திற்குமுன் பக்கத்து வீட்டிற்குப் போனேன். அதற்குள் யாரோ குழந்தையைத் தூக்கி இதன்மேல் வைத்திருக்கிறார்கள்; இந்த லங்காதகனப் பிளேட்டை யும் எடுத்து வைத்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் யார் செய்த வர்கள் என்பது தெரியவில்லையே!

சமய சஞ்சீவி ஐயர்:—நீங்கள் பக்கத்து வீட்டிற்குப் போன போது, உங்கள் சமயல்காரர் எங்கே இருந்தார்?

அம்மணியம்மாள்:—ஏண்டா ராமா, நீ அப்போது முதல் சமய லறையிலா இருந்தாய்? நீ மேலே வரவில்லையா? கிராமபோன் பிளேட்டின் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா?

ராமன்:—நீங்கள், இந்த வேளைக்கு வெங்காய சாம்பார் தயா ரிக்கும்படி என்னிடம் சொல்லிவிட்டு, குழந்தையோடு மேலே ஏறி னீர்க ளல்லவா. உடனே கொஞ்ச நாழிகைக்கெல்லாம், வெங்காயம் வாங்கக் கடைக்குப் போனேன்; போய் வாங்கிக் கொண்டு வந்தேன். வாசலில் ஒரு மோட்டார் வண்டி நின்றது. நம்முடைய மாசிலா மணிப் பிள்ளையின் ஆளை இவர்கள் இருவரும் பிடித்துக்கொண் டிருந்தார்கள்; வீட்டில் வக்கீல் இருக்கிறாரா வென்று என்னிடம் கேட்டார்கள்.

அம்மணியம்மாள்:—(மாசிலாமணிப் பிள்ளையின் ஆளைப் பார்த்து) ஏனப்பா? நீ மேலே வந்து, இதை வைத்தாயா?

அந்த ஆள்:—இல்லை அம்மா. எங்கள் எஜமானர், வக்கீல் ஐயா வீட்டில் இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு வரச் சொன்னார் கள். வந்து நடையில் நின்று கொண்டு கூப்பிட்டேன். ஒருத்தரும் குரல் கொடுக்கவில்லை. உடனே நான் வெளியில் வந்தேன். இவர் கள் யாரோ தெரியவில்லை; என்னைப் பிடித்துக்கொண்டு மிரட்டு கிறார்கள்.

சமய சஞ்சீவி ஐயர்:—உன்னுடைய எஜமான் யாரப்பா?

அந்த ஆள்:—நெல் மண்டி மாசிலாமணிப் பிள்ளை.

சமய சஞ்சீவி ஐயர்:—அவர் இப்போது எங்கே இருக்கிறார்? அவரை நான் பார்க்கவேண்டும். என்னோடுகூட வந்து அவரைக் காட்டு.

அந்த ஆள் :—நீங்கள் யாரென்பதே எனக்குத் தெரியவில்லையே! உங்கள் உத்தரவுப்படி நான் ஏன் நடக்கவேண்டும்?

சமய சஞ்சீவி ஐயர் :—நீ ஏன் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாய்! நான் உனக்கு உத்தரவு கொடுக்கிறதாக நினைக்காதே! உங்கள் எஜமானர் நெல் மண்டிக்காரர் என்று சொன்னாயே! அவரிடம் நெல் வியாபார விஷயமாய்க் கொஞ்சம் பேசவேண்டும். அவர் இருக்குமிடத்தை தயவுசெய்து கொஞ்சம் காட்டப்பா.

அந்த ஆள் :—எனக்கு வேறோர் இடத்திற்குப் போகவேண்டிய அவசர காரியமிருக்கிறது. நான் இப்போது உங்களோடு வர முடியாது. என் எஜமானருடைய கடை இதோ பக்கத் தெருவில் இருக்கிறது. அங்கே போய் விசாரித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

சமய சஞ்சீவி ஐயர் :— (சமயற்காரனை நோக்கி) ராம ஐயரே, இந்த ஆளுடைய பெயர் என்ன?

ராமன் :—நீங்கள் யாரென்பது தெரியவில்லை. நீங்கள் அயலாருடைய வீட்டிற்குள் வந்து இருந்துகொண்டு அட்டகாசம் செய்து கோர்ட்டில் வக்கீல் கிராஸ் கேள்விகள் கேட்பதுபோல் எல்லாரையும் மிரட்டுகிறீர்கள். எங்களுக்கு ஒன்றும் பிரியவில்லை. நீங்கள் கேட்பதற்கு நான் பதில் சொல்ல முடியாது.

சமய சஞ்சீவி ஐயர் :— என்ன ராம ஐயர், நீர்கூட இப்படிக் கோபிக்கிறீரே! நான் யார் என்பதைத் தெரிந்துகொள்ள நீர் ஆசைப்பட்டால், அதையும் சொல்லுகிறேன். நான் போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல். இந்த வீட்டிலிருந்து கொஞ்சநேரத்திற்கு முன் யாரோ ஒருவர் என்னுடன் பேசி, சில முக்கியமான விஷயங்களைத் தெரிவித்தார்கள். அப்படிப் பேசியவர் யாரென்று தெரிந்துகொள்வதற்காக நான் உடனே புறப்பட்டு மோட்டார் வண்டியில் ஐந்தே நிமிஷத்தில் இங்கே வந்தேன். வந்தபோது இந்த மனிதன் வீட்டிற்குள்ளிருந்து வெளியில் வந்தான். வேறு யாரும் வீட்டில் இல்லை என்பதும் தெரிகிறது. ஆகையால், இவனுடைய பெயரையாவது தெரிந்து கொள்ளலாமென்று கேட்கிறேன். அவ்வளவுதான் சங்கதி. இப்போது உமக்கு திருப்திதானா?

ராமன் :—இதெல்லாம் யாரை ஏமாற்றுகிற வித்தை. நீர் நெல் வியாபாரம் செய்ய வேண்டுமென்று கொஞ்ச நேரத்திற்கு முன் இந்த வடிவேலனிடம் சொன்னீர்கள். இப்போது போலீஸ் இன்ஸ்

பெக்டர் ஜெனரல் என்கிறீர்கள். எது நிஜமானது, எது பொய்யானது என்பது தெரியவில்லை. ஒரே நிமிஷத்தில் தலைப்பாகை மாற்றுவதில் நீர் கெட்டிக்காரர் என்பது பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. போலீஸாரே அப்படித்தான். அன்றையதினம் சில போலீஸார் வந்து இப்படித்தான் புரட்டாய்ப் பேசி வீட்டில் நுழைந்து கொலை நடத்திவிட்டார்கள். நீர் இப்போது வீட்டில் நெருப்பை வைத்துக் கொளுத்த ஏற்பாடு செய்தீர்போ லிருக்கிறது. போலீஸாருடைய சகவாசமே கெட்டது. நீர் முதலில் வெளியில் போம்.

அம்மணியம்மாள் :—(அதிருப்தியோடு) ஆடேய், ராமா, இருந்தாலும் உனக்கு இவ்வளவு வாய்ப் பதற்றம் ஆகாது. யாராவது பெரிய மனிதர்கள் கேட்டால், மரியாதையாய்ப் பதில் சொல்லேன். அதனால் உனக்கு கௌரதை குறைந்தா போகிறது. யார் வந்தாலும், அவர் உனக்கு ஜென்ம விரோதிபோல் நினைத்து, மரியாதைக் குறைவாகப் பேசுகிறாய். இதனால் வீட்டு எஜமானருக்கு அகௌரதை உண்டாகும் என்பதை நீ கவனிக்கமாட்டேனென்கிறாய். நீ சமயலறைக்குப்போ. இங்கே இருக்கவேண்டாம்—என்று கோபமாகக் கூறினாள்.

உடனே ராமன் முறைப்பாக அவ்விடத்தை விட்டு அப்பால் போய்விட்டான்.

அம்மணியம்மாளுடைய நல்ல விவேகத்தைக் கண்ட சமய சஞ்சீவி ஐயர் தமக்குள் சந்தோஷ மடைந்தவராய், அம்மணியம்மாளை நோக்கி, "பாலிய வயதுக்காரர்கள் அப்படித்தான் முறுக்காய்ப் பேசுவார்கள். அதைப்பற்றி மற்றவர் ஆயாசப்படுவதும் சரியல்ல. அதிலிருந்தே அவர்களுடைய எஜமானரைப் பற்றி அகௌரதையாக நினைப்பதும் சரியல்ல. நான் உங்களுக்கு ஒரே ஒரு வார்த்தை சொல்ல விருப்புகிறேன். நீங்கள் உள்ளே இருக்கும்போது வெளிக் கதவை மூடிவையுங்கள். எங்கேயாவது போகவேண்டுமானால் கதவைப் பூட்டிக் கொண்டு போங்கள். இவ்வளவு பெரிய வீட்டை இப்படித் திறந்து போட்டு விட்டுப் போவதால், கண்டவர்களும் உள்ளே நுழைந்து பலவிதமான சூழ்ச்சிகளுக்கு இதை உபயோகப் படுத்திக் கொள்ள இடம் கொடுக்கிறது. நான் இப்படிச் சொல்வதைப் பற்றி என்மேல் நீங்கள் ஆயாசப்படவேண்டாம். அன்றைய தினம் இந்த வீட்டில் ஒரு கொலை நடந்துவிட்டது. இன்று நெருப்பணைக்கும் இஞ்சின்

வரும்படியான நிலைமையை யாரோ செய்து விட்டார்கள். இப்போது பாருங்கள் நூற்றுக் கணக்கான ஜனங்கள் வீட்டிற்குள் நுழைந்து கொண்டு வெளியில் போகமாட்டேனென்கிறார்கள்" என்றார். அதைக் கேட்டவுடன் அம்மணியம்மாள் வெட்கத்தினால் குன்றிப் போய், "நீங்கள் சொல்வது நிஜந்தான். இனி நான் கதவை மூடித்தான் வைக்கவேண்டும். இப்போதே கதவைத் தாளிட்டு விடுகிறேன். இவர்களை நீங்கள்தான் வெளியில் அனுப்ப வேண்டும்" என்றாள்.

அதைக் கேட்ட சமய சஞ்சீவி ஐயர் அங்கிருந்த ஜனங்களைப் பார்த்து, "நாமெல்லோரும் வெளியில் போவோம் வாருங்கள். அம்மாள் கதவை மூடித் தாள்போட்டுக் கொள்ளட்டும்" என்று நிரம்பவும் விநயத்தோடு கூறி அங்கிருந்தோர் அனைவரையும் அழைத்துக் கொண்டு வெளியில் சென்று, மோட்டார் வண்டியில் உட்கார்ந்து கொள்ளும் பொருட்டு, அது விடப்பட்ட இடத்தைப் பார்க்க, அவருடைய வண்டி காணப்படவில்லை. அவருடன் வந்த ஜெவான் பெரிதும் திகைப்பும் கலக்கமும் அடைந்து, "வண்டிகாணப் படவில்லையே எஜமானே! இங்கேதானே விட்டேன்!" என்றான்.

அவனைப் போலவே பிரமித்து நின்ற சமய சஞ்சீவி ஐயர் அப்படியே ஸ்தம்பித்துப்போனார். அங்கிருந்த ஜனங்கள் அந்தச் செய்தியை உடனே தெரிந்துகொண்டார்களாதலால், "அடேடே! போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலுடைய வண்டியை பட்டப் பகலில் யாரோ கொண்டு போய் விட்டார்களாமே!" என்று ஒருவருக்கொருவர் கூறிப் புரளி செய்யத் தொடங்கினர். அதற்குமேல் அங்கிருக்க விரும்பாத சமய சஞ்சீவி ஐயர், "நீ நம்முடைய வண்டி போயிருக்கும் சுவட்டைப் பார்த்துக் கொண்டே போ. அது எவ்வளவு தூரம் போகிறதோ அவ்வளவு தூரம் போய்ப் பார்த்து விட்டுவா" என்றார்.

அதே போல ஜெவான் அந்த மோட்டார் வண்டியின் கால்களின் சுவட்டைப் பின்பற்றிப் போகத் தொடங்கினான். உடனே சமய சஞ்சீவி ஐயர் அங்கிருந்து புறப்பட்டு, கால் நடையாகவே சென்று, அடுத்த தெருவில் மாசிலாமணிப் பிள்ளையின் நெல் மண்டி எங்கே இருந்த தென்பதை விசாரித்து, அங்கே போய், அதன் சொந்தக்காரரைக் கண்டு அவரிடம் தந்திரமாகப் பேசி, அவருடைய வேலைக்காரனை வடிவேலனை அவர் சற்று முன்

வக்கீலின் வீட்டிற்கு அனுப்பிய துண்டா வென்பதை விசாரிக்க, அவர் அனுப்பியதாகச் சொல்லவே, அதைக் கேட்டுக்கொண்டு அங்கிருந்து தமது ஜாகைக்குப் போய்ச்சேர்ந்தார்.

அவர் கால் நடையாகத் திரும்பிவந்ததைக் கண்டு அவருடைய டிப்டிகள் இருவரும் திடுக்கிட்டு அளவற்ற ஆச்சரிய மடைந்து ஆவலோடு அவருடைய வாயைப் பார்க்க, அவர், "என்னை மிரட்டிய ஆளைக் கண்டு பிடிக்க ஓடியதில், மோட்டார் வண்டியைப் பறிகொடுத்ததுதான் லாபம்" என்றார்.

எதிர் பாராத அந்தச் செய்தி அவர்கள் இருவருடைய உடம்பையும் தூக்கிப் போட்டது. அதன் கருத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள மாட்டாமல் இருவரும் அவரைப் பார்க்க, அவர் உடனே விஷயங்களை விவரமாகக் கூறினார். வக்கீலின் வீட்டிற்கு நெருப்பணைக்கும் இஞ்சின் வரும்படியாக ஏற்பட்ட விநோத சம்பவத்தைக் கேட்டு அவர்கள் ஒருபுறத்தில் அளவற்ற ஆச்சரியமடைந்ததன்றி, சமய சஞ்சீவி ஐயருடைய மோட்டார் வண்டி காணாமல் போனதைப் பற்றி அபாரமான வேதனையும் விசனமும் கொள்ளலாயினர்.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்த சமயத்தில் டெலிபோன் இயந்திரம் கண கண வென்று ஓசை செய்ய, உடனே பராங்குச முதலியார் எழுந்தோடி, "யார் பேசுகிறது?" என்று விசாரித்தார்.

மற்றவர், "நான் போலீஸ் சூபரின்டென்டெண்ட். டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலோடு வண்டி யோட்டிக் கொண்டு போன ஜெவான், போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து நாகூர் மீரா லெப்பையிடம் தகவல்களை யெல்லாம் சொன்னானாம். மோட்டார் வண்டியின் கால் சுவடுகள் கொஞ்ச தூரம் வரையில் தெரிந்தனவாம்; அதற்குமேல் தார் ரஸ்தாவாகையால் தெரியவில்லையாம். அவன் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து நாகூர் மீரா லெப்பையிடம் சங்கதிகளைச் சொன்னானாம். அவர் உடனே எனக்குத் தகவல் தெரிவித்தார். எல்லா ஸ்டேஷன்களுக்கும் சங்கதியைத் தெரிவித்திருக்கிறோம். இந்தப் பட்டணத்திலுள்ள போலீஸ் சிப்பந்திகள் எல்லோரும் வண்டியைத் தேடுகிறார்கள். காரியம் இப்படி நடந்ததைக் கேட்டு, நாங்கள் எல்லோரும் நிரம்பவும் விசனிக்

கிறேம். மிஸ்டர் ஐயரிடம் விஷயத்தைத் தெரிவியுங்கள். நான் கூடிய விரைவில் வந்து பார்க்கிறேன்.'' என்றார்.

அதைக் கேட்டுக் கொண்டு பராங்குச முதலியார் சமய சஞ்சீவி ஐயரிடம் சென்று டெலிபோனில் தெரிந்து கொண்டதைக் கூறினர்.

அதைக் கேட்டவுடன் சமய சஞ்சீவி ஐயர் பெரிதும் கிலேச மடைந்தவராய், "இது இதுவரையில் ஏற்படாத பெரிய மானக்கேடு. சுயமரணபுரத்தில் நமக்கு இந்தப் பெருமை ஏற்படுகிறது! ஜில்லா துரையின் வண்டி போனதைப் பற்றி நாம் ஆயாசமடைந்தோம். இப்போது நாம் யார்மேல் ஆயாசப்படுகிறது.'' என்றார்.

விநாயகம் பிள்ளை :—டெலிபோன் மூலம் எஜமானை மிரட்டிய மனிதனைச் சேர்ந்தவர்களே வேண்டுமென்று இப்படிச் செய்திருக்க வேண்டும். டெலிபோனில் பேசிய ஆளைக் கண்டுபிடிக்கப் போனதனுல் கோபங் கொண்டு, வண்டியைக் கொண்டு போய் அவனுடைய சௌரியத்தைக் காட்டுகிறான்போ லிருக்கிறது.

பராங்குச முதலியார் :—என் மனதில் ஒருவிதமாய்ப் படுகிறது. அந்த வக்கீலின் சம்சாரத்தின் மேல்தான் எனக்கு சம்சய முண்டாகிறது. அந்த அம்மாளே டெலிபோனில் உங்களோடு பேசி பய முறுத்திவிட்டு, குழந்தையை வைத்து விட்டுப் போயிருக்கலாமென்று நான் நினைக்கிறேன். பின்னுல், அந்த அம்மாள் ராமனைக் கண்டித்து மிரட்டியதும் வெறும் சாகஸமென்று நினைக்கிறேன். அந்த அம்மாளுடைய தூண்டுதலின் மேல்தான் யாரோ வண்டியை அபகரித்துக் கொண்டுபோயிருக்க வேண்டும்

சமய சஞ்சீவி ஐயர் :— டெலிபோனில் நம்மை மிரட்டியவர் நாகூர் மீரா லெப்பைக்குப் பரிந்தல்லவா பேசினர். அப்படியானுல் இந்த வக்கீலின் சம்சாரம் நாகூர் மீரா லெப்பைக்காக அவ்வளவு தூரம் பரிந்து ஏன் பேசவேண்டும்?

பராங்குச முதலியார் :—அது பொய் மிரட்டலா யிருக்கலாம். உண்மையில் நாம் நாகூர் மீரா லெப்பைக்குக் கெடுதல் செய்ய வேண்டுமென்ற கருத்தோடு, அவர்மேல் நமக்கு சம்சயமும் கோபமும் உண்டாவதற்காக, இப்படித் தந்திரம் செய்திருக்கலாம்-என்றார்.

சமய சஞ்சீவி ஐயர் அதற்கு எவ்வித மறுமொழியும் கூற வில்லையாதலால், அவர் அந்த அபிப்பிராயத்தை ஆமோதித்தாரா இல்லையா என்பது தெரியவில்லை.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்திருந்த சமயத்தில் ஆர்டர்லி சமய சஞ்சீவி ஐயருடைய விலாசமுள்ள ஒரு கடிதத்தைக் கொணர்ந்து வைத்து விட்டுச் சென்றான். அதில் ஒரு கடிதமும், ஒரு கட்டாகக் கட்டப் பெற்றிருந்த ஏராளமான மனுக்களும் காணப்பட்டன. அந்தக் கடிதம் இந்தியா சட்ட சபை மெம்பர் குரங்கசாமி ஐயங்காரால் எழுதப்பட்டிருந்தது. அன்றைய பகலுக்குள் அந்த ஊரிலுள்ள சாயப்புமார்கள் எல்லோரும் மறுமொழி யனுப்பி விட்டார்களாதலால் அவைகளை சமய சஞ்சீவி ஐயருடைய பார்வைக்கு அனுப்பி இருப்பதாகவும், மறுபடி திருப்பி அனுப்பி விடும்படியும் குரங்கசாமி ஐயங்கார் எழுதியிருந்தார்.

அந்த ஊரில் உள்ள பெரும்பாலான முஸ்லீம்களின் ஸ்திரீகள் ஹிந்துக்களின் ஸ்திரீகளோடு அன்னியோன்னியமாகப் பழகுகிறவர்களாயும், அவர்களில் அநேகர் அவர்களுடைய வீட்டு வேலைகளைச் செய்பவராயும் இருந்தனராதலால், அவர்கள் கோஷா முறையை அவ்வளவு கடுமையாக அநுஷ்டிக்கிறதில்லை யென்பது தெரிந்தது. ஆனாலும் வழக்கத்தில் அப்படி இருந்தாலும் சட்ட பூர்வமாய் துரைத்தனத்தார் தங்கள் வழக்கத்தில் தலையிடுவதை இவர்கள் விரும்பவில்லை. சுமார் 26 பேர்கள் கோஷா முறையைக் கண்டிப்பாய் அநுசரிக்கிறவர்கள் என்பதும் தெளிவாயிற்று. குரங்கசாமி ஐயங்கார் இந்த விஷயத்தில் தலையிட்டாலோ, அல்லது, அதைப் பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டாலோ, இவர்கள் அவருடைய மண்டையை ஆயிரம் சுக்கலாய் உடைத்து அவருடைய கையில் கொடுப்போமென்று உறுதியாய் வாக்களித்திருந்தனர். அதைப் பார்த்தவுடன் சமய சஞ்சீவி ஐயருக்கு சிரிப்பு உண்டாயிற்றாலும், அவர் அதை அடக்கிக்கொண்டு, “மிஸ்டர் விநாயகம், இந்த 26 விலாசங்களில் 1, 4, 14, 44, 144 என்னும் நம்பர்கள் இருக்கின்றனவா என்று பாருங்கள்” என்று கூறி அவரிடம் கொடுத்தார்.

விநாயகம் பிள்ளை அவைகளை வாங்கிப் பார்த்து விட்டு, “லெப்பைத் தெருவில் 1, 4, 14, 44 நம்பர்களில் கோஷா

முறையைக் கண்டிப்பாய் அநுசரிக்கிறவர்கள் இருக்கிறார்கள்" என்றார்.

சமய சஞ்சீவி ஐயர், "இப்போது வீட்டுப் பிளான்களை எடுத்து இவைகளில் எதிலாகிலும் நடையில் மாடிப் படிக்கட்டு இருக்கிறதா என்று பாருங்கள்" என்றார்.

விநாயகம் பிள்ளை அதை ஆராய்ந்து பார்த்துவிட்டு, ஏமாற்றத்தோடு உதட்டைப் பிதுக்கினார்.

சமய சஞ்சீவி ஐயர், "சரி; குரங்கசாமி ஐயங்காரின்மேல் முஸ்லீம்களின் பகைமையை உண்டாக்கி வைத்ததுதான் லாபம். இருக்கட்டும். லெப்பைத் தெருவில் உள்ள மேலே குறித்த நான்கு வீடுகளில் எதிலாகிலும் பின்புறத்தில் வாசற்படி, நடை, மாடிப் படிக்கட்டு ஆகியவை இருக்கின்றனவா என்று பாருங்கள்" என்றார். விநாயகம் பிள்ளை அதையும் ஆராய்ந்து பார்த்துவிட்டு இல்லை என்று தலையை அசைத்தார்.

சமய சஞ்சீவி ஐயர், "இப்போது ஒரு விஷயம் நமக்கு நிச்சயமாகிவிட்டது. முதலாவது ஸர்ஜன் தம்மை அழைத்துக் கொண்டு போன வீட்டின் நம்பர் 144 என்று சொன்னாரல்லவா; அது உண்மையில் கோஷா முறையை அநுஷ்டிப்பவர்களுடைய வீடல்ல." என்றார்.

பராங்குச முதலியார் :—ஆகையால், யாரோ ஆண் பிள்ளைகள் தாங்கள் இன்னார் என்பது தெரியாமல் இருக்க வேண்டுமென்ற கருத்துடன், கோஷாவைப்போல் தங்களை மறைத்துக்கொண்டு வேலை செய்கிறார்கள் என்பது நிச்சயமாகிறது—என்றார்.

அப்போது ஓர் ஆர்டர்லி உள்ளே வந்து மேஜையின்மேல் ஒரு கடிதத்தை வைத்து விட்டுச் சென்றான். அதன் மேல்விலாசத்தில் சமய சஞ்சீவி ஐயருடைய பெயர் காணப்பட்டதாகையால் அவர் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அது அடியில் வருமாறு எழுதப் பட்டிருந்தது :—

நான் நாகூர் மீரா லெப்பையின் விஷயத்தில் நீங்கள் ஏதேனும் கெடுதலான காரியம் செய்தால், அதனால் உமக்குக் கெடுதல் நேருவது நிச்சயம் என்று எச்சரித்தவுடனே, நீர் மோட்டார் வண்டியில் உட்கார்ந்துகொண்டு என்னைப் பிடித்துக்கொள்ள

வேண்டுமென்று வக்கீல் வயத்துநாதையருடைய வீட்டிற்கு ஓடி வந்ததற்கு உடனே தண்டனை கொடுத்துவிட்டேன். நீர் சாதாரண மான மனிதரன்று. மற்றவருக்கு வாயில் பல் என்றால், உமக்கு வயிற்றில் பல்; நீர் புஷ்பம்போல் மெதுவாய் நடந்து கொண்டே இருந்து, திடீரென்று புலிபோல் பாய்வீர். ஆகையால் இப் போது நீர் இந்த ஊரில் இருப்பது சரியல்ல. நீர் இந்த நோட் டீஸ் கண்ட பின் 3. மணி நேரத்திற்குள் இந்த முகாமைவிட்டு தூரமான வேறு ஊருக்குப் போகவேண்டியதென்று கண்டிப் பாய் உத்தரவிடுகிறேன். தவறி, இந்த ஊரிலேயே இருப்பீரானால் இன்றிரவு கழிவதற்குள் உம்முடைய மனைவியின் தாலி அறுந்து போவது முக்காலும் நிச்சயம்.

—என்ற கடிதத்தைப் படித்த சமய சஞ்சீவி ஐயர் அந்தக் கடி தத்தின் விஷயம் தமது டிப்டிகளுக்குத் தெரியலாமா கூடாதா என்பதை நிச்சயிக்கமாட்டாமல் அப்படியே மயங்கி ஓய்ந்து உட் கார்ந்திருந்தார்.

---

## அத்தியாயம்—4

### தினசரி மூட்டையின் திருநாம ரிபோர்ட்டர்

தஞ்சை ஜில்லா ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை கர்ப்பிணியாயிருந்த தமது மனையாட்டியை, அவளுடைய தாய் வீட்டிற்கு அனுப்பியிருந்தா ராதலால், அவர் தமது பங்களாவில் ஏகாங்கியா யிருந்து வந்தார். அவர் சிறிதும் படாடோபமின்றி அடக்கமான வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தாராதலால், அவருடைய பங்களா வில் ஒரு சமயற்காரனும், ஒரே ஒரு சேவகனும் இருந்தனர். கந்தசாமிபிள்ளையின் ஆருயிர் நண்பர்களான கோபாலசாமி பிள்ளை யும், துரைஸாமி ஐயங்காரும் தூரமான இடங்களில் உத்தியோகம் வகித்தனராதலால், அதற்குமுன் அடிக்கடி வந்து குதூகலமாய் ஸல்லாபித்திருந்ததுபோல இப்போது செய்ய இயலாமல் போனது பற்றி, கந்தசாமிபிள்ளை உலகில் பற்றற்ற துறவிபோல் இருந்து வந்தார். ஆயினும், எவரேனும் ஓர் அன்னியோன்னிய நண்பருடன் சிறிது நேரமாகிலும் சந்தோஷமாய்ப் பொழுது போக்காவிடில்,

அவருக்கு அது நிரம்பவும் துன்பகரமா யிருந்ததாகையால், சுய மரணபுரத்தில் புதிதாய்த் தமக்குப் பழக்கமான இரண்டொரு பெரிய உத்தியோகஸ்தர்களை அடிக்கடி வரவழைத்து வைத்துக் கொண்டு மாலை நேரங்களில் உல்லாசமாய் அவருடன் சிறிதுகாலம் சம்பாஷித்து, அவரை அனுப்புவது வழக்கம்.

அந்த ஜாப்தாவில் அவ்வூர் ஸப்-கலெக்டர் மிஸ்டர் அநந்த ராம சர்மா என்ற யௌவனப் புருஷர் சேர்க்கப்பட்டிருந்தாராத லால், அவர் வெளியூர்களில் சுற்றுப்பிரயாணம் செய்யாத காலத் தில் ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையுடன் பேசிக்கொண்டிருப்பதை அதிகமாய் விரும்பினர்.

ஒருநாள் மாலை சுமார் ஆறு மணி சமயத்தில் ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையும், ஸப்-கலெக்டர் அநந்தராம சர்மாவும், அவருடைய பங்களாவில் காற்றோட்டமான ஓரிடத்தில் சாய்மான நாற்காலி களில் இருந்து உல்லாஸமாய் சம்பாஷித்து சிரித்துக்கொண்டிருந் தனர்.

சர்மா :—இந்த சமயசஞ்சீவி ஐயரிடம் ஜூலியஸ் சீஸருடைய சில குணாதிசயங்கள் இருக்கின்றன. தான் என்னும் மமதை இல்லாத வர்போல் காட்டிக்கொண்டாலும், ஒவ்வோர் அற்ப விஷயத்திலும் அது இருப்பது கண்கூடாகத் தெரியும். முகஸ்துதியால் தம்மை ஏமாற்ற யாராலும் முடியாது என்று அவர் விளம்பரப்படுத்திக் கொள்வார். யாராவது ஒருவர் வந்து, 'எவருடைய முகஸ்துதி யாலும் ஏமாறாத இப்பேர்ப்பட்ட அரிய மேதாவி இந்த உலகத்தில் உங்களைத் தவிர வேறு யாருமில்லை. ஆனல் அதை நேரில் சொல் வது சரியல்ல' என்று சமயசஞ்சீவி ஐயரிடம் சொன்னல், உடனே ஐயருக்கு இந்த உலகத்தையே பட்டம் கட்டினமாதிரி ஆகிவிடு கிறது. அந்தமாதிரி தந்திரமாய் முகஸ்துதி செய்தவனுக்கு, அவன் கேட்காமலே, அவன் உத்தேசித்து வந்த அநுகூலத்தை இரட்டிப் பாய்ச் செய்தனுப்புவார். இப்படித் தம்மைப்பற்றி இந்திரன் சந் திரன் என்று அதீதமாய் நினைத்துக்கொண்டிருப்போர் எப்படியும் அவமானப்பட்டுத்தான் போவார்கள். அவர் மற்ற போலீஸார்க ளிடம் அற்ப தவறைக் கண்டாலும், அதைப் பிரமாதப்படுத்தி விடுவார். இப்போது அவரே தம்முடைய மோட்டார் வண்டியை பட்டப்பகலில் கோட்டைவிட்டுவிட்டார்.

கந்தசாமி பிள்ளை:—(சந்தோஷ முகமலர்ச்சியோடு) சர்வக்ஞரான கடவுளே ஸ்தோத்திரப்பிரியர் என்று கண்டுதானே ஞான திருஷ்டியுடைய ரிஷிகளும், துறவிகளும், இதர மேதாவிகளும், கடவுளுடைய பெருமைகளை மனதால் எண்ணியும், வாக்கால் சொல்லியும் பக்தியோகம் செய்கிறார்கள். அந்த குணம் மனிதரிடம் இருக்கக்கூடாதென்றால், அது ஆகிற காரியமா! என்ன இருந்தாலும், நம்மவர்களில் இவ்வளவு அபாரமான திறமையுடையவர்கள் இருப்பதைப்பற்றி நாம் சந்தோஷமும், பெருமையுமே அடையவேண்டும். இப்பேர்ப்பட்ட மேதாவிகள் நம் தேசத்தில் ஏராளமாய் இருந்தால்தான், மேல்நாட்டார் நம்மை மதித்து கௌரதையாக நடத்துவார்கள். எவரிடத்திலும் குறைபாடிருப்பது இயற்கையே. இருந்தாலும் குணம் நாடி, குற்றமும் நாடி, மிகை நாடி, மிக்க கொளல் என்று திருவள்ளுவர் சொல்லியிருப்பது போல, ஒருவரிடம் மேன்பாடுகள் அதிகமாயிருக்கின்றனவா, குற்றங்கள் அதிகமா யிருக்கின்றனவா என்பதைப் பார்த்து, நாம் அதிகமாயிருப்பதையே கவனித்துப் பெருமைப்படுத்த வேண்டுமென்றி குறைவாயிருப்பதை நாம் கவனிக்காமல் விட்டுவிட வேண்டும்.

சர்மா:—(சிரித்துக்கொண்டு) அப்படித்தான் நடந்துகொள்ளுகிறோம். இருந்தாலும், சமயத்தில் இரண்டையும் சொல்லத்தான் வேண்டி யிருக்கிறது. அதிருக்கட்டும். நீங்கள் இன்னொரு விஷயத்தைப் பத்திரிகையில் படித்தீர்களா?

கந்தசாமி பிள்ளை:—எந்த விஷயம்?

சர்மா:—ஒருவருஷத்திற்கு முன்பு ஒருவன் உங்களுடைய பங்களாவில் திருடி தண்டனை பெற்றானே. அவன் விடுதலையடைந்து வெளியில் வந்துவிட்டானமே!

கந்தசாமி பிள்ளை:—ஆம் படித்தேன். அவனைத் தொடர்ந்து போன ஸப்.இன்ஸ்பெக்டர் ஒரு வக்கீலின் வீட்டில் கொலை செய்து விட்டதாக ஒரு செய்தி வெளியா யிருக்கிறதே!

சர்மா:—அந்த ஆசாமியின் பெயரைக் கண்டுபிடிக்க போலீஸாரால் இன்னமும் முடியவில்லை. இனி நீங்கள்கூட கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

கந்தசாமி பிள்ளை:—என் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

சர்மா :—அவன் தண்டனை பெற்ற காலத்தில், அவன் உங்களை பயமுறுத்திவிட்டுப் போனதாகப் பத்திரிகையில் வந்ததே; அது உங்களுக்கு ஞாபக மிருக்கிறதா ?

கந்தசாமி பிள்ளை —என்ன சொல்லி பயமுறுத்தினன் ? எனக்கு நினைவில்லையே !

சர்மா :—'இந்த ஒரு வருஷத்தை நான் ஒரு நிமிஷமாய்க் கழித்துவிட்டு வந்து அந்தக் கந்தசாமி பிள்ளைக்கு சரியான மரியாதை நடத்துகிறேன். நிரபராதியான என்னை தண்டனைக்குக் கொண்டு வந்த அந்த மனிதருடைய பங்களாவை சூறைவிட்டு விடுகிறேன். நான் இப்போது அவமான மடைவதைப்போல் அவரையும் அவமானப்படுத்துகிறேன்.' என்றுசொல்லி பயமுறுத்தினனும். உடனே ஜெவான்கள் அவனை பலவந்தமாய் இழுத்துக்கொண்டு போய்விட்டார்களாம். இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் சுப்பையா அந்த நினைவை வைத்துக்கொண்டுதான், அவனைத் தொடர்ந்து கொண்டு போனுராம். உங்கள் பங்களாவில் திருடப்பட்ட சொத்து கள்கூட அந்த வக்கீலிடம் மறைத்து வைக்கப்பட் டிருப்பதாக அந்த ஸப்-இன்ஸ்பெக்டர் சொல்லுகிறுராம். இப்போது போலீஸ் கண்காணிப்பிலிருந்து தப்பியோடி யிருக்கும் அந்த மனிதன் எந்த சமயத்தில் வேண்டுமானுலும் இங்கே வந்து உங்களுக்குக் கெடுதல் செய்ய முயற்சிக்கலாம். ஆகையால் நீங்கள் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

கந்தசாமி பிள்ளை :—அந்த மனிதன்தான் திருடின னென்று நான் கொல்லவில்லை. மற்றவர்களுடைய சம்சயமான சாட்சியத்தி ஞல் அவன் தண்டிக்கப் பட்டான். ஒருவேளை அவன் நிரபராதியா யிருக்கலாம். அதைப்பற்றி என் மனம் பலதடவைகளில் சங்கடப் பட்டது. தண்டனை அடைந்த சமயத்தில் நிரபராதியா யிருப்பவர் தம்மை மறந்து ஆத்திரமான சொற்களை உபயோகிப்பது மனித இயற்கைக் கொத்ததே. ஆனுல் இந்த ஒருவருஷ காலத்தில் அந்த ஆத்திரம் தணிவடையாமலா இருக்கும். நிரபராதியா யிருக்கையி லேயே தண்டனை அடைந்தவன், உண்மையிலேயே குற்றத்தைச் செய்து மறுபடி தானே தண்டனையை விலைக்கு வாங்குவானு!

சர்மா :—எதற்கும் நீங்கள் ஜாக்கிரதையா யிருங்கள்—என்றுர்.

அப்போது சிறிது தூரத்திற்கப்பாலிருந்த அவருடைய டெலிபோனில் கணகணவென்ற ஓசை யுண்டாயிற்று. கந்தசாமி

பிள்ளை அதை கவனிக்க எழுந்த காலத்தில், சர்மா, "எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது. நான் போய்விட்டு நாளைய தினம் மாலையில் வருகிறேன்" என்று கூறி விடைப்பெற்றுக் கொண்டு வெளியில் போய்விட்டார்.

கந்தசாமி பிள்ளை டெலிபோனண்டை போய் அதன் கருவிகளை எடுத்து வைத்துக் கொண்டு "யார் நீங்கள்?" என்றார்.

மற்றவர்:—நான் தினசரி மூட்டைப் பத்திரிகையின் ரிபோட்டர்.

கந்தசாமி பிள்ளை :—உங்கள் பெயர் என்னவோ?

மற்றவர் :—என் பெயர் கிருஷ்ணமாச்சாரி. என் பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். நான் புதிதாக இப்போது தான் நியமிக்கப் பட்டிருக்கிறேன்.

கந்தசாமி பிள்ளை:—என்னிடம் என்ன பேசவேண்டும்?

மற்றவர் :— நீங்கள் நாளையதினம் விக்டோரியா ஜூபிலி ஹாலில், வேவடீஸ் யூனியன் கிளப்பின் வருஷாந்தக் கொண்டாட்டத்தில் தலைமை வகிக்கப் போவதாய் விளம்பரம் வெளியிடப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாய் நான் நேரில் உங்களைக் கண்டு இரண்டொரு முக்கியமான சந்தேகங்களைத் தெளிவித்துக் கொள்ள வேண்டும். அதற்காக உங்களுடைய அவகாசத்தில் கால்மணி காலத்தை எனக்கு அளிக்க சௌகரியப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கந்தசாமி பிள்ளை :—(சிறிது யோசனை செய்தபின்) எப்போது பார்க்க வேண்டும்?

கிருஷ்ணமாச்சாரி :—இப்போது தங்களுக்கு அசௌகரியமில்லாவிடில், இன்னம் அரைமணிக்குள் வந்து பார்க்கிறேன்.

கந்தசாமி பிள்ளை :—சரி ; வந்து பாரும்.

கிருஷ்ணமாச்சாரி :—என் பெயரை உங்கள் சேவகனிடம் சொல்லி, நான் வந்தால் உள்ளே விடும்படி உத்தரவு செய்யக் கோருகிறேன்.

கந்தசாமி :—சரி ; அப்படியே செய்கிறேன்—என்றார்.

அவ்வளவோடு அவர் டெலிபோனை மூடிவிட்டு முன்னிருந்த இடத்திற்கு வந்து, அழைப்புமணியை அழுத்த, முன் பக்கத்தில்

இருந்த சேவகன் அடக்க வொடுக்கமாக அவருக்கெதிரில் வந்து நின்று, "ஏன் எஜமானே?" என்றான்.

கந்தசாமி பிள்ளை, "இன்னம் கொஞ்சநேரத்தில், இந்த ஊர் தினசரி முட்டையின் ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரி என்ற பெயருடைய ஐயர் ஒருவர் வருவார். அவரை உடனே உள்ளே அனுப்பிவிட்டு நீ ஜாக்கிரதையாக வெளியில் இரு. என்னுடைய அநுமதியில்லாமல் வேறு எவரையும் உள்ளே அனுப்பவேண்டாம்" என்றார்.

அதைக் கேட்டுக்கொண்டு சேவகன் வெளியில் போய்விட்டான். உடனே கந்தசாமி பிள்ளை எழுந்து எதிரிலிருந்த தாழ்வாரத்தில் உலாவியபடி காற்று வாங்கத் தொடங்கினர். சர்மாவுடன் பேசிய காலத்தில், நிரபராதியாய் தண்டனை யடைந்து விடப்பெற்றவன் தம்மீது குரோதம் பாராட்டமாட்டான் என்று கூறினாராலும், அவருடைய மனதில் அவனைப்பற்றிய நினைவு அடிக்கடி தோன்றித் தோன்றி மறைந்தபடி இருந்தது. அவன் நேரில் வருவானாகில், அவனுடன் பேசி, அவன் உண்மையிலேயே நிரபராதியா யிருக்கும் பட்சத்தில் அதற்குப் பரிகாரமாக தாம் அவனுக்கு ஏதேனும் நன்மை செய்தனுப்ப வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவராய் அவர் இங்குமங்கும் உலாவிக்கொண் டிருந்தார்.

அது விசாலமான பங்களாவாதலாலும், வேறுமனிதர் எவரும் இல்லையாதலாலும், அங்கு நிச்சப்தமே குடிகொண் டிருந்தது. சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய கடிகாரத்தில் முள்கள் டக்டிக்கென்று நகர்ந்த ஓசை மாத்திரம் ஒழுங்காய்க் கேட்டுக்கொண்டே இருந்தது. தினசரி முட்டையின் ரிபோர்ட்டர் தம்மிடம் என்னவிதமான சந்தேகங்களைக் கேட்பாரென்று அவர் யூகிக்க முயன்றாராலும், அதை நிச்சயிக்க அவரால் இயலவில்லை. அவர் அநேகமாய் மேலும் கால் மணிக்குள் வந்துவிடலாமென்று கந்தசாமி பிள்ளை நினைத்து அவருடைய வருகையை எதிர்பார்த்திருந்தார்.

அவருடைய பங்களாவின் வாசலில் இருந்த வீதியில் அடிக்கடி மோட்டார் வண்டிகளும், சைக்கில் வண்டிகளும் போவதும் வருவதுமா யிருந்தன. ஜனப் போக்குவரத்தும் அதிகமாயி ருந்தது. அப்போது அந்தத் தாழ்வாரத்தை அடுத்திருந்த ஹாலிற்குள் யாரோ மெதுவாக வந்ததால் எழுந்த காலடி ஓசை உண்டாயிற்று. அதைக் கேட்ட கந்தசாமி பிள்ளை பத்திரிகையின் ரிபோர்ட்டர் வந்துவிட்டதாக நினைத்து உடனே ஹாலிற்குள் வந்தார். அந்த

ஹாலில் மின்சார விளக்கொன்று பளிச்சென்று எரிந்துகொண் டிருந்தது.

அப்போது அவருக்கெதிரில் கிருஷ்ணமாச்சாரியின் வடிவம் காணப்படவில்லை. ஆனால் தலைமுதல் கால் வரையில் கோஷாவைப் போல் புர்க்காவால் மூடப்பட்டிருந்த ஒரு வடிவம் அவருடைய திருஷ்டிக்குப் புலனாயிற்று. அதைக் கண்ட கந்தசாமி பிள்ளை திடுக் கிட்டு வியப்படைந்தாரானாலும், யாரோ கோஷா ஸ்திரீ தம்மைப் பார்க்க வந்திருக்கிறாளென்று உடனே யூகித்துக்கொண்டார். தாம் எச்சரித்திருந்தும், சேவகன் தம்முடைய அநுமதியைப் பெறாமல் ஒரு கோஷா ஸ்திரீயை உள்ளே அனுப்பியது அவருக்கு ஆச்சரி யத்தை உண்டாக்கியது.

ஆயினும், ஸ்திரீகள் என்றால் அவர் அவர்களை நிரம்பவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடத்தும் சுவபாவமுடையவ ராதலால், அவர் உடனே ஒரு விதமான கிலேசமடைந்து, "யாரம்மா நீங்கள்? என்ன காரியமாய் இங்கே வந்தீர்கள்?" என்றார்.

கோஷா உடையில் வந்திருந்தவர் ஒரு சிறிய தட்டில் சில பழங்களை வைத்து ஒரு கைக்குட்டையில் மூடிக் கொணர்ந்திருந்தா ளாதலால் அதை அவரிடம் நீட்ட, அவர் அதைப் பெற்றுக்கொண் டார். அப்போது அந்த வேஷதாரி தமது கையிலிருந்த ஒரு பீச்சாங் குழலை எடுத்து அவருடைய மூக்கில் பீய்ச்ச, அதற்குள் ளிருந்த மயக்க திராவகம் அவருடைய நாசிகள், கண்கள், வாய் முதலியவைகளில் புகுந்துகொண்டது. அதே காலத்தில் அந்த கோஷா வேஷக்காரன், "நான் யாரென்பது உங்களுக்குத் தெரிய வேண்டுமா? இவ்வளவு தூரம் உங்களைத் தேடிக்கொண்டு வந்த நான் யாரென்று சொல்லாமலா போவேன். ஒரு வருஷ காலத்திற்கு முன்பு உங்களுக்கு நான் ஒரு விஷயத்தைப்பற்றி வாக்குறுதி செய்து கொடுத்திருந்தேன். அதை நிறைவேற்றுவதற்காக நான் இப்போது இங்கே வந்தேன்?" என்றான்.

நாசித் துவாரங்களில் திராவகம் சென்றதால் திக்குமுக்காடித் தத்தளித்த கந்தசாமி பிள்ளை அந்த வேஷதாரி சொன்ன சொற் களைக் கேட்டு திடுக்கிட்டுத் திகைத்துப் போனார்.

தாம் உடனே கூச்சலிட்டு வேலைக்காரனையும் சமையல்காரனை யும் அழைக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்குண்டான தாயி

னும், அவருடைய வாய் குளறிப்போயிற்று. மூளை சுழலுவதுபோல் அவர் உணர்ந்து, நிற்கமாட்டாமல் தத்தளித்துப் பக்கத்தில் இருந்த ஒரு ஸோபாவின்மேல் படுத்துவிட்டார். அவருடைய பிரக்ஞை மறைந்து போய்விட்ட தாகையால், அதற்குமேல் என்ன நடந்த தென்பதை அவர் உணரவில்லை.

மறுபடி அவர் தமது சுயநினைவை அடைந்த காலத்தில் தாம் ஒரு கப்பத்தில் தலை கீழாய்க் கட்டப்பட்டிருந்ததைத் தெரிந்து கொண்டார். அப்போது நாமம், வெள்ளைத் தலைப்பாகை, நீண்ட சட்டை, மூலைக்கச்சம் முதலியவற்றுடன் எதிரில் நின்ற ஒரு மனிதர், "என்ன அக்கிரமம் இது! யார் செய்தவேலை இது?" என்று அபாரமான வியப்போடும், ஆவேசத்தோடும் ஆர்ப்பரித்ததைச் கந்தசாமி பிள்ளை கண்டு அவர் தினசரி முட்டையின் ரிபோர்ட்டரா யிருக்கவேண்டு மென்று யூகித்துக்கொண்டு, அவமானத்தினால், தமது முகத்தைக் கவிழ்த்துக் கொண்டார்.

ஜட்ஜியின் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு பதறிப் போன தினசரி முட்டையின் ரிபோட்டர் கிருஷ்ணமாச்சாரி உடனே ஓடி கந்தசாமி பிள்ளையின் கட்டுகளை அவிழ்த்து விட்டபடி, "திருடன், திருடன்" என்று உரமாகக் கூச்சலிட்டார்.

அடுத்த நிமிஷத்தில், "எங்கே? எங்கே?" என்று கேட்டுக் கொண்டு, சேவகனும், சமயல்காரரும் அங்கே வந்துசேர்ந்தனர். அந்த ஹாலில் இருந்த சாமான்கள் தாறுமாறாய் சிதறிக்கிடந்ததைப் பார்த்தபடி நின்ற ஜட்ஜ் மற்றவர்களைப் பார்த்துக் கூச்சலிட வேண்டாமென்று சைகை செய்தார்.

அப்போதும் அச்சமும் திகிலும் தோற்றுவித்த முகத்தோடு நின்ற கிருஷ்ணமாச்சாரி சேவகனைப் பார்த்து, "நான் எஜமானைப் பார்க்க வேண்டுமென்று உன்னிடம் சொல்லிவிட்டு சுமார் அரை நாழிகைக்கு முன்னே வந்தேன். வந்து தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, ஸார் ஸார் என்று மெதுவாகக் கூப்பிட்டேன். யாரும் பேசவில்லை. நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். எஜமான் சாப்பாட்டுக்குப் போயிருக்கிறார்களோ என்று நினைத்து நின்றுகொண்டே யிருந்தேன். கொஞ்ச நேரத்திற்கு முன்னர் யாரோ மூச்சு விடமாட்டாமல் திணறுவதுபோன்ற விகாரமான ஓசை உண்டாயிற்று. நான் துணிந்து ஹாலிற்குள் எட்டிப்பார்த்

தால், எஜமானரை அந்தக் கம்பத்தில் யாரோ தலைகீழாய்க் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். சாமான்கள் சிதறிக் கிடக்கின்றன. நான் உடனே எஜமானை அவிழ்த்துவிட்டு உங்களைக் கூப்பிட்டேன். நான் வந்ததற்கு சற்று முன்பேதான் இங்கே திருடன் வந்திருக்க வேண்டும்; இன்னம் வெளியில் போயிருக்க மாட்டான். தேடிப் பாருங்கள்" என்றார்.

உடனே கந்தசாமிபிள்ளை, "திருடன் கோஷா ஸ்திரீபோல் தலைமுதல் கால்வரையில் புர்க்கா போட்டு மூடிக்கொண் டிருந்தான். அவன் ஒரு வருஷத்திற்கு முன் தண்டனை படைந்து சில தினங்களுக்குமுன் விடுபட்டவன் என்று சொன்னான். தேடிப்பாருங்கள்" என்றார்.

உடனே சேவகனும், சமயல்காரரும் பங்களாவின் பல பாகங்களுக்கும் சென்று தேடத் தொடங்கினர்.

கிருஷ்ணமாச்சாரி :—ஓகோ! அந்த ஆசாமியா! அவனைப்பற்றித்தான் பத்திரிகையில் செய்தி வெளியாயிற்று. அவன் கோஷா ஸ்திரீபோலவா வந்தான்! இது பெரிய அதிசயமா யிருக்கிறதே!

கந்தசாமி பிள்ளை :— நீங்கள்தான் தினசரி மூட்டையின் ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரியா?

ரிபோர்ட்டர் :—ஆம். நான்தான்.

கந்தசாமி பிள்ளை :—நீங்கள் ஓர் உதவி செய்யவேண்டுமே.

ரிபோர்டடர் :—நான் என்ன செய்யவேண்டும்?

கந்தசாமி பிள்ளை :—இப்போது இங்கே நடந்த விஷயங்களை நீங்கள் பத்திரிகையில் வெளியிட வேண்டாம்.

ரிபோர்ட்டர் :—பத்திரிகை என்னுடையதல்ல. நான் ரிபோர்ட்டர். பத்திராதிபர் இதை வேறு வழியாகத் தெரிந்துகொண்டு, 'நீ ஏன் இதை மறைத்தாய்?' என்று கேட்டால், என் நிலைமை கடினமானதாகிவிடும். ஆகையால், நீங்கள் இதைப்பற்றி அவரிடமே நேரில் சொல்வது நல்லது. நானும் உங்களுடைய விருப்பத்தை அவருக்குத் தெரிவிக்கிறேன்.

கந்தசாமி பிள்ளை :—நீங்கள் சொல்வது நியாயமாகவே இருக்கிறது. நீங்கள் யுக்தப்போல் பத்திரிகையில் இதை வெளியிடுங்கள். எனக்கு உடம்பின் நிலைமை சரியாயில்லை. நாளையதினம்

ஸ்திரீகளின் கூட்டத்தில் நான் தலைமை வகிக்கப் போகிறதில்லை. ஆகையால், அதைப்பற்றி நீங்கள் கேட்கவேண்டிய சந்தேகங்களை, இனி வரிக்கப்படுபவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்—என்றார்.

அப்போது போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பையும் நான்கு ஜெவான்களும் தடபுடலாக அங்கே வந்துசேர்ந்து விரைப்பாக நின்று ஜட்ஜிக்கு சலாம் வைத்தனர்.

அவர்களைக் கண்ட கந்தசாமி பிள்ளை திடுக்கிட்டு வியப்போடு ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தைப் பார்த்து, "இதற்குள் உங்களுக்குக்கூட சங்கதி எட்டிவிட்டதா? உங்களிடம் வந்து சொன்னது யார்?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—டெலிபோன் மூலம் எங்களுக்குச் செய்தி கிடைத்தது. செய்தி சொன்னவன், தான் உங்களுடைய சேவகன் என்றான்.

அப்போது சேவகனும், சமயற்காரரும் வந்து, "பங்களாவில் ஓர் இடம் விடாமல் தேடிப் பார்த்துவிட்டோம். ஆள் அகப்படவில்லை" என்றனர்.

கிருஷ்ணமாச்சாரி :—அவன் எப்படி உள்ளே வந்திருப்பான்?

கந்தசாமி பிள்ளை :—(சேவகனை நோக்கி) இந்த ஐயரைத் தவிர மற்றவர் யார் வந்தாலும், என்னைக் கேட்காமல் உள்ளே விட வேண்டாமென்று சொன்னேனே! அந்த கோஷாப் பெண்பிள்ளையை ஏன் உள்ளே விட்டாய்?

சேவகன் :—நான் இந்த ஐயரைத்தவிர வேறு ஒருத்தரையும் விடவில்லையே! கோஷாப் பெண்பிள்ளையை நான் பாக்கவே இல்லையே!

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அவன் இப்போது வந்திருக்க மாட்டான். சாயங்காலமே சேவகனுக்குத் தெரியாமல் உள்ளே வந்து ஒளிந்துகொண்டிருந்திருக்கலாம்.

கிருஷ்ணமாச்சாரி :—அவன் எப்படி வெளியில் போயிருப்பான்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—எங்கேயாவது மறைந்துகொண்டிருப்பான்; சேவகன் இங்கே வந்தபோதோ, டெலிபோனில் பேசியபோதோ, வெளியில் போயிருப்பான். அதுதானா ஒரு பெரிய காரியம்!

சேவகன்:—நாங்கள் யாரும் டெலிபோனில் பேசவில்லையே!

கந்தசாமி பிள்ளை:—இது பெரிய அதிசயமாய்த்தா னிருக்கிறது! அந்த ஆசாமி தான் இன்னான் என்று பெருமையாய் என்னிடம் சொல்லிக்கொண்டதுபோல, பெருமைக்காக உங்களிடத்திலும் இதைச் சொல்லியிருப்பான். அந்த ஆசாமியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களல்லவா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவனைத் தண்டித்தபோது நான் பார்த்திருக்கிறேன். எனக்கு அவனுடைய அடையாளம் நன்றாய்த் தெரியும். அவன் எங்கே அகப்பட்டாலும் நான் பிடித்துக்கொள்ளுகிறேன்—என்றார்.

அவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், அங்கே தாறுமாறாய்ச் சிதறிக்கிடந்த சாமான்களை வேலைக்காரரும் சமயல்காரரும் எடுத்து ஒழுங்காய் வைத்தனர்.

அப்போது கந்தசாமி பிள்ளை தமது கைப்பெட்டி இருக்கிறதா என்று பார்க்கும்பொருட்டு அலமாரி யண்டை போய் அதைப் பார்த்தார். பெட்டியின் பூட்டு மறுசாவியால் திறக்கப்பட்டிருந்தது. அவர் அதைத் திறந்து பார்த்தார். அதற்குள் அவர் வைத்திருந்த ஆயிரம் ரூபாய் நோட்டுகளும் சில கடிதங்களும் போய்விட்டனவென்பது தெரிந்தது. அதை ஸப்-இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் தெரிந்துகொண்டனர்.

அப்போது கந்தசாமி பிள்ளை ஒரு ஸோபாவில் உட்கார்ந்து, "எனக்கு மயக்கம் வரும்போ லிருக்கிறது. நான் படுத்துக் கொள்ளுகிறேன். நீங்கள் எல்லோரும் போங்கள்" என்று கூறிவிட்டு, ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு, தமது சேவகனைப் பார்த்து, "யார் என்னைப் பார்க்க விரும்பினாலும் உள்ளே விடவேண்டாம்" என்று உத்தரவிட்டார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் அங்கிருந்த மூவரையும் தாழ்வாரத்திற்கு அழைத்துக்கொண்டு போய் அவர்களிடத்தில் வாக்குமூலம் பெற்றுக்கொண்டு, தமது ஜெவான்களுடன் வெளியில் போய்விட்டார். தினசரி மூட்டையின் ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரி அதுவரையில் ஒரு மூலையில் வைத்திருந்த தமது தோல் டிரங்க் பெட்டியை எடுத்துக்கொண்டு, எச்சரிப்பா யிருக்கும்படி சேவகனிடம் சொல்லிவிட்டு, வெளியில் போய்விட்டார்.

ஸப்-இன்ஸ்பெக்டரும் ஜெவான்களும் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தவுடன், ஸப்-இன்ஸ்பெக்டர் ஜட்ஜி கந்தசாமி பிள்ளையின் வீட்டில் ஒரு வருஷத்திற்கு முன்பு திருடிவிட்டு தண்டனையடைந்த மனிதன் மறுபடி அன்று மாலையில் அவருடைய வீட்டில் நுழைந்து 1000 ரூ. நோட்டுக்களையும் கடிதங்களையும் திருடிக்கொண்டு போய் விட்டான் என்று எல்லா ஸ்டேஷன்களுக்கும் தெரிவித்ததன்றி, பழைய கேஸ் ரிஜிஸ்டரிலிருந்து அவனுடைய அங்க மச்ச அடையாளத் தெரிந்துகொண்டு, ஷை தகவல்களையும் டெலிபோன் மூலம் எல்லா ஸ்டேஷன்களுக்கும் அறிவித்தார். அதுவன்றி, மிஸ்டர் லவ்லக் துரைக்கும் அது தெரிவிக்கப்பட்டது.

சமய சஞ்சீவி ஐயர் தமது ஊரில் முகாம் செய்திருக்கையில் அவ்வாறு மேன்மேலும் பெரிய உத்தியோகஸ்தர்களுடைய பொருள்கள் களவாடப்படுவதைக் கண்டு போலீஸார் எல்லோரும் பெரிதும் கவலை கொண்டு கலங்கித் தவிக்கலாயினர்.

கந்தசாமி பிள்ளையின் பங்களாத் திருட்டைப்பற்றி எல்லா ஸ்டேஷன்களுக்கும் தெரிவித்த ஸப்-இன்ஸ்பெக்டர் திருடனைப் கண்டு பிடிப்பதற்கு தாங்கள் எவ்வித முயற்சிகள் செய்யலாமென்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில், இரண்டு ஜெவான்கள் ஒரு மனிதனைத் துணியால் பின் கட்டாகக் கட்டி அழைத்துக்கொண்டு வந்து ஸப்-இன்ஸ்பெக்டருக் கெதிரில் நிறுத்தினர்.

ஸப்-இன்ஸ்பெக்டர் கம்பீரமாக நிமிர்ந்து அந்த மனிதனை இரண்டு மூன்று தடவை ஏற இறங்கப் பார்த்து, "யார் இவன்?" என்றார்.

ஒரு ஜெவான்:—இவன்தான் ஸார், லவ்லக் துரையின் மோட்டார் வண்டியைத் திருடியவன். இவன் தன் பெயர் ஸர்ஜன் சுந்தரம் என்று சொல்லிக்கொண்டான். இவன் மற்ற ஜனங்களைச் சேர்த்துக் கொண்டு எங்கள் இருவரையும் முதலாவது ஸர்ஜனையும் சாக்கடைக் குழியில் தள்ளி விட்டுவிட்டு கம்பி நீட்டிவிட்டான்.

ஸப் இன்ஸ்பெக்டர்:—இவனை எங்கிருந்து பிடித்தீர்கள்?

ஒரு ஜெவான்:—ஜில்லா ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையின் பங்களாவிற்குப் பக்கத்திலிருக்கும் சந்தில் ஒரு துணியை போர்த்திக் கொண்டு மறைந்து நின்று கொண்டிருந்தான்; எங்களைக் கண்டவுடன், ஓட ஆரம்பித்தான். நாங்கள் துரத்தினோம். சுமார் கால்

மையில் பந்தையக் குதிரைபோல் ஓடினான். இவனைப் பிடிப்பதற்குள் எங்களுக்குக் குடலெல்லாம் அறுந்துபோகும்போ லாய்விட்டது.

ஸப்-இன்ஸ்பெக்டர்—(புன்சிரிப்போடு) இவன் ஸர்ஜனா, அல்லது, ஸர்ஜனுடைய வண்டிக் குதிரையா என்பது எனக்கு சந்தேகமா யிருக்கிறது. பக்கத்துத் தெருவில் நம்முடைய பாச்சாமியான் குதிரை வண்டி இருக்கிறது. அதை இவனுடைய கழுத்தில் கட்டி, ஏறி உட்கார்ந்துகொண்டு, சாட்டை வாரால் நன்றாக வாங்குங்கள். இந்த உம்மணா மூஞ்சி எந்த ஊரில் ஸர்ஜனா யிருந்தான்?

ஒரு ஜேவான்:—சநியூரில் இருந்தானாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—'ஸர்ஜன்' என்றால் இவனுடைய அகராதியில் ஆடு வெட்டும் கசாப்புக்காரன் என்பது அர்த்தமோ என்னவோ? ஏண்டா நாயே, சநியூரில் நீ கசாப்புக்கடை வைத்திருந்தாயாமே! அதை விட்டுவிட்டு இந்த ஊரில் வந்து திருட்டுக் கூட்டத்தாருக்கு மோட்டார் ஓட்டுகிறாயா?

சுந்தரம்:—(கிலேசத்தினால் நிரம்பவும் குன்றிப்போய்) நான் ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையின் பங்களாவிற்குப் பக்கத்து சந்திலிருந்தே னென்பது அபாண்டமான பொய். அதுவன்றி நான் ஓடினேனென்பதும் சுத்தக் கற்பனை. என் உடம்பில் ஓடுவதற்கு சீவனேது! நான் வாணடையார் சத்திரத்தில் என் அறைக்குள் இருந்தேன். இவர்கள் இருவரும் அங்கே வந்து என்னைப் பிடித்துக்கொண்டு, 'அன்றையதினம் ஏன் தப்பி ஓடினாய்?' என்றும், 'எங்களையும் முதல் ஸர்ஜனையும் ஏன் சாக்கடைக் குழியில் தள்ளினாய்?' என்றும் அதட்டி என்னை இவர்கள் அடித்துப் பலவிதங்களில் இம்சித்து இங்கே அழைத்துக்கொண்டு வந்தார்கள். இவர்கள் சொன்னதைக் கேட்டு நீங்களும் கோபமடைந்து என்னைத் தாறுமாறாய்ப் பேசுகிறீர்கள்.

ஒரு ஜேவான்:—ஓகோகோ! இவன் பெரிய அண்டப்புரட்டனா யிருக்கிறான் ஸார். இவன் வாண்டையார் சத்திரத்தில் இருந்தது எங்களுக்கு எப்படித் தெரியும் ஸார். ஜட்ஜி பங்களாவின் பக்கத்து சந்தில், அந்த பங்களாவிற்குள் நுழைய பின்பக்க வாசற்படி இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இவனைப் பார்த்தோம்.

எங்களைக் கண்டவுடன் ஓடினன். இப்போது வேறே என்னவோ கதையையெல்லாம் சொல்லுகிறான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படியானல், அந்த கோஷா வேஷக்காரன் உள்ளே போய்த் திருடியபோது, இவன் வெளியிலிருந்து ஆள் பார்த்திருக்கிறான்; அல்லது, இவனும் உள்ளே போய்விட்டு வந்திருக்கிறான். அப்படியானல் பெரிய துரையின் மோட்டார் வண்டியைத் திருடிய கூட்டத்தாரே இந்த ஜட்ஜ் வீட்டுத் திருட்டையும் நடத்தியிருக்கிறார்கள். ஒரு வருஷம் சிறையிலிருந்து வந்தவனும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன்.

சுந்தரம் :—இல்லை ஸார். நான் ஒரு பாவத்தையும் அறியேன். நான் ஒரு வருஷத்திற்குமுன் ஸர்ஜனுயிருந்தேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அந்த உத்தியோகம் 'டிஸ்மிஸ்' ஆய் விட்டது. இப்போது திருடனுக இருக்கிறாய். அடேய் 671, இவனை லாக்கப்பில் விட்டுப் பூட்டு—என்றார். உடனே ஜெவான்கள் சுந்தரத்தை அறைக்குள் விட்டுப் பூட்டினர். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே டெலிபோன் மூலமாய்ப் பெரிய துரை, ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை முதலியோருக்கு உடனே தகவல் தெரிவித்தார். அதாவது, கந்தசாமி பிள்ளையின் வீட்டில் திருடிய ஆசாமியோடு உடந்தையா யிருந்த ஒருவன் அகப்பட்டுக் கொண்டதாக அறிவித்துவிட்டுத் தமது சாப்பாட்டை முடித்துக் கொண்டு வரும்பொருட்டு ஸைக்கிளில் ஏறிக்கொண்டு தமது வீட்டிற்குச் சென்றார்.

சென்றவர் தமது இராப்போஜனத்தை முடித்துக்கொண்டு மறுபடியும் திரும்பி வந்தகாலத்தில், வழியில் இருந்த ஒரு வெற்றிலைபாக்குக் கடைக்குப் பக்கத்தில் ஸைக்கிளை நிறுத்திக்கொண்டு வெற்றிலைபாக்கு வாங்கிப் போட்டுக்கொண்டு நின்றார்.

அந்தக் கடைக்கு அடுத்த வீட்டில் பாலக்காட்டு ஐயர் ஒருவர் சாப்பாட்டு ஓட்டல் வைத்திருந்தார். சாப்பாட்டுக்காக அதற்குள் சிலர் போவதையும், சிலர் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்ததையும் நாகூர் மீரா லெப்பை கவனித்தபடி தாம்பூலம் போட்டுக்கொண் டிருந்தார். அவ்வாறு வெளியில் வந்தவர்களில் ஒருவருடைய முகம் அவருக்கு அறிமுகமானதாய்த் தோன்றியது. உடனே நாகூர் மீரா லெப்பை அவரைத் தலைமுதல் கால்வரையில்

இரண்டு மூன்று தடவை ஏற இறங்க நோக்கி, அவர் யாராயிருக்கலாமென்று எண்ணி எண்ணிப் பார்த்தார். அவருக்கு விஷயம் தெளிவுபடவில்லை. ஆகவே அவர் தாம்பூலம் போட்டுக்கொண்டபடி ஆழ்ந்து யோசித்து யோசித்துப் பார்த்தார். அதற்குள் அந்த மனிதர் இருளில் மறைந்து போய்விட்டார். அப்போது லெப்பையாருக்கு ஒரு நினைவு உண்டாயிற்று. தண்டனை யடைந்த கைதிகளின் போட்டோப் படங்களில் அவரைப்போன்ற ஒரு வடிவத்தைப் பார்த்ததாக அவருக்கு நினைவுண்டாயிற்று. எனவே அவர் உடனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்துத் தமது ஸைக்கில் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு இரண்டே நிமிஷகாலத்தில் தமது ஸ்டேஷனை அடைந்து, அங்கிருந்த படங்களையெல்லாம் இன்னொரு தரம் புரட்டிப் புரட்டிப் பார்க்க, அவருக்கு உண்மை உடனே விளங்கிவிட்டது. ஒரு வருஷத்திற்கு முன்னர் ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையின் பங்களாவில் திருடி தண்டனை யடைந்த யௌவனப் புருஷருடைய படத்தைப்போலவே அந்த மனிதர் இருந்தாரென்பது நிச்சயப்பட்டது. உடனே அவர் தமது விரலைக் கடித்துக்கொண்டு, தாம் அவரை ஓட்டலண்டையே பிடித்துக்கொள்ளாமல் ஏமாறிப் போனதைப்பற்றித் தம்மைத்தாமே நொந்துகொண்டார். அவருடைய தேகம் பதறியது. அவர் அந்தப் படத்தை எடுத்து சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு மறுபடி ஸைக்கில் வண்டியில் ஆரோகணித்து விரைவாக ஓட்டலுக்கு வந்து அதன் சொந்தக்காரரான சங்கரையரைத் தனிமையில் அழைத்து வைத்துக்கொண்டு, கால்மணி காலத்திற்கு முன்னர் தாம் கண்ட யௌவனப் புருஷருடைய அடையாளங்களையும், ஆடைகளையும், அவர் வெள்ளைக் கடுக்கன் போட்டிருந்ததையும் தெரிவித்து, அந்த மனிதர் யார் என்று கேட்க, உடனே சங்கரையர், "ஓகோ அந்தப் பையனைப்பற்றியா கேட்கிறீர்கள்! அவனுடைய பெயர் ராமநாதன். அவன் இரண்டு தினங்களாய் இங்கே சாப்பிட்டுவிட்டு எங்கேயோ போய்விடுகிறான்; உடனுக்குடன் பணம் கொடுத்துவிடுகிறான். அவ்வளவே எனக்கு அவனைப்பற்றித் தெரியும்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவரை நான் இப்போது அவசரமாய்ப் பார்க்க வேண்டுமே.

சங்கரையர்:—அவன் இனி நாளையதினம் காலையில் சுமார் பத்து மணிக்குத்தான் வருவான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அவர் ஒவ்வொரு வேளையிலும் கையில் பணத்தைக் கொடுத்துவிடுவதாகச் சொல்லுகிறீர்களே. அப்படியானல், நாளையதினம் காலையில் அவர் இங்கே அவசியம் வரத்தான் வேண்டுமென்பதென்ன! வந்தாலும் வரலாம்; ஊரை விட்டோ அல்லது வேறு ஓட்டலுக்கோ போனலும் போகலாம்.

சங்கரையர் :—அப்படி உங்களுக்கு இப்போதே அவனை அவசரமாய்ப் பார்க்க வேண்டுமானல், நீங்கள் நேராய் வயத்துநாதையருடைய ஜாகைக்குப் போங்கள். அவரைக் கேட்டால் அவன் இருக்குமிடத்தைச் சொல்லுவார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—எந்த வயத்துநாதையர்?

சங்கரையர் :—வக்கீல் வயத்துநாதையரைத் தெரியாதா! அன்றைய தினம் யாரோ ஒரு ஸப்-இன்ஸ்பெக்டரை இன்னொருவர் கொன்றுவிட்டாரே. அந்த வீட்டில் இருக்கும் வக்கீல்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அவர்கள் இருவருக்கும் என்ன சம்பந்தம் என்பது உங்களுக்குத் தெரியுமோ?

சங்கரையர் :—அந்தப் பையன் ராத்திரியில் சாப்பிட வரும்போது அநேகமாய் அவரும்கூட வருகிறார். இருவரும் பந்துக்களோ, சிநேகிதர்களோ, இல்லாவிட்டால் இந்தப் பையன் அவருடைய கட்சிக்காரனே என்பது எனக்கு நிச்சயப்படவில்லை. நீங்கள் அவரிடமே போய் விசாரியுங்கள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அந்த வக்கீலுக்கு முக்கியமான சொந்தக்காரர்கள் யார் யார் என்பது யாரிடத்தில் கேட்டால் தெரியு ?

சங்கரையர் :—(சிறிது யோசனை செய்து) நீங்கள் கொஞ்சம் இருங்கள். உள்ளே ஒருவர் இருக்கிறார். அவரிடம் கேட்கிறேன்— என்று கூறிவிட்டு உள்ளே சென்று கொஞ்சநேரம் இருந்துவிட்டு வந்து, "அவருடைய மைத்துனனுடைய பெயர் ராமநாதனும். வேறு தகவல் எதுவும் தெரியவில்லை" என்றார்.

அதைக் கேட்டுக்கொண்ட ஸப்-இன்ஸ்பெக்டர் அவருக்கு சலாம் சொல்லிவிட்டு அங்கிருந்து விரைவாகப் புறப்பட்டு வக்கீல் வயத்துநாதையருடைய வீட்டை நோக்கிச் செல்லலானார்.

அப்போது நாகூர் மீரா லெப்பைக்கு உண்மை ஒருவிதத்தில் தெளிவுபடத் தொடங்கியது. விடுதலையடைந்த அந்தக் கைதிக்கும், வக்கீல் வயத்துநாதையருக்கும் நெருங்கிய சம்பந்த மிருக்க

வேண்டுமென்று ஸப்-இன்ஸ்பெக்டர் சுப்பையா அநுமானித்ததும், ஒரு வருஷத்திற்குமுன் கந்தசாமி பிள்ளையின் வீட்டில் களவாடப்பட்ட சொத்துகள் அந்த வக்கீலின் வீட்டில் மறைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று யூகித்ததும் புத்திசாலித்தனமான யூகங்களே என்றும், அவை உண்மையாயிருக்க வேண்டுமென்றும் நாகூர் மீரா லெப்பை எண்ணிக்கொண்டு ஐந்து நிமிஷகாலத்தில வக்கீல் வபத்துளாதையருடைய வீட்டையடைந்தார். முன் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. நடையில் ஒரு மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரண்டாவது கதவு அடிப்பாகம் பலகைகளாலும், மேல்பாகம் இரும்புக் கம்பிகளாலும் ஆனது. ஸப்-இன்ஸ்பெக்டர் லெப்பையார் நடைக்கதவண்டை நின்றபடி மேல்பாகத்தால், "ஸார், ஸார்" என்று இரண்டு தடவைகள் கூப்பிட்டார்.

அடுத்த நிமிஷம் சமயல்கார ராமன் பிரஸன்னமானான். அவனுடைய இடுப்பில் வெண்மையான மலையாளம் முண்டு காணப்பட்டது. நெற்றியிலும் உடம்பிலும் பளிச்சென்று விபூதிப் பட்டைகள் இருந்தன. இடது கையில் மிளகு ரஸத்தோடு கூடிய ஒரு கோகரணமும் (மூக்குச்சட்டியும்), வலது கையில் ஒரு கரண்டியும் இருந்தன. அப்படிப் பலாயன அவதாரத்தில் வந்து நின்ற ராமன் கம்பீரமாக எட்டிப்பார்த்து, ஸப்-இன்ஸ்பெக்டர் லெப்பையார் வந்திருந்ததைக் கண்டு, உடனே கோகரணத்தையும், கரண்டியையும் கதவின் மறைவில் கீழே வைத்துவிட்டு மிகவும் விநயமாகப் பேசத்தொடங்கி, "ஓகோ! ஸப்-இன்ஸ்பெக்டரவாளா! ஏன், வக்கீல் எஜமானைப் பார்க்க வேண்டுமா? இப்போது சாப்பாட்டு வேளை. அப்படியே நடைத்திண்ணையில் உட்கார்ந்துகொள்ளுங்கள். நீங்கள் வந்திருப்பதாக நான் சொல்லுகிறேன்" என்றான்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "சரி; நான் இந்தத் திண்ணையில் இருக்கிறேன். வக்கீல் ஐயருடன் பேசவேண்டும். சாப்பிட்டவுடன் வரும்படி சொல்லும்" என்று கூறிவிட்டு நடைத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு வக்கீலின் வருகையை எதிர்பார்த்திருந்தார்.

ராமன் உடனே சென்று வக்கீலுக்கு மிளகு ரஸம் வார்த்துவிட்டு, அந்த சுபச்செய்தியை அவரிடம் பயபக்தி விநயத்தோடு விக்ஞாபனம் செய்துகொண்டான். அதைக் கேட்டவுடனேயே வக்கீலுக்கு வயிற்றில் ஏதோ ஒருவித வேதனை உண்டாகிவிடவே,

அதற்குமேல் ஆகாரத்தைப் பார்க்கும்போது குமட்டல் உண்டாகத் தொடங்கியது. எனவே, அவர் அவ்வளவே போதுமானதென்று கூறிக் கையை உதறிவிட்டு எழுந்து கையை சுத்தம் செய்துகொண்டு, வெற்றிலைத் தட்டிலிருந்து லவங்கமொன்றை எடுத்து வாயில் போட்டு மென்றபடி வெளியில் வந்து கதவைத் திறந்து, கடுகடுத்த முகத்தோடு, "என்ன ஸப்-இன்ஸ்பெக்டரவாள், எங்கே இவ்வளவு தூரம் இந்த அகால வேளையில்? மறுபடி இந்த வீட்டில் யாரையாவது கொலை செய்ய உத்தேசமா?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—(கோபப் புன்சிரிப்போடு) உங்களுக்கு அடிக்கடி இந்த வீட்டில் கொலை நடக்கவேண்டுமென்று பிரியம் போல் இருக்கிறது. உங்கள் அபிப்பிராயத்தில் போலீஸார் என்றால், அவர்கள் கொலை செய்கிறவர்கள் என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் வக்கீலாயிருந்தும், போலீஸார் கொலை, திருட்டு முதலிய குற்றங்களைச் செய்வோரை தண்டனைக்குக் கொண்டு போகிறவர்கள் என்பதை நான் நினைவூட்டவேண்டியிருப்பதைப் பற்றி விசனிக்கிறேன். நீங்கள் நினைக்கிறபடி நான் கொலை செய்ய வரவில்லை. உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். உங்களிடம் வேறொரு விஷயத்தைத் தெரிந்துகொண்டு போவதற்காக வந்தேன்.

வக்கீல்:—போலீஸார் ஒருவரை கவனிக்கிறார்கள் என்றால், தூமகேது கிட்ட நெருங்கினால், அதன் கவர்ச்சியால் இந்த பூமி நடுங்கி அலங்கோலப்பட்டு பூகம்பத்தால் நாசமடைகிறதோ, அதைப்போல் மற்றவர் நாசமடைகிறார்கள். அன்றையதினம் ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர் இன்னொருவரைக் கொன்றுவிட்டு போலீஸ் பாதுகாப்பை மீறி டோக்கர் கொடுத்து விட்டார். நூறுரூபாய் விலையுள்ள என் வீட்டு வெல்வெட் மெத்தை நாசமாயிற்று. அதன்கிரயத்தை நீங்கள் எங்களுக்குக் கொடுக்கப் போகிறீர்களா? அது எமனிடம் போன உயிர் மாதிரி. இப்போது நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்கள் வரவைக் கேட்டவுடன், சாப்பிட்டதெல்லாம் திரும்பிவர ஆரம்பித்தது. அரை வயிற்று சாப்பாடு நஷ்டமானது கைமேல் கண்டபலன்; இனிமேல் என்ன ஏற்படப்போகிறதோ! நீங்கள் அடிக்கடி வருவதால், இப்படி நஷ்டம் ஆவது ஒருபுறமிருக்க, அண்டை வீட்டுக்காரர்கள் வம்பு பேசவும், எங்களைப்பற்றி இளப்பமான அபிப்பிராயம் கொள்ளவும் அது இடம் கொடுக்கிறது. ஊரில் இருப்பவர்கள் கொலை, திருட்டு முதலிய குற்றங்களைச் செய்தால், கண்ணியமாகக்

காலக்ஷேபம் நடத்தும் நாங்கள் ஏன் இப்படியெல்லாம் அவமானம் அடையவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நீங்கள் பேசுவதைக் கேட்க, எனக்கு நிரம்பவும் விசனமாயிருக்கிறது—

வக்கீல்:—செய்வதைச் செய்து கொண்டே, விசனமடைகிறேனென்றால், அந்த விசனத்திற்கு அர்த்தமே இல்லை. உங்கள் விசனமும் எனக்கு வேண்டாம்; உங்கள் சகவாசமும் எனக்கு வேண்டாம். எங்களுக்கிருக்கும் விசனமே அசாத்தியமாயிருக்கிறது. உங்களோடு அநாவசியமாய்ப் பேசிக்கொண்டிருக்க எனக்கு அவகாசமில்லை; எதற்காக இப்போது வந்தீர்கள் என்பதை இரண்டே வார்த்தைகளில் சொல்லுங்கள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ஒன்றுமில்லை. ஆனால்—

வக்கீல்:—(இடைமறித்து) ஒன்றுமில்லாவிட்டால், உங்கள் வீட்டில் போய் சொஸ்தமாய்ப் படுத்துக் கொள்ளலாமே! இவ்வளவு தூரம் வந்து, கதவிடித்துக் கூப்பிட்டு, என் சாப்பாட்டைக் கெடுத்து என் பொழுதை இவ்வளவு தூரம் அபகரித்து கடைசியில் ஒன்றுமில்லையென்று சொல்லவேண்டிய காரணமென்ன? உங்களோடு அரற்றிக் கொண்டிருக்க, வேலையற்ற மனிதர் வேறே யாரும் அகப்படவில்லையா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(மிகுந்த கோபமும் படபடப்பும் அடைந்தவராய்,) ஏது உங்களுக்கும் பொறுமைக்கும் வெகு தூரம்போலிருக்கிறதே! நான் விஷயத்தைச் சொல்ல ஆரம்பிக்கும் போதே, இப்படிக் குறுக்கே விழுந்து சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசினால், எதிராளி இன்னதுதான் சொல்லப்போகிறார் என்று தெரிந்துகொண்டு, அதைக் கேட்க விரும்பாமல் தடுத்து அனுப்பிவிட முயற்சிக்கிறதாக எண்ணவேண்டியிருக்கிறது. இதனால்தான் கோர்ட்டில் நீங்கள் நிரம்பவும் பிரபலமடைந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. ஏதாவது ஒரு கெடுதல் நேரஇருந்தால், அதை இன்னதென்று அறிந்து தக்க பரிகாரத்தினால் அதை மேற்கொள்வதே நல்லது; அதைக் காதில் வாங்காமல் செவிட்டுத்தனம் வகித்தால், அந்தக் கெடுதல் விலகுமா? ஒருநாளும் விலகாது. நீங்கள் மெத்தப் படித்த புத்திசாலியான வக்கீல்; கோர்ட்டில் வழக்குகள் நடத்தும் போது நீங்கள் போலீஸாரை உங்களுக்கு எதிரிகளாய் நினைத்து

வாதிப்பது இயற்கையே: மற்றபடி சாதாரணமாய்ப் பழகும்போது கூட எங்களை நீங்கள் உங்களுடைய கொடிய பகைவர்கள் என்று நினைப்பது அவ்வளவு உசிதமானதல்ல.

வக்கீல் :—(கோபத்தோடு) ஐயா லெப்பையாரே! நீங்கள் போலீஸ் இலாகாவில் எவ்வளவு பிரபலமடைந் திருக்கிறீர்களோ, அதற்கு என் பிரபலம் குறைந்து போகவில்லை. அதைப்பற்றி யெல்லாம் நாம் இப்போது அதிகமாய் நுழைந்து பார்த்தால், அது அம்பட்டன் குப்பையைக் கிளறுவதுபோ லாகும்! நீங்கள் என் வீட்டில் வந்திருந்துகொண்டே என்னிடம் இப்படி பிரகஸ்பதி தோரணையில் பேசி, ஹிதோபதேசம் செய்வது அவ்வளவு யுக்தமானதல்ல. என்னுடைய பிராபல்யம் உங்கள் மனதிற்கு உகப்பானதா யில்லாவிட்டால், உங்களுக்கு ஏதாவது கேஸ் இருந்தால், என்னிடம் வக்காலத்து கொடுக்க வேண்டாம். உங்கள் அபாரமான யோக்கியதாம்சங்களுக்குத் தகுந்த வக்கிலாய்ப் பார்த்துக் கொடுக்கலாம். அவ்வளவுதானே விஷயம்? நான் போகலா மல்லவா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (தமது வியப்பை அடக்கமாட்டாமல் கல கல வென்று சிரித்து) விஷயத்தை நான் சொல்வதற்குள் இவ்வளவுதானா விஷயம் என்று கழித்துக்கொண்டு போகப் பார்க்கிறீர்களே! காலைக்கட்டிய பாம்பு கடிக்காமல் விடாது என்பது உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்.

வக்கீல் :—போலீஸார் பாம்பென்று எனக்குத் தெரிந்திருப்பதால்தான், அது காலைக் கட்டு முன் அதன் தலையை நசுக்கிக் கொல்லப்பார்க்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—போலீஸுக்கு ஒரே தலையா யிருந்தால் அதை நசுக்கிக் கொல்லலாம். அது ஆயிரம் தலைகள் உடையாது. ஒரு பாம்பை நீங்கள் நசுக்கினால், ஒன்பது பாம்புகள் வந்து உங்களை வளைத்துக் கொள்ளும். அதன் பிறகு உங்கள் நிலைமை அசாத்தியமான தாகிவிடும்; விஷயத்தைச் சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுமை வகித்து அநாவசிய வளர்த்தலின்றி சங்கதியைச் சொல்லுங்கள். உங்களுக்கு நண்பர்களா யிருக்கிறவர்களில் ராமநாதன் என்ற பெயருடையவர் எவரேனும் இருக்கிறார்களா?

வக்கீல் :—(வியப்பும் தடுமாற்றமும் அடைந்து), எதற்காக அதைக் கேட்கிறீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—காரணமில்லாமல் கேட்பேனா? வீணாய் வளர்த்தாமல், கேட்பதற்கு நேரான பதில் கொடுங்கள்.

வக்கீல் :—எனக்கு நண்பர்கள் இருப்பதாக நீங்கள் எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஒருவரோடு சிலர் அன்னியோன்னியமாய்ப் பழகுவதிலிருந்து, அவருக்கு நண்பர்கள் இருப்பதாகத் தெரிந்துகொள்ளுகிறோம்.

வக்கீல் :—அந்தச் 'சிலரில்' ராமநாதன் என்னும் பெயருடையவர் ஒருவர் இருக்கிறாரா இல்லையா என்பதையும் நீங்கள் ஏன் தெரிந்துகொண்டிருக்கக்கூடாது?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அப்படியானால் உங்களுக்கு யாரும் நண்பர்களே இல்லையென்றும், ராமநாதன் என்னும் நண்பர் எவரும் இல்லையென்றும் சொல்லுகிறீர்களா?

வக்கீல் :—எனக்கு நண்பர்களே இல்லையென்றால், எல்லாரும் அடங்கிப்போய் விட்டார்கள். ராமநாதன், சோமநாதன் என்று ஒவ்வொரு பெயராய்ச் சொல்லிக்கொண்டு போனால், அதற்கு முடிவே இராதே.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படி யாரும் ஒவ்வொரு பெயராய்ச் சொல்லிக்கொண்டே போகமாட்டார்கள். அதிருக்கட்டும். உங்களுக்கு ராமநாதன் என்னும் பெயருடைய பந்து யாராவது இருக்கிறாரா?

வக்கீல் :—அதை நான் திட்டமாய்ச் சொல்லுவது சாத்தியமானதல்ல. எத்தனையோ தூர பந்துக்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்கள்கூட நமக்குத் தெரிகிறதில்லை. அவர்களில் எத்தனையோ ராமநாதன்கள் இருக்கலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஏது உங்களிடம் ஓர் அற்ப சங்கதியைத் தெரிந்துகொள்வதற்குள், கல்லை உடைத்து நாராய்க் கிழித்துவிடலாம்போலிருக்கிறதே.

வக்கீல் :—அப்படியானால், நீங்கள் என்னை மனித வகுப்பிலிருந்து 'கல்' இனத்தில் சேர்த்துவிட்டீர்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இல்லை யில்லை. மனிதர் வகுப்பென்றுதான் இப்போதும் நம்புகிறேன். நீங்கள் தூர பந்துவைப் பற்றிப்

பேசவேண்டாம். நெருங்கிய பந்துக்களில் ராமநாதன் என்று யாராவது இருக்கிறார்களா என்பதை சுலபத்தில் சொல்லலாமல்லவா?

வக்கீல்:—நெருங்கிய பந்துக்கள் ஏராளமாய் இருக்கிறார்கள். சிலரை நாங்கள் சொந்தக் காரணங்களைக்கொண்டு பந்துவாக எண்ணுமல் மறந்திருக்கிறோம். ஆகையால் நீங்கள் கேட்பதற்கு நான் திட்டமான பதில் சொல்வது சாத்தியமானதல்ல.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—உங்கள் சம்சாரத்தின் தம்பியினுடைய பெயர் ராமநாதன்தானே?

வக்கீல்:—பிராம்மண ஜாதியிலும் மற்றும் பல ஜாதிகளிலும் செல்லப்பெயர் ஒன்று; சாஸ்திரப்படி ஏற்படும் தெய்வப் பெயர் ஒன்று. என் மைத்துனனை என் சம்சாரம் 'துரை', 'துரை' என்று எனக்கெதிரில் கூப்பிடுவாள். நானும் அவனை அந்தப் பெயரால்தான் கூப்பிடுகிறது வழக்கம். அவனுடைய ஒழுங்கான பெயர் என்னவென்பதை அவனிடம்தான் கேட்கவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பதையாவது சொல்லலாமா?

வக்கீல்:—அதை நான் ஜோசியத்தின்மேல்தான் சொல்லவேண்டும். எனக்கு ஜோசியத்தில் அவ்வளவு பரிச்சயம் இல்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படியானல், அவர் இப்போது இங்கே இல்லையா?

வக்கீல்:—இதுதான் அசட்டுக்கேள்வி. அவன் இங்கே இருந்தால், எனக்கு ஜோசியம் தெரியாததைப்பற்றி நான் வருத்தப்படவேணு?

ஸப்-இன்ஸ்பெக்டர்:— (வியப்போடு நகைத்துக் கொண்டு) நீங்கள் உங்கள் மைத்துனரைக் கடைசியாக எப்போது பார்த்தீர்கள்?

வக்கீல்:—நினைவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நான்கு தினங்களுக்கு முன் அவரை நீங்கள் பார்க்கவில்லையா?

வக்கீல்:—நினைவில்லையென்றால், நான் அவனை நேற்று பார்த்திருந்தால்கூட, அதுவும் நினைவிற்கு வரவில்லையென்பதுதானே அர்த்தம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—(வியப்போடு) அவ்வளவு நெருக்கமான பந்துவை நேற்று பார்த்தால், அது இதற்குள் மறதியாய்விடுமா! இதை யாராவது உண்மையென்று நம்புவார்களா?

வக்கீல் :— அப்படியானால் நான் புளுகன் என்று நீங்கள் சொல்லுகிறீர்களா? புளுகும் இலாகா போலீஸாருக்கே ஏகபோகமாய்ச் சொந்தமானது. அதில் மற்றவருக்குப் பங்கேது?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—(தமது வியப்பை அடக்கமாட்டாமல் கலகலவென்று நகைத்து) ஏதோ காரணத்தை முன்னிட்டு நம்மிடம் ஒரு விஷயத்தைக் கேட்க இவ்வளவு தூரம் வந்திருக்கிறாரே என்று நீங்கள் சிநேகபாவத்தோடு மறுமொழி சொன்னால் நான் வந்த காரியம் இந்நேரம் முடிந்துபோயிருக்கும். நான் கேட்பதற்கு சரியான பதில் கொடுக்கக் கூடாதென்று நீங்கள் தீர்மானித்துக்கொண்டால், நான் உங்களைப் பேச்சில் வெல்ல முடியுமா?

வக்கீல் :—நான் சிநேகபாவமாய் உங்களை நடத்துவதால்தான், இந்நேரம் உங்களோடு வீண்பொழுது போக்கிக்கொண்டிருக்கிறேன். விரோத பாவமாயிருந்தால் இந்நேரம் உங்களை வெளியில் அனுப்பி இருப்பேன். நானும் தூங்கிக்கொண் டிருப்பேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—சரி; உங்களுடைய தூக்கத்திற்கு நான் இனியும் இடையூறாய் நிற்க விரும்பவில்லை. இதோ இருக்கும் இந்தப் படத்தைப் பாருங்கள். இது யாருடையது என்று நீங்கள் சொல்லுங்கள்.

வக்கீல் :—(படத்தை வாங்கிப் பார்த்து) பார்த்தேன். இது யாருடையதென்பதை இப்போது நிச்சயிக்க என்னால் முடியவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இது உங்களுடைய மைத்துனருடைய படமல்லவா?

வக்கீல் :—அப்படி யார் சொல்லுகிறார்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நான்தான் சொல்லுகிறேன்.

வக்கீல் :—எதனால் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லுகிறீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அவரை வைத்து நாங்கள் இந்தப் படத்தைப் பிடித்தோம்.

வக்கீல் :—எப்போது பிடித்தீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—போன வருஷம் பிடித்தோம்.

வக்கீல் :— அப்படி இருந்தால், இப்போது உங்களுக்கு சந்தேகம் உண்டாகவேண்டிய காரணமென்ன ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்போது இந்த மனிதர் தம்முடைய பெயரைச் சொல்ல மறுத்துவிட்டார். இப்போது இவர் உங்களுடைய மைத்துனரான ராமனுதையர் என்று தெரிந்துகொண்டோம்.

வக்கீல் :—போலீஸாருடைய வேலை மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் எப்போதும் முடிபோடுவது. ஒரு மனிதருடைய வடிவத்தை ஒரு வருஷத்திற்கு முன் போட்டோப் பிடித்தால், இந்த ஒரு வருஷத்தில் அவருடைய வடிவம் நிரம்பவும் மாறுபட்டிருக்கும். என் மைத்துனருடைய இப்போதைய வடிவத்தின் படத்தை நீங்கள் கொணர்ந்தால், அது அவனைப்போல் இருக்கிறதா இல்லையா என்று நான் சொல்லலாம். போனவருஷத்தில் இதை எடுத்தே னென்கிறீர்கள்; போன வருஷம் முடிய நான் என் மைத்துனனைப் பார்க்கவில்லை. அவன் வளருகிற பிராயத்தான். போன வருஷம் அவனுடைய வடிவம் எப்படி இருந்ததென்பது எனக்குத் தெரியாது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இந்தப் படத்திற்கும், அவருடைய இப்போதைய வடிவத்திற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா என்பதையாவது பார்த்துச் சொல்லலாமல்லவா?

வக்கீல் :—அவசியம் சொல்லலாம். ஆனால் இது இரவுவேளை. என் கண்களில் சில தினங்களாய் ஒருவிதமான கோளாறு ஏற்பட்டிருக்கிறது. நான் எதையாவது உற்றுப்பார்த்தால், உடனே கண்களில் ஜலம் வந்து மறைத்துவிடும். ஆகையால் நான் அந்தப்படத்தைப் பார்த்துச் சொல்ல, இப்போது சந்தர்ப்பம் சரியாயில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நீங்கள் பதில் சொல்லும் புத்திசாலித்தனத்தைக் கண்டு நான் உண்மையில் சந்தோஷ மடைகிறேனுனும், நீங்கள் இந்த அற்ப விஷயத்தை இவ்வளவுதூரம் பாடுபட்டு மறைக்க முயலுவது கடைசிவரையில் செல்லப்போகிறதா என்பதுதான் எனக்கு சம்சயமாயிருக்கிறது. அநாவசியமாய் நீங்கள் அபாயத்தில் மாட்டிக்கொள்ளப் போகிறீர்களே என்றுதான் நான் கவலைப்படுகிறேன். இந்தப் படத்திலிருப்பவர் உங்களுடைய மைத்துனர் என்பதைத் தெரிந்துகொண்டும், நீங்கள் உண்மையை ஒப்புக்கொள்ள மாட்டேனென்கிறீர்கள்.

வக்கீல் :—இதைத்தான் போலீஸாருடைய திமிர் என்பது. யாரோ ஒரு கே. டி.யின் படத்தைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டு, அதிலிருப்பவர் என் மைத்துனரா என்று கேட்பதால் உங்களுக்குத்தான் அபாயம் நேரப்போகிறது. நான் பொல்லாத கோபக்காரன். என் மைத்துனன் எனக்குமேல் அதிகமான துர்வாசமுனி. அவனைப்பற்றி நீங்கள் இப்படியெல்லாம் பொய்யான தகவல்களைச் சொல்லிக்கொண்டு திரிந்தால், அவன் உயிர்போவதைக் கூடப் பார்க்கமாட்டான். கத்தி கித்தி ஏதாவது இருந்தால் எடுத்து உங்களைக் குத்திப்போட்டு விடுவான். நானும் சும்மா இருக்கமாட்டேன். பதினாயிரம் இருபதினாயிரத்துக்கு அவதூறுக் குற்றத்திற்கு உங்கள்மேல் நாளைக்கே பிராது கொடுத்துவிடுவேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படியானால் உங்களுக்கு இந்தப் படத்திலுள்ள நபரைத் தெரியவே தெரியாது?

வக்கீல் :—இந்த மாதிரியெல்லாம் எனக்கெதிரிலிருந்து பேசிக் கொண்டிருந்தால, நிச்சயமாய் எனக்குக் கோபம் வந்துவிடும். இந்தப் ப..த்தின் வடிவத்தைப் பார்க்க என் கண்கள் சரியான நிலைமையில் இல்லை என்று சொல்லுகிறேன். மறுபடியும் விவேகமில்லாமல் கேள்வி கேட்கிறீர்களே. நீங்கள் இனி கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் சொல்லத் தயாராய் இல்லை. நீங்கள் போகலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— ஓகோ ! இந்தப் படத்தைப்பற்றிப் பேசினால் உங்களுக்கு என்மேல் கோபம் வரும்போ லிருக்கிறதா! அப்படியானால் பேசவில்லை. நீங்கள் உங்கள் மைத்துனரோடு சில தினங்களாய் இரவில் சங்கரையருடைய ஓட்டலுக்கு வருகிறதாகச் சொன்னார்களே!

வக்கீல் :—எனக்கும் என் மைத்துனனுக்கும் எங்கள் வீட்டில் சாப்பாடில்லையா. சற்றுமுன் உங்களுக்கு மறுமொழி கொடுத்தவன் என் சமயல்காரன் ஐயா! இவன் எட்டூருக்கு சமயல் செய்வானே! நானாவது, என் மைத்துனனாவது ஓட்டல் சாப்பாட்டுக்குப் போக வேண்டிய நிலைமை இதுவரையில் ஏற்பட்டதுமில்லை; இனியும் ஏற்படாது. இந்தப் புளுகு மூட்டையை உங்களிடம் அவிழ்த்தது யார்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ஓட்டல்கார சங்கரையரே நேரில் சொன்னார். அது எப்படிப் புளுகு மூட்டையா யிருக்க முடியும். உங்களைப்பற்றி அவர் ஏன் பொய் சொல்லுகிறார்?

வக்கீல் :—அவர் என் விஷயத்திலும் பொய் சொல்லமாட்டார்; மற்ற எவர் விஷயத்திலும் பொய் சொல்ல மாட்டார். ஆனால் அவருக்கு வயது சுமார் 70 ஆகிவிட்டது. அவருக்குப் பட்டப்பகலில் பசுமாடு தெரியவில்லை. இரவில் அவருடைய கண்ணின் திறமையைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வேறு யாரையாகிலும் பார்த்து தப்பாக இப்படிச் சொல்லியிருக்கலாம். அதற்காக நானும் பொய் சொல்லுகிறதா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—சரி; அவருக்கும் கண்கள் சரியாயில்லை. உங்களுக்கும் கண்களில் கோளாறு. இரண்டும் அப்படியே இருப்பதாக வைத்துக்கொள்வோம். தயவுசெய்து உங்கள் சம்சாரத்தை அழையுங்கள். அவர்களிடம் இந்தப் படத்தைக் காட்டுவோம். அவர்களுக்கு இந்தப் படத்திலுள்ளவர் இன்னார் என்று தெரிகிறதாவென்று கேட்டுப்பார்க்கலாம்.

வக்கீல் :—என்ன லெப்பையாரே! இது, கொஞ்சம் இடம் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குகிற சங்கதியாயிருக்கிறதே! முதலில் என்னிடம் ஏதோ விஷயத்தைக் கேட்கவேண்டுமென்றீர்கள். இப்போது என் சம்சாரத்தைக் கூப்பிடச் சொல்லுகிறீர்கள். அதற்குமேல் இன்னும் யாரைக் கூப்பிடச் சொல்லுவீர்களோ தெரியவில்லை. அன்னிய புருஷர் எவரேனும் உங்கள் வீட்டிற்கு வந்து, உங்களுடைய சம்சாரத்தோடு பேச வேண்டுமென்றால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள் என்பதை யோசிக்கவில்லையே? 'அத்தரி மாக்பலாச்சுலே; கோஷாவோடு நீ பேசுவதா! ஆகா உனக்கு அவ்வளவு தைரியமா!" என்று சொல்லி அவரை நன்றாகப் புடைத்தனுப்புவீர்கள். எங்கள் வீட்டு ஸ்திரீகள்மாத்திரம் உங்களுக்கு இளப்பமாகிவிட்டார்களா! என் சம்சாரத்தை நான் இப்போது கூப்பிட முடியாது. கூப்பிட்டாலும், அவள் வர இயலாது. ஏனென்றால், அவள் போஜனம் செய்துகொண்டிருப்பாள். நீங்கள் என்னிடம் கேள்வி கேட்டது போதும். இதோடு உங்கள் கோர்ட்டை மூடுங்கள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இவ்வளவுதூரம் பொறுமை வகித்து எனக்கு விடைகள் கொடுத்த நீங்கள் இப்படிச் சொல்வது சரியல்ல. எங்கள் வீட்டு கோஷா சம்பந்தமாய் நீங்கள் சொல்வது நிஜமான விஷயந்தான். ஆனால், உங்கள் ஸ்திரீகள் கோஷா முறையை அவ்வளவாக அநுஷ்டிக்கிறவர்கள் அல்ல. அவர்கள் சாதாரணமாய் அன்னிய புருஷர்களோடு பேசாமல் வீட்டிற்குள் மறைவாக இருந்

தாலும், அவசியமான சந்தர்ப்பங்களில் அவர்கள் மறைவிலிருந்த படி அன்னியருடன் பேசுவது வழக்கமில்லையா? அன்றையதினம் இங்கே ஒரு ஸப்-இன்ஸ்பெக்டர் கொல்லப்பட்டதற்குப் பிறகு நானும் மற்றவர்களும் வந்திருந்தோம். அப்போது உங்கள் சம்சாரந்தான் எங்களுக்கு உத்தரம் கொடுத்தார்கள். அதனாலேதான் நான் இப்போது துணிந்து சொன்னேன். அந்த அம்மாள் எனக்கு எதிரில் வரவேண்டாம். மறைவில் இருந்தபடியே அந்த அம்மாள் இந்தப் படத்தைப் பார்க்கட்டும். பார்த்து என்ன சொல்லுகிறார்களோ அதைக் கேட்டுக்கொண்டு நான் உடனே போய் விடுகிறேன்.

வக்கீல்:—அன்றையதினம் நீங்கள் எல்லோரும் சுயேச்சையாய் எங்கள் வீட்டிற்குள் நுழைந்துவிட்டீர்கள். அவள் உங்களைக் கண்டித்து வெளியில் அனுப்பி இருப்பாள். அதனால், நீங்கள் வரும்போதெல்லாம், என் சம்சாரம் உங்களோடு பேசவேண்டுமென்று நீங்கள் உரிமை கொண்டாடலாமோ. அதற்கு நான் இடங்கொடுக்கமாட்டேன். அதுவுமன்றி அவள் இப்போது போஜனம் செய்துகொண்டிருக்கிறாள்—என்றார்.

ஆனால் அம்மணியம்மாள் உண்மையில் அப்போது போஜனம் செய்துகொண்டிருக்கவில்லை. போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பை வந்திருக்கிறார் என்று ராமன் உள்ளே இருந்த வக்கீலிடம் கூறியகாலத்தில் அம்மணியம்மாளும் பக்கத்தில் இருந்தாளாதலால், அவளும் திகைப்பும் மனக்கலக்கமும் அடைந்தவளாய், வக்கீலுக்குப் பின்னாகவே வந்து, தாழ்வாரத்தின் மறைவில் நின்று அவர் எதற்காக வந்தார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவலோடு ஓசை செய்யாமல் இருந்தாள். அதே போல ராமனும் வந்து ஒரு கம்பத்தின் மறைவில் நின்றான். ஆனால், அவ்வாறு அவர்கள் வந்து மறைந்து நின்றதை வக்கீல் பார்க்கவில்லை. அவர் போஜனம் செய்தவுடன் அம்மணியம்மாளும் சாப்பாட்டிற்கு உட்காருவது வழக்கமாதலால், அதுபோலவே அவள் உட்கார்ந்துகொண்டிருப்பாளென்று நினைத்தார். அதுவன்றி, அந்தப்படத்தைத் தம் மனையாள் பார்க்காதபடி தடுத்து ஸப்-இன்ஸ்பெக்டரை அனுப்பிவிட வேண்டுமென்பது அவருடைய முக்கியமான எண்ணம். ஆகவே அவர் தமது சாமர்த்தியம் முழுதையும் காட்டி சம்பாஷித்துக்கொண்டிருந்தார்.

ஆனல் அம்மணியம்மாளும், ராமனும், வக்கீலுக்கும், ஸப்-இன்ஸ்பெக்டருக்கும் நடந்த சம்பாஷணையை முதலிலிருந்து நன்ருகக் கேட்டுக்கொண்டிருந்தனர். அம்மணியம்மாள் தனது தம்பி ஒரு வருஷகாலமாய்க் காணுமல் போனதுபற்றி நிரம்பவும் சஞ்சலமடைந்து, தவித்திருந்தாளென்பதை நாம் முன்னரே விவரித்திருக்கிறேம். ஆகவே, தனது தம்பியைப்பற்றி ஸப்-இன்ஸ்பெக்டர் கூறிய வரலாற்றைக் கேட்கவே, அவளுடைய அங்கம் பதற, உயிர் தள்ளாடியது. நாகூர் மீரா லெப்பை காட்டிய படத்தை வக்கீல் பார்க்காமல் தந்திரமாகப் பேசியது அவளுடைய சந்தேகங்களைப் பலப்படுத்தியது. அதுவன்றி, கொலை நடந்த தினத்தன்று சிறையிலிருந்து விடுபட்டுவந்த மனிதனுடன் வக்கீல் பேசியதாக சுப்பையா கூறிய வரலாறும், அவர் யாரோ ஒரு நண்பருக்கு அபாயம் வந்துவிட்டதென்று ஒட்டியாணத்தை வாங்கிக்கொண்டு போனதும், இன்னம் அநேக விஷயங்களும் ஒன்றுகூடி, தன் தம்பிக்கு ஏதோ பெரிய அவகேடு நேர்ந்திருக்கிறதென்றும், தன் புருஷர் அதைத்தெரிந்துகொண்டே தன்னிடம சொல்லாமல் மறைத்து வைத்துக்கொண்டிருக்கிருர் என்றும அவள் நிச்சயமாக உணர்ந்தாள். எனவே அந்தப் படத்தை வாங்கிப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அவளுடைய மனதில் எழுந்து தடுக்கமுடியாதபடி உரமாகப் பெருகிப் போயிற்று.

ஆனலும், தன் புருஷர் தான் போஜனம் செய்துகொண்டிருப்பதாக உறுதியாய்ச் சொல்லிக்கொண்டிருக்கையில் தான் அவரைப் பொய்யராக்கக் கூடாதென்று நினைத்து கடைசிவரையில் தன்னை அடக்கிக்கொண்டிருந்தாள். ஆனல், ஸப்-இன்ஸ்பெக்டர் சம்பாஷணையை முடித்துக்கொண்டு போய்விடக்கூடிய நிலைமை ஏற்படவே, அதற்குமேல் தான் சும்மா நிற்பது சரியல்லவென்று நினைத்து, மெல்ல வெளிப்பட்டு, போஜனத்தை முடித்துக்கொண்டு அப்போதே வந்தவள்போல் நடித்து, "இன்னுமா ஸப்-இன்ஸ்பெக்டருடன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? இந்த ஊர்ப் போலீஸார் இந்த ஒரு வீட்டுக்காகவே நியமிக்கப்பட்டிருக்கிருர்களா! இவர்களுக்கு வேறே வேலையில்லையா! ஏதோ படத்தை எனக்குக் காட்டச் சொல்லுகிருரே! அது என்ன படம் ராமா! அதை இப்படி வாங்கடா. நான் பார்க்கட்டும்" என்ருள்.

அந்த அசந்தர்ப்ப வேளையில் தமது மனையாள் வருவா ளென்று வக்கீல் எதிர்பார்க்கவே இல்லையாதலால், திடீரென்று அவள் பேசியது பெரிய இடி விழுந்ததுபோ லாய்விட்டது. அவள் அந்தப் படத்தைப் பார்த்தால், அது தன் தம்பியின் படமென்ப தைக் கண்டுகொள்வா ளாதலால், தன் தம்பிக்கு நேர்ந்த அலகேட் டைப்பற்றி அவள் அபாரமான விசனமும் அவமானமும் அடைவ தன்றி, ஒரு வருஷகாலமாய் அவனைப்பற்றித் தமக்கு எவ்விதமான தகவலும் தெரியாதென்று தாம் கூறிநடித்ததெல்லாம் பொய்யென்று கண்டுகொள்வாளாதலால்தமதுநிலைமை சங்கடமானதாகிவிடுமென்று நினைத்தவராய்த் தமது மனையாள் அந்தப் படத்தைப் பார்க்காமல் செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, தம் மனையா ளைப் பார்த்துக் கோபமாகப் பேசத்தொடங்கி, "போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டருக்கு பேச்சுச் துணைக்கு ஸ்டேஷனில் யாரும் சிநே கிதர்கள் இல்லையாம். அதற்காக இங்கே வந்து என்னோடு பேசிக் கொண்டிருக்கிறார். நீ சாப்பிட்டதும் சாப்பிடாததுமாய் ஏன் ஓடி வந்தாய்? நீ போய் உன் காரியங்களை கவனி" என்று அதட்ட லாகக் கூறினார்.

அதுவே சமயமென்று கண்ட ஸப்-இன்ஸ்பெக்டர், "அம்மா, நீங்கள் வந்தது வந்தீர்கள்; இந்தப் படத்தில் இருப்பவர் உங்கள் தம்பியா என்று பார்த்துச் சொல்லிவிடுங்கள். அதற்குமேல் நீங்கள் உங்கள் காரியத்தைப் பார்க்கலாம்" என்றார்.

அதைக் கேட்ட வக்கீலுக்கு ரௌத்திராகாரமான கோபம் பொங்கியது. ஸப்-இன்ஸ்பெக்டரைத் தாம் கொன்றுபோட்டு விடலாமா என்னும் ஆவேச உணர்ச்சி பெருகியது. ஆயினும் அவர் தாம் என்ன செய்வதென்பதை நிச்சயிக்க மாட்டாமல் ஒரு விநாடிகாலம் சிந்தனையிலாழ்ந்திருந்தார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் கூறியதைக் கேட்ட அம்மணியம்மாள் "ஆ! என் தம்பியின் படமா! அது உங்களிடம் எப்படி வந்தது! அடே ராமா அதை வாங்கு. பார்க்கலாம்" என்றார்.

ராமன், தான் அதை வாங்கலாமா கூடாதா என்பதை நிச்ச யிக்க மாட்டாதவனாய் வக்கீலின் முகத்தையும், அம்மணியம்மாளின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி விழித்துக்கொண்டு தயங் கித் தயங்கி நின்றான். அப்போது ஸப்-இன்ஸ்பெக்டர், "ராமய்

யரே, இதை அம்மாளிடம் கொடும். பார்க்கட்டும்" என்று கூறித் தமது கையில் இருந்த படத்தை இரண்டாவது கதவிற்கப்பால் எறிந்தார்.

அந்த ஸப் - இன்ஸ்பெக்டருடைய குடலைப் பிடுங்கிவிட வேண்டுமென்ற எண்ணம் வக்கீலுக்கு உண்டானதானாலும், அரும் பாடுபட்டுத் தமது கோபாவேசத்தை அடக்கிக்கொண்டார். அந்தப் படத்தைத் தமது மனைவி பார்க்காமல் செய்துவிட வேண்டுமென்று கடைசிவரையில் அவர் செய்த தந்திரம் பலிக்காமல் போகவே, அதற்குமேல் தாம் நின்றால், தமது மனைவிக்கும் தமக்கும் ஏதேனும் விகாரமான சம்பாஷணை ஏற்பட்டுவிடப் போகிறதே என்றும் தாம் உள்ளே போய்விடலாமா வென்றும் நினைத்தாரானாலும், அப்படித் தாம் போவது சரியல்லவென்று நினைத்து, தம் மனையாளிடம், நயமாகப் பேசத்தொடங்கி, "இந்தப் படத்தைப் பார்த்து நீ ஏமாறிப் போகாதே! உன் தம்பியின்மேல் அபாண்டப்பழி சுமத்துவதற்காக இவர்கள் ஏதோ வஞ்சகச் சூழ்ச்சி செய்கிறார்கள்; உன்னுடைய தம்பியின் படத்தைப்போலிருக்கும் யாருடைய படத்தையோ எங்கிருந்தோ சம்பாதித்து வைத்துக்கொண்டு ஆட்டம் போடுகிறார்கள். நீ வாயைத் திறக்காதே! படத்தைப் பார்த்துவிட்டுக் கொடுத்துவிடு. நான் இதன் மர்மத்தை அப்புறம் சொல்லுகிறேன்" என்று கூறினர்.

அதைக் கேட்ட ஸப்-இன்ஸ்பெக்டர் வியப்போடு நகைத்து, "நாங்கள் உங்கள் தம்பியின்மேல் அபாண்டப்பழி சுமத்துகிறவர்களாயிருந்தால், 'இது இந்த அம்மாளுடைய தம்பியின் படந்தானா?' என்று உங்களிடம் உண்மையைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இவ்வளவு தூரம் உங்களிடம் தொண்ணூர்ந்து நிற்போமா? உடன்பிறந்தானுக்கு அவமானம் வந்துவிட்டதை நீங்கள் தெரிந்துகொண்டால் உங்கள் மனதும் புண்படுமென்ற நல்ல எண்ணத்தினால், வக்கீல் ஐயர் விஷயத்தை உங்களிடம் மறைத்துப் பேசுகிறார். அவ்வளவே தவிர வேறில்லை" என்றார்.

அவரால் உள்புறத்தில் எறியப்பட்ட படத்தை அதற்குள் அம்மணியம்மாள் எடுத்துக்கொண்டாளாதலால், உடனே விசையாகப் பாய்ந்து தாழ்வாரத்தில் இருந்த ஒரு மின்சார விளக்கைக்

கொளுத்திவிட்டு, அதன் வெளிச்சத்தில் தனது பார்வையை மிக ஆவலோடு அந்த வடிவத்தின்மீது செலுத்தினுள்.

செலுத்தவே, அது தன் தம்பியின் படமென்பது உடனே நிச்சயப்பட்டுவிட்டது. ஒரு வருஷகாலமாய் அவன் எங்கேபோனுன், என்ன நிலைமையிலிருக்கிறுன் என்பதை அறியமாட்டாமல் தவித்திருந்த அம்மணியம்மாளுக்கு தன் தம்பியின் வடிவத்தைக்கண்டது அபாரமான சந்தோஷத்தை உண்டாக்கியதானுலும், அந்த சந்தோஷம் கிஞ்சித் போகமாய் ஒரே நிமிஷத்தில் மறைந்துபோயிற்று. கொலை நடந்த தினத்தன்று மாலையில்கூட, தான் தனது தம்பியின் ஊருக்குப் போய் அவனைத் தேடிவிட்டு வரவேண்டுமென்று சொன்ன காலத்திலும் வக்கீல் எதையும் அறியாதவர்போல் காட்டிக்கொண்டதும், ஆனுல் உண்மையில் அவர் தன் தம்பியைப்பற்றிய பல இரகஸியங்களைத் தெரிந்துகொண்டிருந்ததும், அவன் தங்களுடைய வீட்டிற்கு வராமல் அந்த ஊரிலேயே இருந்ததும் அம்மணியம்மாளுக்கு நம்பிக்கைப்படாத புதுமைகளாயிருந்தனவாகையால், அவள் வாயைத் திறந்து பேசமாட்டாமல் ஸ்தம்பித்து அச்சத்தினுல் நடுங்கி நின்றுள்.

அதுவன்றி அம்மணியம்மாளுடைய மனதில் இன்னெரு பெரிய பீதியும் எழத் தொடங்கியது. தன் தம்பி அந்த ஊரில் தப்பான காரியத்தைச் செய்து தண்டனை யடைந்திருந்ததைப்பற்றியே தன் புருஷர் சுமார் ஒரு வருஷகாலமாய் மிக விசனகரமான தோற்றத்தோடிருந்து, தமது தொழிலை அசட்டை செய்து வந்திருக்கிறுர் என்று அப்போது விளங்கத் தொடங்கியதாகையால், அதைப்பற்றி அவர் தன்னையும் விஷம்போல் வெறுத்துப் புறக்கணிப்பாரோ என்ற பீதியும் தலையெடுத்தது.

எனவே, வக்கீல் அம்மணியம்மாள் தம்மீது கோபம் கொள்வாளோவென்று அஞ்சி, விஷயம் எதுவும் அவளுக்குத் தெரியாதபடி தடுத்தார். அம்மணியம்மாள் தன் தம்பியின் துர்நடத்தையைப்பற்றி, அவர் தன்னை எவ்விதம் நடத்துவாரோ என்று அஞ்சி நடுங்கினுள். ஆயினும், தன் புருஷர் தன் தம்பியைப்பற்றிய வரலாற்றைத் தன்னிடம் சொல்ல விரும்பவில்லையென்பது நிதரிசனமாகத் தெரிந்ததாகையால், தான் அதை ஸப்-இன்ஸ்பெக்டரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருதி, “ராமா, இத் தப்படம் போலீஸாரிடம் எப்படி வந்ததென்று கேள்” என்றுள்.

அவள் கேட்டது ஸப்-இன்ஸ்பெக்டருடைய செவிகளில் நன்றாய்ப் படக்கூடியதா யிருந்ததாகையால், ராமன் தன் வாயைத் திறக்காமல் மூவருடைய முகத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றான்.

அந்த நிலைமை வக்கீலின் மனதிற்குப் பரமவேதனையாயிருந்த தாகையால், "ராமா, நீ மேலே போய்ப் படுக்கையைப் போட்டு விட்டு, உன் காரியங்களைக் கவனி. போ. நீ இங்கே நிற்காதே. இந்த ஸப்-இன்ஸ்பெக்டருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது; ஏதேதோ உளறுகிறார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டு நீ நின்றால் உனக்கும் பைத்தியம் பிடித்துப்போகும். போ, போ" என்று வற்புறுத்தி உத்தரவிட, அவன், "நான் இதோ போய்விட்டேன்" என்று அடக்கமாக மறுமொழி கொடுத்தபடி, மேன்மாடத்திற்குப் போய்விட்டான்.

அப்போது ஸப்-இன்ஸ்பெக்டர், அம்மணியம்மாள் கேட்டதற்கு மறுமொழியாக, "எங்களிடம் எப்படி இந்தப் படம் வந்த தென்பதை நான் சொல்லுகிறேன். இது யாருடைய படம் என்பது உங்களுக்குத் தெரிகிறதா?" என்றார்.

வக்கீல்:—(இடைமறித்து) உலகத்தில் ஒருவரைப்போல இன்னொருவர் இருக்கிறதில்லையா! சொற்ப வித்தியாசத்தைக்கொண்டு, மனிதருடைய வேறுபாட்டைக் கண்டுபிடிக்க வேண்டும். இரவில் பார்த்தால், எதுவும் நிச்சயப்படாது. அடி, நீ அவசரப்படாதே. நாளையதினம் பகலில், இதை நீயும் நானும் நன்றாய்ப் பார்த்துச் சொல்லலாம்.

அம்மணியம்மாள்:—அப்படியேதான் செய்வோமே! இப்போது அவசரமொன்றுமில்லை. ஆனால், இந்த வெளிச்சத்தில் பார்க்கையில், இது நம்முடைய ராமநாதன்போலவே இருக்கிறது. நாம் நெருங்கிய சொந்தக்காரர். நம்மிடம் இவனுடைய படம் ஒன்றுகூட இல்லை. போலீஸாருக்கு இது எப்படியோ கிடைத்திருக்கிறதே!

வக்கீல்:—நான் சொல்வதை நீ காதில் வாங்காமல் பேசுகிறாயே! இது நம்முடைய சொந்தக்காரர் எவருடைய படமும் அல்லவென்கிறேன். நீ எக்கச்செக்கமாய் எதையோ உளறி வைக்கிறாயே! நீ உள்ளே போக மாட்டாயா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—கொஞ்ச நேரத்துக்கு முன் இந்தப் படத்தைப் பார்க்கும்படி சொன்னதற்கு, கண்ணில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருப்பதாகவும், எதையாவது உற்றுப் பார்த்தால் கண்களில் ஜலம் வழிந்து மறைக்கிறதென்றும் சொன்னீர்கள். இப்போது இந்தப் படம் உங்கள் சொந்தக்காரர் எவருடைய படமும் இல்லை என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறீர்கள். ஏனம்மா! ராமனாதன் என்றீர்களே அவர் யார்?

அம்மணியம்மாள் :—அவன் என் தம்பி. இது அவனைப் போலவே இருக்கிறது. உண்மையாய் இது அவனுடையதோ இல்லையோ! இது உங்களுக்கு எப்படிக் கிடைத்தது? என் தம்பி இப்போது எங்கே இருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமோ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—சுமார் அரைமணிக்கு முன் பாலக் காட்டு சங்கரையருடைய ஓட்டலிலிருந்து அவர் வெளியில் போனபோது பார்த்தேன்.

வக்கீல் :—பார்த்தது உண்மையா யிருக்கும் பட்சத்தில், அப் போதே அங்கேயே அவனைப் பிடித்துக்கொள்ளலாமே!

அம்மணியம்மாள் :—(கோபத்தோடு) எதற்காக என் தம்பி யைப் போலீஸார் பிடித்துக்கொள்ளுகிறது? அவன் யார் தலையில் கல்லைப் போட்டான்!

வக்கீல் :— (அதே கோபஸ்தாயியில்) இந்த ஊர்ப் போலீஸார் தலையில் அவன் கல்லைப் போட்டானே என்னவோ?

ஸப்-இன்ஸ்கபக்டர்:—அவர் எங்கள் தலையில் கல் போடவில்லை. இந்த ஊர் ஜில்லா ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையின் தலையில் கல்லைப் போட்டார்.

அம்மணியம்மாள்:—(ஆத்திரத்தோடு) எப்போது போட்டான்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஒரு தடவை போடவில்லை ; இரண்டு தடவைகளில் போட்டார்.

வக்கீல் :—அந்த ஜட்ஜ் இரண்டு கல்களுக்கும் சாகாமல் இன்ன மும் உயிரோ டிருக்கிறாரா?

அம்மணியம்மாள் :—ஒரு ஜில்லா ஜட்ஜ் எத்தனையோ காவல் களோடு இருப்பாரே! அவருடைய தலையில் ஒருவன் கல்லைப்போடுவ தென்பது சுலபமான காரியமா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—தலையில் கல்லைப் போட்டா ரென்று உவமானத்திற்குச் சொன்னேன். இந்தப் படத்திலிருப்பவர் சுமார் ஒரு வருஷகாலத்திற்கு முன் ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையின் பங்களா வில் புகுந்து ஏராளமான சொத்துகளைக் கொள்ளை யடித்தார்.

அம்மணியம்மாள் :—(திடுக்கிட்டு வியப்போடு) ஆ! அப்படியா! இது நிஜமா? இந்தப் படத்தில் இருப்பது என் தம்பியா! அவன் நல்ல யோக்கிய னல்லவா! அவன் அந்தமாதிரி யெல்லாம் செய்ய மாட்டானே!

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அதற்காக அவர் ஒரு வருஷகாலத் திற்கு தண்டனை யடைந்தார். அவரை சிறைச்சாலைக்கு அனுப்பிய போது இந்தப் படத்தை நாங்கள் பிடித்தோம்.

அம்மணியம்மாள் :—அப்படியானால் இந்தப் படம் என் தம்பியி னுடையதா யிருக்காது! அவனைப்போ லிருக்கும் வேறு எவனுடைய படமோ இது!

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அதை நிச்சயமாய்த் தெரிந்து கொள் வதற்காகத்தான் நான் இப்போது இங்கே வந்தேன்.

அம்மணியம்மாள் :—நிச்சயமாய் என் தம்பி திருட்டில் சம்பந் தப் பட்டிருக்க மாட்டான். சிறைவாச தண்டனை அடைந்தவன் வேறே யாரோ தெரியவில்லை.

வக்கீல் :—அதைத்தான் நான் ஒரு நாழிகையாய் என் தொண்டையைக் கிழித்துக்கொண்டு கேட்கிறேன். இவர் அட்டை மாதிரி பிடித்த பிடியை விடமாட்டே னென்கிறார்.

அம்மணியம்மாள் :—அதுதான் ஒருகல். இன்னொரு கல் எது?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இந்த மனிதருடைய விசாரணை நடந்த காலத்தில், இவர் தம்முடைய பெயர் விலாசம் முதலியவைகளைச் சொல்ல மறுத்துவிட்டார். அதுவுமல்லாமல் தாம் ஒரு வருஷம் கழித்து வெளியில் வந்தவுடன் மறுபடியும் அந்த ஜட்ஜியின் வீட்டை சூரை விட்டுவிடுவதாகவும் பகிரங்கமாய்ச் சொல்லி பயமுறுத்திவிட்டுப் போனார். அதேபோல, இன்று சாயங்காலம் அந்த ஜட்ஜியின் வீட்டிற்குள் இவர் ஒரு கோஷாப் பெண்பிள்ளை யின் வேஷத்தில் நுழைந்து, ஜட்ஜிக்கு ஒரு தட்டில் பழங்களை வைத் துக் கொண்டு போய் மரியாதை செய்பவர்போல் நடித்து, மயக்க முண்டாக்கும் திராவகத்தை மூக்கில் பீய்ச்சவே, கொஞ்ச நேரத்

தில் ஜட்ஜ மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். உடனே இவர் அந்த ஜட்ஜியை, ஒரு கம்பத்தில் தலைகீழாய்க் கட்டிவிட்டு, எதிரிலிருந்த சாமான்களையெல்லாம் தாறுமாறாய் சிதற அடித்துவிட்டு, அலமாரியில் இருந்த அவருடைய கைப் பெட்டியை மறுசாவியால் திறந்து, அதற்குள் அவர் வைத்திருந்த 1000 ரூ. நோட்டுகளையும் சில கடி தங்களையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். இதுதான் இந்தப் படத்திலிருப்பவர் ஜட்ஜியின் தலையில் போட்ட இரண்டாவது கல்— என்றார்.

அதைக் கேட்கவே வக்கீலும் அவருடைய மனையாளும் பிரமித்துப் போய் ஒரு நிமிஷம் வரையில் வியப்பில் ஆழ்ந்திருந்தனராயினும், வக்கீல் உடனே அலட்சியமாய்ப் பேசத் தொடங்கி, "போலீஸாருடைய காரியமே இப்படிப் பட்டதுதான்! வெள்ளைக் காக்கை பறந்ததென்றால், 'ஆம் நாங்கள்கூடப் பார்த்தோம். அதற்கு நெற்றியில் மூன்றுவது கண்கூட ஒன்று இருந்ததே' என்று சொல வதே சர்வ சாதாரணமாயிருக்கிறது" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—எதிராளியின் வாதத்தை நியாயமான வாதத்தால் மறுக்க முடியாவிட்டால், அவரை முட்டாளென்றும், பொய்யர் என்றும் சொல்லி தாறுமாறாய் வைது அதனால் ஜெயித்து விடப் பார்ப்பதற்கு, தர்க்க சாஸ்திரப்படி, விதண்டாவாதம் என்று பெயர். அதில் நீங்கள் ஒப்புயர்வற்ற நிபுணர் என்பது பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. அதைத்தவிர நீங்கள் பேசுவதில் ஸாரமான அம்சம் எதுவும் இல்லை.

வக்கீல்:—ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ஜட்ஜ கந்தசாமி பிள்ளையின் பங்களாவில் இன்று நடந்த விசித்திரமான திருட்டைப்பற்றிய விவரத்தை நான் சொன்னால், உடனே நீங்கள் போலீஸாரை முட்டாளாக்குகிறீர்களே! நான் உங்களுடைய வீட்டிற்கு வந்திருக்கிறேனென்று நினைத்து நீங்கள் இப்படி எடுப்பாய்ப் பேசுகிறீர்களா! நீங்கள் கண்ணியமான மனிதரென்றும், உங்கள் வீட்டிற்கு வருபவரை மரியாதையாக நடத்துவீர்களென்றும் நினைத்து வந்தேன். நான் அப்படி நினைத்தது தவறென்று இப்போது நினைக்கிறேன். ஒரு சம்மன் அனுப்பி உங்களையும், உங்கள் சம்சாரத்தையும் என் ஆசனத்திற்கெதிரில் நிறுத்திக்கொண்டு விசாரித்தால் நீங்கள் போலீஸாரை இப்படி இழிவாகப் பேசுவீர்களா! அங்கிருக்கும்போது உங்கள் வாயில் இப்படிப்பட்ட

சொற்கள் வந்தால், என்னைப்போல் மற்றவர் இவ்வளவு பொறுமை வகிக்கமாட்டார்கள். இந்நேரம் நீங்கள் கண்ணீர் விடும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கும். எவ்வளவுதான் ஆத்திரமிருந்தாலும், நிதானம் தவறாமல் எதிராளியிடம் நடப்பதுதான் விற்பன்னர்களுடைய லக்ஷணம்.

வக்கீல்:—ஓஹோ! நான் சொல்வதைப்பற்றி உங்களுக்கு இப்படி மூக்கின்மேல் கோபம் வருகிறதோ? அதேபோலத்தான் நீங்கள் யாரோ ஒரு கே. டி.யோடு எங்களை சம்பந்தப் படுத்தினால் எங்களுக்கும் கோபம் வரும். நம்மை ஒருவர் மரியாதையாய் நடத்த வேண்டுமானால், நாம் நாக்கை அடக்கிப் பேசவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நான் ஜட்ஜியின் வீட்டில் நடந்த திருட்டின் விவரத்தைச் சொன்னால் நாக்கை அடக்காமல் பேசின மாதிரியா?

வக்கீல்:—இல்லை ஐயா, அந்த ஜட்ஜ் வீட்டில் இன்று சாயங்காலம் திருடியவன் கோஷாவைப் போல் தன்னை மறைத்துக்கொண்டு வந்திருந்தானென்று சொன்னீர்களே! அவனுடைய வடிவம் எவருக்கும் தெரிய வழி இல்லை. அப்படியிருக்க, இந்தப் படத்தில் இருப்பவன்தான் அந்த கோஷாவுக்குள் புகுந்துகொண்டிருந்தவன் என்று நீங்கள் எப்படி யூகித்தீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இவரே ஜட்ஜியிடம் பெருமையாய்ச் சொல்லிக் கொண்டார். 'ஒரு வருஷத்திற்கு முன்னர் நிரபராதியான என்னை நீ தண்டனைக்குக் கொண்டு வந்தாயே. அப்போது நான் சொன்னதை இப்போது நிறைவேற்றுகிறேன்' என்றாராம். இவர் விடுதலையடைந்து வெளியில் வந்ததற்கு இரண்டாவது தினமே இது நடந்திருப்பதும், இவர் சொன்னதை நிச்சயப்படுத்துகிறதல்லவா. இந்த ஒரு வருஷத்தில் இவர் சிறைச்சாலையில் இருந்த காலத்தில், இந்தத் திருட்டு ஏன் நடக்கவில்லை.

வக்கீல்:—இதைததான் காகதாலிக நியாயமென்று சொல்லுவது. காக்கை உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்தது, ஆகையால் காக்கைதான் அதைப் பிய்த்துப்போட்டிருக்கவேண்டும் என்று அநுமானிப்பது எவ்வளவு தூரம் சரியானதோ அதேபோலத்தான் இருக்கிறது இந்த நியாயம். இந்த மனிதன் முன் தடவையிலேயே பிறருடைய சூழ்ச்சியால் அக்கிரமமாய் தண்டிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னான். அப்படி சூழ்ச்சி செய்தவர்கள் இவன் வெளியில் வந்த

வுடன் இப்படிச் செய்து, இவன் பெயரைச் சொல்லி திருட்டை நடத்தி, இவனை மறுபடியும் சிறைச்சாலைக்கு அனுப்ப எண்ணியிருக்கக் கூடாதா? 'காளைமாடு கன்று போட்டது என்றால், கொட்டிலில் பிடித்துக் கட்டு' என்னும் நியாயப்படிதானே நீங்கள் நடக்கிறீர்கள். இப்படி இருக்க, உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணுக்கு ஏன் கோபப்பாளம் வரவேண்டும். நீங்கள் உங்கள் கடமையை எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள். அதைப்பற்றி மற்றவர் உங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவும் முடியாது. அதைக் கேட்டு நீங்கள் திருந்துகிறவர்களு மன்று. நீங்கள் எங்களிடம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொண்டீர்க ளல்லவா? இனி நாங்கள் உள்ளே போகலாமல்லவா?—என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—சரி; நீங்கள் எதற்கும் பிடி கொடுக்க மாட்டேனென்கிறீர்கள்! தூங்குகிறவரை எழுப்பலாம். கண்களை மூடிப் பாசாங்கு செய்பவரை எழுப்ப எவராலும் ஆகாது.

வக்கீல்:—எனக்கு இப்போது உண்மையிலேயே தூக்கம் வருகிறது நான் பாசாங்கு செய்யவேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் தயவு செய்யுங்கள்—என்றார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பை அவ்விடத்தை விட்டு எழுந்து வெளியில் போய்விட்டார்.

வக்கீலும் அவருடைய பத்தினியான அம்மணியம்மாளும் ஒருவரோடொருவர் பேசாமல் மௌனமாகவே மேன்மாடத்திற்கு ஏறிச் சென்றனர். வக்கீல் தமது படுக்கையை அடைந்தார். ஆனால் அம்மணியம்மாள் அங்குமிங்கும் போய் சில பெட்டிகளைத் திறந்து ஏதோ சாமானைத் தேடத் தொடங்கினாள்.

அதைக் கண்ட வக்கீல், "என்னதைத் தேடுகிறாய்?" என்றார்.

அதற்கு எவ்வித மறுமொழியும் கூறாமல் அம்மணியம்மாள், ஓர் அலமாரியில் வைக்கப்பெற்றிருந்த வக்கீலின் ரிவால்வரைக் கையில் எடுத்துக்கொண்டு, அதற்குப் பக்கத்திலிருந்த ஓர் அறைக்குள் நுழைந்து கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டாள்.

அதன் கருத்தை ஒரே க்ஷணத்தில் யூகித் தறிந்துகொண்ட வக்கீல் திடுக்கிட்டுப் பதறிப்போய், "அடீ, அடீ, என்ன காரியம இது! கதவை மூடாதே! நில்லு நில்லு" என்று கூச்சலிட்டுக் கொண்டு ஓட, அதற்குள் கதவு உள்புறத்தில் தாளிடப்பட்டுப் போயிற்று.

வக்கீல்; "அடேய், ராமா, சீக்கிரம் ஓடி வாடா! ஒரு கடப்பாரை எடுத்துக்கொண்டு வா" என்று கத்தியபடி கதவின் பக்கத்தில் நின்று அதை தடதடவென்று தட்டி, "அடீ, கதவைத் திற; ஸப்-இன்ஸ்பெக்டர் சொன்னதெல்லாம் பொய்; அதை உண்மையென்று நம்பி நீ அவசரப்பட்டு இந்தக் காரியத்தைச் செய்யாதே" என்று கூறினர்.

அப்புறம் இருந்த அம்மணியம்மாள், "படத்தில் இருப்பவன் என் தம்பி என்பது நிச்சயம்! இவன் சிறையிலிருந்து வெளியில் வந்த தினம் மாலையில் அந்த சுப்பையா இவனைத் தொடர்ந்து வந்திருக்கிறான். இவன் நம்முடைய வாசல்வரையில் வந்தானும். இவனோடு நீங்கள் ஆற்றங்கரைக்குப் போனீர்கள்! அங்கிருந்து ஓடி வந்து ஒட்டியாணத்தை வாங்கிக்கொண்டு போனீர்கள். அதன் பிறகு என் தம்பியும், நீங்களும் ஒட்டலுக்குப் போயிருக்கிறீர்கள். இதையெல்லாம் நேருக்குநேர் கேட்டால், அவர்களை உடாய்க்கிறீர்கள். நான் விஷயத்தைத் தெரிந்துகொண்டேன். உங்களுக்கு சம்பாத்தியமில்லை. என் தம்பியை ஏவி, ஜட்ஜியின் வீட்டில் திருடச் சொன்னீர்கள். அந்தத் திருட்டுச் சொத்தில் சேர்ந்ததே அந்த ஒட்டியாணமும். அது இங்கே இருந்தால், போலீஸார் பிடித்துக் கொள்வார்களென்று அவசரமாய் வாங்கிக்கொண்டு போனீர்கள். இப்போது ஸப்-இன்ஸ்பெக்டர் என் தம்பியின் படத்தைக் காட்டினுல், கண்கள் கெட்டுப்போயிருப்பதாகப் பொய் சொல்லுகிறீர்கள்; நான் அதைப் பார்க்கக்கூடாதென்று உங்களால் ஆனவரையில் தடுத்தீர்கள். அது பலிக்கவில்லை. என் தம்பியை அநியாயமாய்க் கெடுத்த மனிதரான உங்கள் முகத்தில் இனி விழிக்க எனக்கு இஷ்டமில்லை. அவனும், நீங்களும் இன்னும் திருட்டில் இறங்கி அவமானப்படுவதையும் சகிக்க என்னுல் ஆகாது" என்றாள்.

அப்போது ராமன், "இதோ கடப்பாரை" என்றான்.

அதே காலத்தில், படேரென்று அந்த அறைக்குள் வெடி சப்தம் உண்டாயிற்று. அம்மணியம்மாள் தடாரென்று கீழே விழுந்த ஓசை கேட்டது. வீடு முழுதும் புகையும் நாற்றமும் சூழ்ந்துகொண்டன.

---

199434